முகப்பு:

மதுரை
அருள்மிகு மீனாட்சி அம்மன்
திருக்கோயில் நாற்புற கோபுரங்களின்
அழகிய தோற்றம்

# திருக்கோயில்

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

| மாலை: 22 & 23 | இரவுத்திரி ஆண்டு-புரட்டாசி & ஐப்பசித் திங்கள் செப்டம்பர் & அக்டோபர்-1980 | மணி: 12 & 1 |
|---|---|---|

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

**திருக்கோயில்** திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப் பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப் பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங் களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொரு வரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறை யாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற் பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொரு வருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளி நாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ.25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

மதுரை மாநகர மாட்சி — ஆசிரியர்

மதுரைத் தல மாண்பு

மீனாட்சியும் காமாட்சியும்

மதுரைக் கோயில் அமைப்பு — ஆசிரியர்

இரத்தினகிரியில் அறநிலைய அமைச்சரின் சிறப்புரை.

பிராட்டியின் பெருமை — திரு நா. வேணுகோபால் நாயகர் பி.ஏ., பி.எல்.

திருக்கழுக்குன்றத் தலச் சிறப்பு — தவத்திரு குருகுலம் அழகரடிகள்.

மீனாட்சி சுந்தரேசுவரர்

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் — திரு ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

பார்த்தன் பள்ளிச் செங்கண்மால் — திரு ந. சுப்புரெட்டியார், எம்.ஏ., பிஎச்.டி.

சேக்கிழார் நோக்கம் — மகாவித்துவான் பண்டித நடேசனார்.

குணம் திகழ் கொண்டல் இராமாநுசன். — திரு உ.வே. குமாரவாடி சே. இராமாநுஜாசாரியர்

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# மதுரை மாநகர மாட்சி

முன்னுரை :

மதுரை மாநகரம் தமிழ்நாட்டின் பழம் பெருந் தலைநகரங்களுள் ஒன்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, அஃது உலகப் பெரு நகரங்களுள் (International Metropolis) ஒன்றாக மதிக்கத்தக்க நிலையில் விளங்கி வந்தது. பாண்டிய மன்னர்களின் தலைநகரமாக மதுரைமாநகரம் பண்டே சிறந்து திகழ்ந்திருந்தது. பாண்டியர் என்னும் பெயர் பண்டையர் என்னும் சொல்லின் அடியாகத் தோன்றியது. ஆதலின், பாண்டிய மன்னர்களின் பழமையையும், அவர்கள் தம் தலைநகரமாகக் கொண்டு வைகி மகிழ்ந்த மதுரை மாநகரின் தொன்மையையும், இனையன என்று நாம் ஒருவாறு எண்ணியுணர்தல் கூடும்.

கி.மு. 20-ஆம் ஆண்டில் பாண்டிய வேந்தன் ஒருவன், அகஸ்டஸ் சீஸர் என்னும்உரோம நாட்டு மன்னனுக்குத் தூது அனுப்பினான் என்னும் செய்திக்குச் சான்றுகள் உள்ளன. பாண்டிய அரசர்கள் கடல் கடந்த அயல்நாடுகளிலும் வாணிகத் தொடர்புகள் உடையவராக விளங்கினர். இவ் வாணிகத் தொடர்புகள் காரணமாகவே மாறன்(1) என்னும் காரணச் சிறப்புப் பெயர் ஒன்றும் பாண்டிய மன்னர்களுக்கு வழங்குவதாயிற்று. மெகஸ்தனீஸ் (Megasthenes, 400 B.C.), பிளைனி (Pliny, 70 A.D.) தாலமி (Ptolemy, 150 A.D.), பெரிப்ளஸ் (Periplus, 60 A.D.) முதலிய பல மேலை நாட்டு அறிஞர்கள் தத்தம் குறிப்புக்களில் பாண்டிய நாட்டையும், மதுரையையும் பற்றிப் பல செய்திகளைக் கூறியுள்ளனர். பாண்டிய நாட்டுக் கொற்கைத் துறைமுகத்தின் விலையுயர்ந்த முத்துக்களைக் கிரேக்கர்களும் உரோமர்களும் பெரிதும் விரும்பி வாங்கி அணிந்து மகிழ்ந்தனர்(2). மதுரை மாநகரைச் சுற்றிக் கிரேக்க உரோமக் குடியிருப்புக்கள் ஏற்பட்டிருந்தன. அயல்நாட்டு நாணயங்கள் (Roman Coins) பல, மதுரை மாநகரின் சுற்றுப்பகுதிகளில் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவைகள் பிறநாட்டு மக்களோடு பாண்டிய நாட்டு மக்கள் கொண்டிருந்த வாணிகத் தொடர்பு முதலிய பல செய்திகளை அறிவிக்கும் நல்ல சான்றுகள் ஆகும்.

இங்ஙனமே மிகப் பழங்காலத்திலேயே மதுரை மாநகரம் எத்தகைய சிறந்த நிலையில் விளங்கி வந்தது என்பதனைப் பழந்தமிழ் இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. மதுரைக் காஞ்சி என்பது பத்துப்பாட்டு என்னும் பழமை வாய்ந்த சங்கத்தொகை நூல்களுள் ஒன்று. அது மாங்குடி மருதனார் என்னும் புலவர் பெருந்தகையால், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் மன்னர்பிரான் மீது பாடப் பெற்றது. அதன்கண் மதுரை மாநகரம் பற்றிப் பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. (வரிகள் 330-700).

### மதுரைக் காஞ்சி

பாண்டிய நாட்டில் மருதம், முல்லை, குறிஞ்சி, பாலை, நெய்தல் என்னும் ஐந்திணை வளங்களும் அமைந்து திகழ்கின்றன. பாடல் சான்ற அப் பாண்டிய நாட்டின் நடுவில் மதுரை மாநகரம் மாண்புடன் அமைந்துள்ளது. அந் நகரில் எங்கணும் சோலைகள் நெருங்கி

---

1 "Maran is he who barters; it is a title assumed by the Pandya kings on account of their earliest commercial relationship with the Egyptians, Chaldeans, ancient Arabs and other Western Nations . . . . We may say that this word Maran has greater connection with the Hebrew Mara to sell or barter, than with the Burmese Maranmar."

—Prof. M. Srinivasa Iyangar
Tamil Studies, P.31

2. "Pliny notes that India drained Roman wealth to the extent of fifty-five million sesterces (about £ 600,000) every year in return for lucuries, which were sold to the consumers for many times their Indian priecs. Petronius, Seneca and Pliny thundred against the Roman use of pearls, ivory and muslines and even of pepper, and blamed the ladies in particular. Lollia Paulina the Queen of Gaius, wore pearls and precious stones, worth forty million sesterces at an ordinaty marriage festivity. Nero decked his shoes with pearls. Even Seneca, the moralist who condemned the luxury of the age, possessed 500 tables with ivory legs".

—E. H. Warmington,
The Commerce between the Roman
Empire and India

நிறைந்திருக்கின்றன. அவற்றில் மந்திகளும் முசுக்களும் தாவி விளையாடுகின்றன. மயில்கள் அகவுகின்றன. வைகை யாற்றில் அடைகரைகளில் உதிரும் கோங்க மலர்களும் பிறவும், அவ் வாற்றில் அழகிய பல நிற மாலைகளைப் போலப் படர்ந்து செல்கின்றன. அதன் துறை தோறும் பூந்தோட்டங்கள் சூழ்ந்து விளங்குகின்றன. அங்கெல்லாம் பெரும் பாணர்களின் குடியிருப்புக்கள் அமைந்திருக்கின்றன.

நீலமணி போலும் நீரையுடைய ஆழமான கிடங்குகளும், வானுற ஓங்கி வளர்ந்த மதில்களும், வலிமை மிக்க வாயில்களும், நெய் பூசித் திண்மை வாய்ந்த நெடுநிலைக் கதவுகளும், மலைபோல ஓங்கித் திகழும் சிறந்த மாடமாளிகைகளும் உடையதாய், மதுரை மாநகரம் விளங்குகின்றது.

அந்நகரின் தெருக்கள் ஆறு கிடந்தாற் போன்று அகன்று நீண்டு உள்ளன. பல்வேறு மொழிகளைப் பேசும் அயல்நாட்டவர்கள் பற்பலரும் அங்கு வாணிகத்தின் பொருட்டு வந்து குழுமி வாழ்கின்றனர். மதுரை மாநகரின் கடைவீதிகளில் அவர்கள் பேசும் பல்வேறு மொழிகளின் ஒலி, 'புட்பயில் பழுமரப் பொலிவிற்றாய்' இனிது எங்கணும் பரவியுள்ளது. காற்றெழுந்த கடலொலி போல முரசொலி ஆர்க்கின்றது.

கோயில்களுக்கு விழாக்களை நடத்தக் கட்டிய அழகிய கொடிகளும், படைத்தலைவர்கள் தாம் பெற்றுவந்த வெற்றியின் பொருட்டு எடுத்தகொடிகளும், கல்வி கொடை தவம் முதலியவற்றிற்காக அவரவர்களால் ஏந்தப் பெற்ற நல்ல பல வெவ்வேறாகிய கொடிகளும், மலையிடத்துப் பெருகிவரும் பற்பல அருவிகள் போல அசைகின்றன.

காற்சங்கிலியை அறுத்துக் கொண்டு, கம்பத்தை முறித்துவிட்டுப் பரிக்கோற்காரரைக் கொன்று, பாகரை வீசி எறிந்து, சினம் மிக்கு ஓடும் மதயானைகளையும்; ஐந்து கதிகளும் பதினெட்டுச் சாரியைகளும் பயின்று வல்ல குதிரைகளையும்; அக் குதிரைகள் பூட்டப் பெற்றுக் காற்றினும் கடுக ஓடும் கவின்மிகு தேர்களையும்; மதுரை மாநகரின் மறுகுகளில் ஆங்காங்கே காணலாம்.

மதுரை மாநகரத் தெருக்களிற் சிலர் நறுமணம் கமழும் பூக்களை விற்பர். சிலர் பல வகை நிறமுள்ள அழகிய பூமாலைகளை விற்பர்; சிலர் பலநிற நறுமணப் பொற்சுண்ணங்களை விற்பர்; மற்றும் சிலர் வெற்றிலையும் சுண்ணாம்பும் பிறவும் விற்பர். வேறு சிலர் பலவேறு பண்ணியங்கள் பகர்ந்து திரிவர்.

மேகம் முகத்தலாற் குறையாமலும், ஆறுகள் வந்து கலத்தலால் மிகாமலும் இருக்கும் கடலைப் போல, மதுரை நகர்க் கடைவீதிகளிற் குவிந்துள்ள விலைப் பண்டங்களின் திரள்கள், 'கொளக் கொளக் குறையாது, தரத் தர மிகாது' நிறைந்து உள்ளன.

மதுரை நகர்க் கோயில்களில் இடைவிடாமல் விழாக்கள் நிகழ்கின்றன. வேறு பிற இடங்களிற் காண இயலாத நிலையில், அவ் விழாக்களுக்காக மக்கள் மிகப் பெருந் திரளாகக் கூடுவர். விழாவிற்குக் கால்கொள்ளத் தொடங்கிய ஏழாம் நாள், அந்தியில் தீர்த்தம் ஆடுதல் மரபு. தீவினையைக் கழுவுவதற்குக் காரணமான தீர்த்தவாரி என்னும் விழாவிற்காகக் கூடிய பெருந்திரளான மக்கள், மகிழ்ந்து மிகவும் ஆரவாரிக்கின்றனர். அவ்விழாவில் எழும் ஒலியைப் போல, மதுரை நகர்க் கடைவீதிகளில் இடைவிடாது எப்பொழுதும் பேரொலி நிகழ்கின்றது.

''கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி
ஆடுதுவன்று விழவின் நாடார்த் தன்றே''

மதுரை மாநகரிற் சிவபெருமான் திருமால் முருகன் முதலிய கடவுளர்கட் கெல்லாம் கோயில்கள் இருக்கின்றன.

''நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போடு ஐந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவன் ஆக''

உள்ள அத் தெய்வங்களுக்கெல்லாம் விழாக்கள் சிறப்புற நடைபெறுகின்றன. வான வண்கை வளங்கெழு செல்வரும், அணங்கு வீழ்வன்ன பூந்தொடி மகளிரும், அவ்விழாக்களைக் காணப் போகின்றனர். காமர் கவினிய பேரிளம் பெண்டிர், 'தாதணி தாமரைப் போதுபிடித்தாங்கு' இளங் குழந்தைகளைக் கைகளில் எடுத்துக் கொண்டு, தம் கணவன்மார்களுடன் இறைவனை வழிபடச் செல்கின்றனர்.

மதுரை மாநகரில் பௌத்தப் பள்ளிகளும் 'சிறந்த வேதம் விளங்கப் பாடும்' அந்தணர் பள்ளிகளும், சமணப் பள்ளிகளும், பலப்பல அமைந்து திகழ்கின்றன.

''அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன்கோல் அன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை அறங்கூறு அவையம்''

பலவும் அங்கே விளங்குகின்றன.

''நன்றும் தீதும் கண்டுஆய்ந் தடக்கி
அன்பும் அறனும் ஒழியாது காத்துப்
பழியொரீஇ உயர்ந்து பாய்புகழ் நிறைந்து
செம்மை சான்ற காவிதி மாக்கள்''

ஆகிய சிறந்த அமைச்சர்களும், புரோகிதர் சேனாபதியர் தூதுவர் ஒற்றர் என்னும் நாற் பெருங் குழுவினரும், அங்குச் சிறப்புற வதிந்து பணிபுரிந்து வருகின்றனர்.

''மலையவும் நிலத்தவும் நீரவும் பிறவும்
பல்வேறு திருமணி முத்தமொடு பொன்
கொண்டு
சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நர்''

ஆகிய வாணிபப் பெருமக்களும், சங்கறுப்போர் வளையல் கடைவோர், மணிகளைத் துளையிடுவோர், பொன்வேலை செய்வோர், புடவை

விற்போர், பூவும் புகையும் ஆய்வோர், ஆடை நெய்வோர், கூத்தாடுவோர் முதலிய பற்பல தொழிலாளர்களும், அங்கு மிகுதியாக வாழ்கின்றனர். அவரவர்களும் அங்கங்கு இருந்து கொண்டு தத்தம் தொழிலைச் செய்தலால் நிகழும் ஒலியானது, பல சமயத்தோரும் தம்மில் தாம் மாறுபட்டுக் கூறும் தருக்கத்தைச் சேரக் கேட்டிருக்கின்ற பேரொலி போன்று உள்ளது.

அங்கே பல சோறிடும் சாலைகள் உள்ளன. மா பலா வாழை முந்திரிகை முதலிய பழங்களும், பாகற்காய் வாழைக்காய் வழுதுணங்காய் முதலிய காய்களும், இலைக்கறிகளும், பலவகைக் கிழங்குகளும் ஆகியவற்றுடன் பாலும் பாற்சோறும் கொண்டுவந்து அனைவருக்கும் படைக்கின்றனர்.

மாலையில் ஞாயிறு மறைந்து முழு நிலாத் தோன்றுகின்றது. அப்போது கற்புடைய மகளிர் தத்தம் கணவரைக் கூடுதற்பொருட்டுச் செங்கழுநீர் மாலை சூடி, பலவேறு அழகிய அணிகலன்களை அணிந்து, கத்தூரியும் சந்தனமும் பூசி, மெல்லிய சிறந்த ஆடைகளுக்கு அகிற்புகையூட்டித் தம்மைப் பல்லாற்றானும் அழகுசெய்துகொண்டு, ஒளி விளக்குகளை ஏற்றுகின்றனர்.

திருமால் பிறந்த திருவோண நாளில் மதுரை நகரிற் பெருவிழா நடைபெறுகின்றது.

> ''கணங்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்
> மாயோன் மேய ஓண நன்னாள்''

வீரர்களெல்லாம் பெரிதும் விரும்பும் திருநாள். அப்பொழுது அவர்கள் தமக்குள் பல வீர விளையாட்டுக்களை நிகழ்த்தி வெற்றிகொண்டு வீறு எய்துவர். மதுரை நகரின் மன்றுகள் தோறும் குரவைக் கூத்து நிகழும். சேரிகள் தோறும் உரையும் பாட்டும் ஆட்டமும் விரவி வேறுவேறு கம்பலைகள் விளையும்.

மதுரை நகரின் ஊர்காப்பாளர், குறி தவறாது ஊக்கருங் கணைகள் செலுத்தும் உரன் உடையவர். அவர்கள் துஞ்சாக் கண்ணர்; அஞ்சாக் கொள்கையர்; அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர்; வயக்களிறு பார்க்கும் வயப்புலி போல, அவர்கள் கள்வர்களைத் தேடிக் கண்டு பிடித்துத் தண்டனை பெறுவித்தலில் வல்லவர்.

மதுரை நகரில் வைகறையில், ஓதல் அந்தணர் வேதம் பாடுவர். அது 'போது பிணிவிட்ட கமழ்நறும் பொய்கைத் தாதுண் தும்பி முரல்வது போல' இனிமையாக இருக்கும். யாழில் வல்ல கலைஞர்கள தாளநுணுக்கம் உணர்ந்து, நரம்பை இனிது மீட்டிக் காலை நேரத்திற்குரிய மருதப் பண்ணைத் திறம்பட இசைப்பர். பாகர்கள் யானைகளுக்குக் கவளம் தீற்றி உணவு கொடுப்பர். பணை நிலைப் புரவிகள் புல்லாகிய உணவைத் தெவிட்டும். கற்புடை மகளிர்,

> ''நயந்த காதலர் கவவுப்பிணித் துஞ்சிப்
> புலர்ந்துவிரி விடியல் எய்த விரும்பித்''

தத்தம் இல்லத்திற் காலைக் கடமைகளைச் செய்யத் தலைப்படுவர். சூதர்கள் வாழ்த்துவர். மாதர்கள் புகழ்பாடுவர். வைதாளிகர் தத்தம் துறைச் செய்திகள் கூறுவர். நாழிகைக் கணக்கர் பொழுது அறிவிப்பர்.

போர்க்களத்திற் பகைவர்கள் விட்டுவிட்டோடிச் சென்ற யானைகளும், பகைநாட்டில் இருந்து கைப்பற்றி வந்த குதிரைகளும், பசுத் திரள்களும், பகைநாட்டுக் கோட்டை மதில்களின் கதவுகளும், பகையரசர்கள் பணிந்தொழுகித் திறையாகக் கொணர்ந்துள்ள பொருட்குவியல்களும், கங்கையாகிய அழகிய பெரிய ஆறானது ஆயிரம்முகமாகக் கடலிலே சென்று கலப்பதுபோல, அளந்து முடிவறிய முடியாமல் வந்து குவிந்துள்ள அரும்பெரும் பண்டங்கள் நிறைந்து, தேவருலகம் போல அழகும் சிறப்பும் மிகுந்து, மதுரை மாநகரம் பெரும்புகழுடன் விளங்குகின்றது.

> ''கங்கையம் பேரியாறு கடற்படர்ந் தாஅங்கு
> அளந்துகடை யறியா வளங்கெழு தாரமொடு
> மிக்குப் புகழ் எய்திய பெரும்பெயர் மதுரை''

என மதுரைக் காஞ்சி என்னும் பழந்தமிழ்ச் சங்கப் பனுவல், ஏறத்தாழ 2000 ஆண்டுகட்கு முன்பே மதுரை மாநகரம் விளங்கியிருந்த சிறப்பினைப் புகழ்ந்து பாடி மகிழ்விக்கின்றது.

**சிலப்பதிகாரம் :**

இவ்வாறே முத்தமிழ்ப் புலமை வித்தகர் ஆகிய இளங்கோவடிகள் அழகுற இயற்றியருளிய சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியமும், மதுரை மாநகரின் மாட்சிமைகளை ஆங்காங்கே எடுத்துப் போற்றியுரைக்கின்றது. மதுரையிற் சிவபெருமான், திருமால், பலராமன், முருகன் முதலிய பலர்க்கும் கோயில்கள் உள்ளன.

> ''நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயிலும்
> உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும்
> மேழிவலன் உயர்த்த வெள்ளை நகரமும்
> கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்
> அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும்
> மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்''

ஆகியவற்றிற் காலை வேளைகளில், சங்கநாதமும், திருப்பள்ளி எழுச்சி முரசொலியும் கேட்பதாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. மற்றும், மதுரை மாநகர மதில் அமைப்பின் சிறப்பினை,

> ''மிளையும் கிடங்கும் வளைவிற் பொறியும்
> கருவிரல் ஊகமும் கல்லுமிழ் கவணும்
> பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
> காய்பொன் உலையும் கல்லிடு கூடையும்
> தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை அடுப்பும்
> கவையும் கழுவும் புதையும் புழையும்
> ஐயவித் துலாமும் கைபெயர் ஊசியும்
> சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
> எழுவும் சீப்பும் முழுவிறற் கணையமும்
> கோலும் குந்தமும் வேலும் பிறவும்
> ஞாயிலும் சிறந்து நாட்கொடி நுடங்கும்.''

எனச் சிலப்பதிகாரம் அடைக்கலக் காதை, திறந்தெரிந்து விரித்துரைக்கின்றது. கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் தோன்றி வாழ்ந்திருந்த ஆர்க்கிமிடீஸ் (Archimedes, 287, B.C.) என்னும் கிரேக்கப் பேரறிஞர், சைரக்யூஸ் (Syracuse) என்னும் இடத்தில் நிகழ்ந்த போரில், உரோமர்களைத் துரத்தியடித்து வெற்றி கொள்ளுதற் பொருட்டுக் கண்டுபிடித்த பற்பல அற்புதப் போர்க்கருவிகளைப் போல்வன, மதுரை நகர மதில்களில் அமைந்திருந்ததாகத் தெரிகின்றது. இதனாலும், பண்டைக் காலத்தில் வாணிகத் தொடர்பு கொண்டு வந்திருந்த கிரேக்க உரோமக் குடியிருப்புக்கள் (Colonies) மதுரையைச் சுற்றி அமைந்திருந்த செய்தி தெளிவாகின்றது.

எகிப்து நாட்டுப் பேரழகியாகிய கிளியோபேட்ரா (Cleopatra) என்பவள், மிகவும் விரும்பிப் பெரும்பொருள் கொடுத்து வாங்கியணிந்த மகிழ்ந்த முத்துக்கள், பாண்டிய நாட்டுக் கொற்கைத் துறைமுகத்தில் விளைந்தனவே யாகும். ஆதலின், மதுரை நகரிலுள்ள 'அரைசு விழை திருவின் அங்காடி வீதி'களில் வைரம் (Diamond), முத்து (Pearl), மரகதம் (Emerald), மாணிக்கம் (Ruby), நீலம் (Sapphire), புட்பராகம் (Topaz), வைடூரியம் (Cat's eye), கோமேதகம் (Zircon), பவளம் (Coral) எனப்படும் நவமணிகள் விற்கப்பெறும் செய்திகள், சிலப்பதிகாரம் ஊர் காண்காதையில் விரிவாக உரைக்கப்பட்டுள்ளன.

### பரிபாடல் :

இங்ஙனமே, மதுரை மாநகரம் பற்றிப் பரிபாடல் என்னும் சங்கப் பனுவல் பாராட்டிக் கூறியிருப்பதும், ஈண்டு அறிந்து இன்புறுதற்குரியது. மதுரை நகர், ஒரு தாமரை மலர் போன்று உள்ளது. அதன் தெருக்கள், அத்தாமரை மலரின் இதழ்களைப் போன்றுள்ளன. இதழ்களின் நடுவில் இருக்கும் பொகுட்டைப் போன்று, ஆலவாய் அண்ணலார் கோயில் இருக்கின்றது. அந்நகரில் வாழும் தண்டமிழ்க் குடிகள், தாமரை மலரின் தாதுகள் போன்றுள்ளனர். அங்கு வந்து பாடிப் பரிசில் பெற்றுச் செல்லும் புலவர்களோ, வண்டுகள் போலத் திகழ்கின்றனர்.

''மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீருர்; பூவின்
இதழகத் தனைய தெருவம்; இதழகத்து
அரும்பொகுட்டு அனைத்தே அண்ணல்
கோயில்;
தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்....''

அறிஞர் பெருமக்கள் அறிவு என்னும் தராசுக்கோலில், ஒரு தட்டில் மதுரை நகரையும், மற்றோரு தட்டில் உலகில் உள்ள நகரங்களையும் இட்டுத் தூக்கி ஆராய்ந்தபோது, மதுரை நகர் அமைந்த தட்டே பெருமையால் கனத்து நின்றது எனக் கற்பனை நயந்தோன்றப் புலவர் ஒருவர் பாடுகின்றார்.

''உலகம் ஒருநிறையாத் தான்ஓர் நிறையாப்
புலவர் புலக்கோலால் தூக்க-உலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர்''

இக்கருத்தினைப் பெரிதும் சுவைத்து இன்புற்றுப் பரஞ்சோதி முனிவர் இப்பாடலின் பொருளைத் தழுவி,

''கைத்தலம்நான் கிரண்டுடைய மலர்க்கடவுள்
மேலொருநாட் கயிலை ஆதி
எத்தலமும் ஒருதுலையிட் டித்தலமும்
ஒருதலையிட் டிரண்டும் தூக்கி
உத்தமமாம் திருவால வாய்மிகவும்
கனத்ததுகண் டுலகின் மேலா
வைத்ததலம் இதுஎன்றால், இதன்பெருமை
யாவரே வழுத்த வல்லார்?''

எனத் தமது திருவிளையாடற் புராணத்தில் பாடி நம்மனோரை இன்புறுத்துகின்றார். இவ்வாறு,

''தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை''

பற்றிச் சங்க இலக்கியங்கள் ஆங்காங்கே குறிப்பிட்டுப் புகழ்ந்து பாராட்டியுரைக்கின்றன.

### பெரியபுராணம் :

இனி, மதுரை மாநகர மாட்சிமை பற்றி, செந்தமிழ்ச் சிவநெறிச் சான்றோர் ஆயச் தெய்வப் புலவர் சேக்கிழார் சுவாமிகளும் தமது பெரிய புராணத்தில், சிறப்பாக மூர்த்தி நாயனார் வரலாற்றில், சிறந்தெடுத்து உரைத்து வியந்து புகழ்கின்றார்.

பாண்டிய நாடு சீர்மன்னு செல்வக்குடி மல்குவது; சிறப்பின் ஓங்கும் மணிமாட வைப்புக்கள் மிக்கது; பல நற்றுணை மாந்தர் போற்றும் தகையது; தொன்மைப்புகழ் பூண்டது.

அப் பாண்டிய நாட்டில் நீர்மை பணித்த முத்தம், பெண்களின் இன்சொற் பேசும்சிவந்த வாயினும் தோன்றும்; பொருநையாறு சென்று கலக்கின்ற கடலினும் தோன்றும்.

மேலும், அப் பாண்டி வளநாட்டுச் சோலைகளிற் பொதிய மலையினின்று தோன்றி வந்து வீசும் இனிய தென்றற்காற்றும், ஞாலம் அளந்த மேன்மை மிக்க தெய்வத் தமிழும் ஆகிய இரண்டும், செவ்வி மணஞ்செய் ஈரம் தரும்.

மதுராபுரி அப்பாண்டிய நாட்டின் தலைநகரம்! தாமரைமலரில் வீற்றிருக்கும் திருமகள் அங்கு எப்பொழுதும் பிரிவின்றி விரும்பி வாழ்வாள். அந் நகரில் வாழும் மகளிர் அனைவரும் திருமகளைப் போன்ற அழகும் சிறப்பும் வாய்ந்தவர். அவர்கள் பேசும் சொற்கள் யாழின் இசைபோல இனிமை நிரம்பித்திகழும். இனிய குழலின் இசையும், சுரும்பின் இசையும், அவர்தம் சொல்லினிமைக்கு வியந்து நயந்து அங்கேயே தங்கி வாழ்ந்துவரும்.

மதுராபுரியில் இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழும் தங்கி நிலைபெற்று வளர்கின்றன. அங்கே நூல்பாய் இடத்தும், சேல்பாய் தடத்தும் ,செய்யுள் மிக்கு ஏறு சங்கங்கள் பல உள்ளன.

மதுரை நகரின் மாட மாளிகை முன்றில்களில் தென்றல்காற்று இனிதாக வீசுகின்றது. அங்கே மங்கையர்கள பந்தாடுகின்றனர். அவர்களின் சந்தார் முலைகளின் மேலும், முகச் செந்தாமரை மலர்களின் மேலும், நித்திலம் சேர்ந்த கோவைகள் விளங்குகின்றன.

இத்தகைய மதுரை மாநகரில்தான், தமிழ்ச்சங்கம் இருந்தது. நக்கீரர் முதலிய நாற்பத்தொன்பது சங்கப் புலவர்கள் பேரவைகூடி, இங்கேதான் தமிழ்மொழியை ஆராய்ந்து வளர்த்தனர். சிவபெருமானே சங்கத் தமிழில் தலைமைப் புலவராக விளங்கியிருந்தார். இறையனார் களவியல் என்னும் சிறந்த நூலும், அவரால் அருளிச் செய்யப்பெற்றது. இதற்கெல்லாம் காரணமாக விளங்கிய தமிழ்ச் சங்கம் அமைந்திருந்த சிறப்பினைப் பெற்றது, மதுரை நகரம் என்றால், மூன்றுலகங்களிலும் அதனை விடச் சிறந்த நகரம் வேறு யாது உளது ?

''மும்மைப் புவனங்களின் மிக்கதன்
றே, அம் மூதூர்?
மெய்ம்மைப் பொருளாந் தமிழ்நூலில்
விளங்கு வாய்மைச்
செம்மைப் பொருளும் தருவார்திரு
ஆல வாயில்
எம்மைப் பவந்தீர்ப் பவர்சங்கம்
இருந்த தென்றால்''

—பெரியபுராணம்

இங்ஙனம் பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றில் மதுரை மாநகர மாட்சி பற்றியசெய்திகளை அறிந்து மகிழ்கின்றோம்.

**சில வரலாற்றுச் செய்திகள் :**

பண்டைப் பாண்டிய அரசர்களுள் நன் மாறன் என்பவனே, இறுதியாக வாழ்ந்தவன். அவனுக்குப் பின்னர் கி.பி. 2-ஆம் நூற்றாண்டு முதல் 6-ஆம் நூற்றாண்டு வரையில், மதுரையின் சிறப்பு ஓரளவு மங்கி யிருந்தது. ஆனால் கி.பி. 7ஆம் நூற்றாண்டுமுதல், அதன் பழம்பெருமை முன்போலச் சுடரொளி வீசித் திகழ்வதாயிற்று. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் மார்க்கோபோலோ (Marcopolo) முதலிய அயல்நாட்டு யாத்ரீகர்கள் மதுரையின் வளங் கண்டு வியந்து மகிழ்ந்தனர். ஆனால் மாலிக்காபூர் (Malikafur) என்னும் முஸ்லிம் படைத்தலைவன் கி.பி. 1310-இல் மதுரையைக் கைப்பற்றினான். அதனால் 14-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் மதுரை தனது சிறப்பும் வளமும் இழந்து இன்னல் உற்றது. எனினும், மீண்டும் தோன்றிய பாண்டிய மன்னர்களின் ஆட்சியால், அது பண்டேபோல் சிறப்பெய்தத் தலைப்படுவதாயிற்று. பிற்காலப் பாண்டிய மன்னர்களிற் கடைசியாக வாழ்ந்த அரசன், கி.பி. 1450 முதல் 1550 வரையுள்ள ஆண்டுகளில், இப்போது நாம் காணும் கோயிலையும் கோபுரங்களையும் கட்டினான்.

கி.பி. 1559-இல் விசுவநாத நாயக்கன் என்னும் விசயநகரப் படைத் தலைவனால் நிறுவப்பெற்ற நாயக்க மரபினர் ஆட்சி நடைபெற்ற 200 ஆண்டுகளில், மதுரை மாநகரம் மேலும் மேலும் வளர்ந்து வளம் பெறுவதாயிற்று. நாயக்க மன்னர்கள் மிகவும் சிறந்த கட்டிடக் கலைஞர்கள். அவர்கள் கோட்டைகளும் கோயில்களும், அணைக்கட்டுக்களும், கால்வாய்களும் பற்பல கட்டினர்.

அவர்களுள் மிகவும் புகழ்பெற்ற விளங்கியவர் திருமலைநாயக்கர் என்னும் மன்னர் (கி.பி. 1623-59). அவரே, நாம் இப்போது மதுரையில் கண்டு களித்து மகிழும் தெப்பக் குளம், புதுமண்டபம், இராயகோபுரம், தமுக்கம் அரண்மனை ஆகியவற்றைக் கட்டுவித்தவர். அவர் கட்டிய நாயக்கர் மகால் என்பது மிகப் பெரிய அளவில் வியக்கத் தகும் முறையில் அமைந்திருந்தது. அதனைக் கண்டுகளித்த ஐரோப்பியர்கள், தீப்ஸ் என்னும் இடத்தில் இருந்த தமது பண்டைப் பெருங்கட்டிடங்களுக்கு நிகரானது என்று கூறிப் புகழ்ந்தனர்.

அதன் பெரும் பகுதியை, அவருடைய பேரன் ஆகிய சொக்கநாத நாயக்கன் (கி.பி 1662-82), இடித்து அழித்துவிட்டான். அதன் அளவிற் காற்பகுதியை மட்டுமே இன்று நாம் காணப் பெறுகின்றோம். இப்போதுள்ள திறந்த வெளிப் பேரவை முற்றம் 252 அடி நீளமும், 151 அடி அகலமும் உடையது. அதனைச் சூழ்ந்துள்ள மண்டபம் 40 அடி உயரமுள்ள தூண்கள் பலவற்றால் தாங்கப் பெறுகின்றது. 1868-ஆம் ஆண்டில் சென்னைக் கவர்னர் ஆக இருந்த நேப்பிர் பிரபு இதனை அழியாமற் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டார்.

நாயக்கர்களின் ஆட்சி கி.பி. 1736-இல் முடிவடைந்தது. அதன்பின் முஸ்லிம்களும் மராட்டியர்களும் தம்முட் போட்டியிட்டு ஆட்சியைக் கைப்பற்ற முயன்றனர். ஆனால் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த கேப்டன் கெல்லூயட் ( Calluid ) என்பவர் 1,70,000 வெண் பொற்காசுகளுக்கு மதுரை நகரை வாங்கினார். அவர் மதுரையையும் திருநெல்வேலியையும் ஆண்டொன்றுக்கு ஐந்து இலட்சம் வெண் பொற்காசுகளுக்கு முகம்மது யூசுப் (Mohammed Yusuf) என்பவருக்கு வழங்கினார். ஆனால் கி. பி. 1790ல் இத்தகை முறை நிறுத்தப்பெற்று, அலெக்ஸாண்டர் மெக்லியோட் (Alexander Mcleod) என்பவர் முதன் முதற் கலெக்டர் ஆக நியமிக்கப்பெற்றார்.

கி.பி. 1801-இல் முடிவுபெற்ற மூன்றாவது மைசூர்ப் போருக்குப் பின்னர், ஆற்காட்டு நவாபு தன் ஆட்சியுரிமை அனைத்தையும் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கு ஒப்படைத்தபோது, மதுரை நகர உரிமை வெள்ளையர்க்கு மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. **

# மதுரைத் தல மாண்பு

*முன்னுரை :*

மதுரை ஒரு சிறந்த மாநகரம் மட்டுமே யன்று. அஃது ஒரு சிறந்த தலமும் ஆகும். தேவாரப்பாடல் பெற்ற சிறப்புடைய தலங்கள் 275. அவற்றுள் பாண்டிய நாட்டுத் தலங்கள் பதினான்கு என்பர். அவைகள்,

''கூடல் புனவாயில் குற்றாலம் ஆப்பனூர்
ஏடகம் நெல்வேலி இராமேசம்-ஆடானை
தென்பரங்குன் றம்சுழியல் தென்திருப்புத்தூர் கானை
வன்கொடுங்குன் றம்பூ வணம்''

என்பன. அப்பதினான்கு பாண்டிய நாட்டுத் தலங்களுள், முதன்மை மிக்க தலம் மதுரையே ஆகும். மதுரையின் அளப்பரும் சிறப்புகட் கெல்லாம் அதன்கண் அமைந்துள்ள கோயிலே காரணம்.

கோயில் அமைந்துள்ள இடமெல்லாம் சிறப்புடையனவே யாயினும், ஒரு கோயில் பெரிதும் சிறந்ததெனப் போற்றப்படுவதற்கு மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூவகைச் சிறப்புக்களும், அங்கு அமையப் பெற்றிருத்தல் வேண்டும். மதுரைக் கோயிலுக்கு இம்மூவகைச் சிறப்புக்களும் அமைந்திருத்தல் மகிழ்தற்குரியது.

திருவாலவாய் என்னும் மதுரைக்குஇணை யான ஒரு தலமும், அங்குள்ள பொற்றாமரைக் குளம் போன்ற ஒரு தீர்த்தமும், அத் தீர்த்தத் தின் மருங்கே ஞான வடிவம் ஆக விளங்கித் தன்னை வழிபடும் அடியவர்களுக்கு இகமும் பரமும் வீடும் தருபவர் ஆகிய சோமசுந்தரப் பெருமான் போன்ற ஒரு மூர்த்தியும், மூன்று உலகங்களிலும் இல்லை என்பது திண்ணம்.

''திருவால வாய்க்கிணையாம் ஒருதலமும்,
தெய்வமணம் செய்யப் பூத்த
மருவார்பொற் கமலநிகர் தீர்த்தமும், அத்
தீர்த்தத்தின் மருங்கே ஞான
உருவாகி யுறைசோம சுந்தரன்போல்
இகபரந்தந் துலவா வீடு
தருவானும், முப்புவனத் தினும்இல்லை !
உண்மைஇது சாற்றின் மன்னோ!''

*தலச் சிறப்பு:*

எல்லா உலகங்களிலும் தருமதலம் சிறப் புடையது. அதனிலும் சைவதலம் சிறப்புடை யது; அச் சைவ தலங்களுள் 68 தலங்கள் சிறந் தவை; அவற்றிற்குள் 16 தலங்கள் சிறப்பு வாய்ந்தவை; அவற்றில் சிதம்பரம், காசி, திருக் காளத்தி, திருவாலவாய் என்னும் நான்கு தலங்கள் மிகச் சிறப்புடையன; அவற்றிலும் திருவாலவாய் என்னும் மதுரையே மிகவும் தலைசிறந்தது.

ஏனெனில், சிதம்பரம் கண்டு தரிசித்தா லும், காசி சென்று வாழ்ந்து இறந்தாலும், திருக்காளத்தி பக்தியினால் வழிபட்டாலுமே, இவ்வுலக போகமும் வீட்டுலக இன்பமும் தரும் இயல்புடையன. ஆனால் திருவாலவாயோ, தன் பெயர் கேட்ட மாத்திரத்திலேயே போகம் அளிக்கும்; மீண்டும் பிறந்திறவாப் பேரின்பக் கதியளிக்கும்! மேலும்,

''திருவால வாய்என்று கேட்டவரே
அறம் பெறுவர்! செல்வம் ஓங்கும்
திருவால வாய்என்று நினைத்தவரே
பொருள் அடைவர்! தேவ தேவைத்
திருவால வாய்இடத்துக் கண்டவரே
இன்பநலம் சேர்வர்! என்றும்
திருவால வாய்இடத்து வதிந்தவரே
வீட்டுநெறி சேர்வர்! நன்றே''

கங்கையாற்றின் கரையிலுள்ள காசி முத லிய தலங்கள் மறுமையிலேயே வீடு பேறு அளிக்கும். ஆனால் வைகையாற்றின் கரை யிலுள்ள மதுரையோ, உலகில் வாழ்ந்துகொண் டிருக்கும் போதே,வீடுபேறு (சீவன்முத்தி) தரும். ஆதலின் மதுரைக்குச் சீவன்முத்திபுரம் என் றும் ஒரு பெயர் உண்டு. ஆதலின் இந்தத் தலத்தை விட்டு வேறு பிற தலங்களுக்குச் சென்று, தவமும் வழிபாடும் செய்யத் தலைப் படுபவர்கள், சீதளவான் அமிழ்தம் போல் தித்திக்கத் தேன் பெய்து செய்த தீம் பாற் சோறு கையில் இருப்ப, அதனைவிட்டுப் புறங் கையைச் சுவைப்பவர்களுக்குச் சமமாவர்.

மற்றைய தலங்களிற் பரிமகம், வாச பேயம், சோடசாகம், அக்கினிட்டோமம், இராசசூயம் முதலிய யாகங்களும், தரிசபூர் ணம் முதலிய கிரியைகளும் செய்த நல்வினைப் பேற்றையும், கங்கை, யமுனை, சரசுவதி, கோதாவரி, கிருஷ்ணை, துங்கபத்திரை, பாலாறு, காவிரி, பொருநை முதலிய நதிகள் பலவற்றிலும் முழுகி வழிபட்ட நல்வினைப் பயனையும், மதுரையில் வாழ்பவர்கள் நாடோ றும் பெறுவார்கள்.

*தீர்த்தச் சிறப்பு :*

மதுரையிலுள்ள தீர்த்தம் பொற்றா மரைத் தீர்த்தம் எனப்படும். இது, கங்கை காவிரி முதலிய நதிகளும், கடல்களும் மேகங் களும் படைக்கப்படுவதற்கு முன்னரே, சிவ பெருமான் தன்னை வழிபடுவோர் திருவபி டேகம் செய்தற்பொருட்டு முதன் முதலிற் படைத்ததாகும்.

எல்லாத் தீர்த்தங்களுக்கும் முதலில் தோன்றியதால் ஆதிதீர்த்தம் என்றும்; பிற தீர்த்தங்கள் எல்லாவற்றையும்விட மிகமேலான தீர்த்தம் ஆதலின் பரம தீர்த்தம் என்றும்; தன்பால் மூழ்கி வழிபடுபவர்களுக்கு அருளை யும் மங்கலத்தையும் விளைவித்தலால் அருட் சிவ தீர்த்தம் என்றும்; நமது அஞ்ஞானத்தை அகற்றி ஞானத்தை அளித்தலால் ஞானதீர்த் தம் என்றும்; முத்தியின்பம் பெறுமாறு செய்

தலால் முத்தி தீர்த்தம் என்றும் பல பெயர்கள், இதற்கு வழங்கும்.

மேலும் உலகிலுள்ள தீர்த்தங்கள் எல்லா வற்றிலும் உத்தமமானதாக ஒளிர்தலின் உத்தம தீர்த்தம்; பல இதழ்களை விரித்துச் செந்தாமரை பூத்துப் பொலிவுற்று விளங்கும் தன்மையினால் பொற்றாமரைத் தீர்த்தம்; தன்பால் முழுகி நீராடி வழிபடும் உண்மை அடியார்களுக்கெல்லாம் தருமம், அருத்தம், காமம், மோட்சம் என்னும் நான்கு புருஷார்த் தங்களையும் தருதலால், தரும தீர்த்தம், அருத்த தீர்த்தம், காமதீர்த்தம், மோட்ச தீர்த்தம் என்றும், நூல்கள் இதனைப் புகழ்ந்து கூறும்.

''அலகிலாத் தீர்த்தம் தம்முள்
அதிகஉத் தமமாய்த் தோன்றி
இலகலால் இதனைத் தீர்த்த
உத்தமம் என்பர் ஆய்ந்தோர்!
பலஇதழ் விரித்துச் செம்பொற்
பங்கயம் மலர்ந்த நீரால்
உலகவர் யாரும் பொற்றா
மரைஎன உரைப்பர் அன்றே''

பிற தலங்களுக்குச் சென்று, அங்கிருந்து செய்கின்ற விரதம், பூசை, தானம், தருமம், ஓமம், தவம், செபம், தியானம் முதலியவற் றாற் பெறும் பயனைக் காட்டிலும், பொற்றா மரைத் தீர்த்தத்தை அடைந்து நீராடி, அதன் கரையில் இருந்து அவற்றைச் செய்தால் கோடி மடங்கு மிகுதியான பயனைப் பெறலாம்.

''ஏனைமா தலங்கள் தம்மில்
இருந்துசெய் விரதம் பூசை
தானமா தருமம் ஓமம்
தவம்செபம் தியானம் தம்மால்
ஆனமா பயனிற் கோடி
அதிகமாம்; அடைந்து மூழ்கி
ஞானமா தீர்த்த ஞாங்கர்
இருந்தவை நயந்து செய்யின்''

*மூர்த்திச் சிறப்பு :*

மதுரைத் தலத்தில் உள்ள அருட்குறி யாகிய சிவலிங்கம், மேருமலை வெள்ளிமலை மந்தரமலை திருக்கேதாரம் வாரணவாசி முத லிய எண்ணில்லாத் தலங்கள் எல்லாவற்றிலு முள்ள, இலிங்கங்கள் எல்லாவற்றிற்கும் முன்னே தோன்றிக் கடம்ப மரத்தின் அடியில் முளைத்த தாகும். பிற தலங்களின் இலிங்கங்கள் எல்லாம் இதனில் இருந்தே பிறகு தோன்றுவன ஆயின. ஆதலின் இதற்கு மூலலிங்கம் என்பது பெயர். 'முளைத்தானை எல்லார்க்கும் முன்னேதோன்றி' என்னும் திருநாவுக்கரசர் திருத்தாண்டகம் இக் கருத்தினையே வலியுறுத்துகின்றது.

''சொக்கு' பேரழகு. பேரழகு வாய்ந்த இலிங்கம் ஆதலின் இதற்குச் சொக்கலிங்கம் எனவும் பெயர் வழங்கும். 'உமையோடு கூடிய அழகர்' என்னும் பொருளில் (சஹ உமா சுந்தரர்) சோமசுந்தரர் எனவும், இங்குள்ள சிவபெருமானுக்குப் பெரியார்கள் பெயர் கூறி மகிழ்வர்.

பிற தலங்களில் உள்ள இலிங்கங்கள் எல் லாம் தனித்தனி ஒன்றான அமைப்புடைய வியட்டி லிங்கம்; மதுரையிலுள்ளதோ, எல் லாம் ஒருங்கு திரண்டு தொகுதியான அமைப் பும் ஆற்றலுமுடைய சமட்டிலிங்கம் எனப்படும். எனவே மதுரையிலுள்ள இலிங்க மூர்த்தத் தினைக் கண்டு வழிபடப் பெற்றால், வேருக்கு ஊற்றும் நீரானது மரத்தையும் அதனுடைய பல்வேறு எண்ணற்ற கிளைகளையும் வளர்த் துச் செழிப்படைவித்தல் போல, ஏனைய எல் லாத் தலங்களிலும் உள்ள இலிங்கங்களையும் தனித்தனியே கண்டு வழிபடப் பெற்ற சிவ புண்ணியம் கிடைக்கும் என்பது திண்ணம்.

''சொற்றஇச் சமட்டி யான
சோமசுந் தரனைக் காணப்
பெற்றவர், வியட்டி யான
பிறபதி இலிங்கங் காணல்
உற்றவர் ஆவர்! என்னென்
றுரைக்கின், வேர்ஊட்டும்நீர்போய்
மற்றைய சினைகள் எல்லாம்
தழைவிக்கும் மரத்தின் மாதோ!''

மலைகளில் மேருமலையும், மரங்களிற் கற்பக மரமும், யாகங்களில் அசுவமேத யாக மும், தானங்களில் அன்னதானமும், மனிதர் களில் நல்ல மறை வல்லவர்களும், விரதங் களிற் சோமவார விரதமும், மந்திரங்களில் திருவைந்தெழுத்து மந்திரமும், மணிகளிற் சிந்தாமணியும், தருமங்களிற் சிவதருமமும், பசுக்களிற்காமதேனுவும், தீர்த்தங்களிற் பொற் றாமரைத் தீர்த்தமும் சிறந்து விளங்குதல் போல, ஏனைய எல்லாத் தேவர்களிலும்தலை சிறந்து திகழ்பவன், சோமசுந்தரப் பெருமான் ஒருவனே யாவன்.

மதுரையிலுள்ள, சோமசுந்தரக் கடவுள் தம்மை வழிபடும் அடியார்களின் பாவங்களை எல்லாம் போக்கி, நலங்களை எல்லாம் விளைத் துக் காத்தாட் கொள்ளும் பரம கருணையுடை யவர். அவரை வணங்குதலால் நம்மனோர் பாவங்களெல்லாம் நீங்குதல் திண்ணம். சோம சுந்தரப் பெருமானை வழிபடுதலால் தீப்பொறி பட்ட பஞ்சுப் பொதி எரிந்து போவது போல வும், கோபம் உண்டாவதனால் தவ ஆற்றல் களெல்லாம் சிதைந்தொழிவது போலவும், மருந்தின் வலிமையால் நோய்கள் தீர்வதுபோல வும், உத்தம குணங்களெல்லாம் உலோப குணத்தால் அழிந்து இழிவுறுவது போலவும், ஞாயிறு தோன்றுதலால் இருள்கெட்டு ஓடி ஒளிவது போலவும், வலிய சூறாவளி வீசுத லால் மேகங்கள் பல வேறு திசைகளில் சிதறுண் பது போலவும், சிங்கமானது சீறிப் பாய்தலால் யானை இறந்து படுவது போலவும், தேவேந்திர னின் குலிசாயுதத்தால் பெரிய பெரிய மலை களெல்லாம் பொடிப் பொடியாக வீழ்ந்து சிதறி யது போலவும், கொடிய காம உணர்ச்சியால் நல்ல அறிவு கெடுவது போலவும், அருட்சிவ ஞான நோக்கால் அஞ்ஞானம் தவிர்வது போல வும், கருடனின் சீற்றத்தாற் பாம்புகள் இறப் பது போலவும், செருக்கு மிகுதியினாற் சிறந்த கல்வி நலம் சிதைதல் போலவும், எல்லாப் பாவங்களும் நீங்கி நலங்களெல்லாம் வந்து அடையும்.

*முடிவுரை :*

இவ்வாறு மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்று பெருஞ் சிறப்புக்களும் அமைந்ததும், சிவபெருமான் 64 திருவிளையாடல்களை நிகழ்த்தியருளிய ஒப்புயர்வற்ற சீர்த்தியுடைய தும் மதுரைத்தலம் எனின், அதன் அருமை பெருமைகளை நாம் அளவிட்டு உரைத்தல் இயலுமோ ?

# மீனாட்சியும் காமாட்சியும்

**முன்னுரை :**

அகிலாண்ட கோடியெல்லாம் ஈன்ற அன்னையாய்ப், பின்னையும் கன்னிஎன மறைகள் பேச விளங்கும் அம்பிகைக்கு, எத்துணையோ பல பெயர்கள உரியனவாக இருப்பினும், அவைகளிற் பெரிதும் போற்றி வழங்கப்பெறும் சிறப்புடைய பெயர்கள் சிலவற்றுள், மீனாட்சி, காமாட்சி என்னும் பெயர்கள் இரண்டும் குறிப்பிடத் தக்கனவாகும்.

**மதுரையும் காஞ்சியும் :**

தமிழ்நாட்டில் எத்துணையோ பல சிறந்த நகரங்கள் இருக்கின்றன. அவற்றுள் மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்த வரலாற்றுச் சிறப்புடைய நகரங்கள் ஒரு சிலவே. அவற்றுள்ளும் மிகவும் சிறப்புடையனவாகக் குறிக்கத் தக்கவை மதுரை, காஞ்சிபுரம் என்னும்இரண்டுமேயாகும். மதுரை பாண்டிய நாட்டின் தலைநகரம். காஞ்சிபுரம் பல்லவ மன்னர்களின் கோநகரம். உறையூர், காவிரிப்பூம்பட்டினம் முதலியன சோழ மன்னர்களுக்கும், வஞ்சி, கருவூர் முதலியன சேர அரசர்களுக்கும் சிறப்புடைய தலைநகரங்களாக, ஒரு காலத்தில் விளங்கியிருந்தன. ஆயினும், அவைகளெல்லாம் இன்று தம் பண்டைப் பெருமையிற் குன்றிப் பொலிவிழந்து எளிய நிலையிலேயே உள்ளன. ஆனால், பாண்டிய வேந்தர்களின் தலைநகரமாகத் திகழ்ந்த மதுரையும், பல்லவ அரசர்களின் தலைநகரமாக விளங்கிய காஞ்சிபுரமும், ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இன்றளவும் பெரிதும் சிறப்புற்றுப் பிறங்கி வருகின்றன. இதற்குக் காரணம் மதுரை மாநகரில் மீனாட்சியம்மையும், காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மையும் எழுந்தருளி வீற்றிருந்து விளங்கிக் காத்து வருதலேயாகும். இவ்வுண்மை பற்றியே இவ்விரு பெரு நகரங்களுக்கும், கன்னி காப்பு எனவும் ஒரு பெயர் வழங்கி வருகின்றது.

**மீனாட்சி : சொற்பொருள் விளக்கம் :**

மீனாட்சி, காமாட்சி என்னும் இருபெயர்களும் மிகுந்த பொருட் செறிவுடையனவாக விளங்குகின்றன. மீனம்-மீன். அட்சம்-கண். அட்சி-கண்ணை உடையவள். மீன அட்சி-மீனாட்சி. மீன் போன்ற கண்ணையுடையவள் என்பது பொருள்.

கோழி, முட்டையின் மேல் அடைகாத்துக் கிடந்து பக்குவம்நோக்கி முட்டையைப்பிரித்துக் குஞ்சுகளை வெளிப்படுத்தும். ஆமை, கடலில் ஓர் இடத்தில் சேமித்து வைத்த தன் முட்டைகளைத் தான் சேய்மையிற் சென்று நினைவு கூர்ந்து, அந்நினைவின் ஆற்றலாற் குஞ்சு பொரிக்கச் செய்யும். மீன் தன் சினைகளைக் கண்ணாற் பார்த்து நின்று, அக் கட்பார்வையின் திறனால், அவற்றினின்று குஞ்சுகள் தோன்றச் செய்து காப்பாற்றும். இவ்வுண்மையினை,

''இரங்கியவா ரணம்ஆமை
மீன்அண்டம் சினையை
இயல்பினொடு பரிசித்தும்
நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதாம் ஆக்குமா
போற் சிவமே யாக்குப்
பரிசித்தும் சிந்தித்தும்
பார்த்தும் தானே''

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுளாலும்,

''அன்னைதன் சிசுவை ஐயன்
ஆமையின் பறவை போலத்
தன்னகம் கருதி நோக்கித்
தழுவி''

எனவரும் கைவல்ய நவநீதக் கவிதையாலும் யாவரும் இனிதுணர்ந்து தெளியலாம்.

மீன் தன் கட்பார்வையின் ஆற்றலினால் முட்டைகளினின்று குஞ்சு பொரிந்து வெளிப்படச் செய்து, அவற்றைப் பாதுகாக்கும் செயல் போல, உலகத்து உயிர்களை யெல்லாம் தனது அருள் கனிந்த கடைக்கண் பார்வையின் ஆற்றலால் பாதுகாத்து நலம்புரிந்தருளும் திறம் பற்றி, அம்பிகைக்கு மீனாட்சி எனச் சான்றோர்கள் பெயரிட்டு வழங்குவாராயினர்.

மீனாட்சியம்மை தன் கடைக்கண் பார்வை நலத்தால் உலகத்து உயிர்களை எல்லாம் பாதுகாத்து அருள் செய்யும் திறனை,

''ஒளியால் உலகின் றுயிர்அனைத்தும்
மீன்போற் செவ்வியுற நோக்கி
அளியால் வளர்க்கும் அங்கயற்கண்
அன்னே கன்னி யன்னமே''

எனவரும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணச் செய்யுளானும் தெளியலாம்.

**மீனின் கண்கள் இமையாமை :**

இனி இதற்கு வேறு வகையாகவும் விளக்கம் கூறுவர் சான்றோர். மீனின் கண்களுக்கு இமைகள் இல்லை. இமைகள் இல்லாமையால், மீனின் கண்கள் இரவும் பகலும் மூடுதல் இன்றி விழித்துக் கொண்டிருக்கும்.

''மீன்கண் துஞ்சும் பொழுதும்
யான்கண் துஞ்சலன் யாதுகொல் நிலையே''

என்பது நற்றிணை நானூறு. எனவே, மீன் இரவும் பகலும் கண்களை மூடாது விழித்துக் கொண்டிருக்கும் தன்மை போல, ஒரு கணப் பொழுதும் ஒழிவின்றிக் கண் இமையாமல் இருந்து உயிர்களைக் கருணையுடன் பாது காத்து நலம் புரியும் அம்பிகை, மீனாட்சி எனக் காரணப் பெயர் பெற்றாள்.

**சௌந்தரிய லகரி :**

அம்பிகையின் கண்கள் அருளால் திறந்து மலர்வதனால் தோன்றும் இவ்வுலகம், அவள் தன் கண்களைச் சற்றே மூடி இமைப்பாளாயின், அவ்வளவில் அழிந்தொழிதல் கூடும். அங்ஙனம் நேராமைப் பொருட்டு, மீன் போலத் தன் கண்களை இமைக்காமல் இருந்து உலகங்களையெல்லாம் அம்பிகை அருளாற் பாது காத்து வருகின்றாள். அது பற்றி மீனாட்சி எனப் பெயர் பெற்றாள எனினும் பொருந்தும். இக்கருத்து,

''இணைவிழி இமையா நாட்டம்
எய்தியது அலரத் தோன்றும்
பணைநெடும் புவனம்இந்தப்
பார்வைசற் றிமைக்கு மாயின்
துணையிழந் தழிவ தெண்ணித்
துணிந்தநின் கருணை என்றால்
கணையினும் கொடிய தென்னக்
கடவதோ? கடவுள் மாதே''

எனவரும் சௌந்தரிய லகரித் தமிழ்ச் செய்யுளால் விளக்கப் பெற்றிருத்தல் காணலாம்.

***மீனாட்சி* : தமிழிற் பெயர்கள் :**

மீனாட்சி என்பதனை அங்கயற்கண்ணி என்றும், மீனநோக்கின் மடவரல் என்றும், கயல்மாண்ட கண்ணி என்றும், பிறவாறும் பெரியோர்கள் தமிழில் வழங்கியுள்ளனர்.

''அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே''

- சம்பந்தர்.

''மீன நோக்கின்
மடவரலை மணந்துலகம் முழுதாண்ட
சுந்தரனை வணக்கம் செய்வாம்''

- பரஞ்சோதி முனிவர்

''கயல்மாண்ட கண்ணிதன் பங்கன்
எனைக் கலந் தாண்டலுமே
அயல்மாண்டு அருவினைச் சுற்றமும்
மாண்டு அவனியின் மேல்''

— மாணிக்கவாசகர்.

***காமாட்சி* : சொற்பொருட் கருத்து :**

இங்ஙனமே காமாட்சி என்னும் திருப் பெயர்க்கும் சிறந்த பல பொருள்களைப் பெரியோர்கள் கூறுவர். கா மா அட்சி. கா-சரசுவதி. மா-இலட்சுமி. அட்சி-கண்ணாக உடையவள. சரசுவதியும் இலட்சுமியும் தனக்குக் கண்களாக உடையவள காமாட்சி எனப்படுவள். எனவே, கல்விநலனையும் செல்வநலனையும் ஒரு சேரத் தன் அடியார்களுக்குத் தன் கடைக்கண் பார் வையால் விளைத்துக் கொடுத்து நலம் புரியும் திறம் வல்லவள் காமாட்சி என்பது கருத்து.

''தண்ணார் இதழி புனைவான்
விழியிணை தம்மனைகள்
பண்ணா அழிக்கும் என்றோ? நின்
திருமுக பங்கயத்திற்
கண்ணா யினர், உனக்கு அவ்அலை
மாதும் கலைமகளும்!
பெண்ணா ரமுதனை யாய்! குன்றை
வாழும் பெரியம்மையே!

—சிவப்பிரகாச சுவாமிகள்.

இனி, காமம்-விருப்பம். காம அட்சி-காமாட்சி எனக் கொண்டு, 'அடியார்கள் விரும்பி நினைத்தவற்றை யெல்லாம் தரும் அருள்நோக்கம் உடையவள்' என்றும்; க அ ம அட்சி எனப் பிரித்துக் கொண்டு, க-பிரமனையும், அ-திருமாலையும், ம-உருத்திரனையும், அட்சி-கண்ணாற் படைப்பவள் என்றும் பிறவாறும் பொருள் கூறுவதுண்டு.

''திருமகள் வலக்கண், வாக்கின்
சேயிழை இடக்கண், ஞானப்
பெருமகள் நுதற்கண் ஆகப்
பெற்று, வான் செல்வம் கல்வி
அருமைவீ டளிப்பாள் யாவள்?
அவள்உயிர்த் துணைவன் காண
ஒருமுலை மறைந்து நாணி
ஒசிந்தபூங் கொம்பில் நின்றாள்''

—பரஞ்சோதி முனிவர்.

காமாட்சி என்பது 'காமக்கண்ணி' எனத் தமிழில் வழங்கும். சங்க காலத்திற் பெண்பாற் புலவர் ஒருவர், காமக்கண்ணி என்னும் பெயருடையவராக விளங்கியிருந்தார். அவர் 'வேலன் வெறியாடல்' குறித்து அழகுறப் பாடிய சிறப்புப் பற்றி, வெறிபாடிய காமக் கண்ணியார் என வழங்கப்பெற்றார். காமாட்சி என்னும் திருப்பெயரைத் தமிழில் காமக்கொடி எனவும், காமக்கோட்டியம்மை எனவும் பிறவாறும் சான்றோர்கள் வழங்கியுள்ளனர்.

### பெண்ணினத்திற்கு எடுத்துக்காட்டு :

மீனாட்சியும் காமாட்சியும் ஆகிய அம்பிகையின் இயல்புகள், பெண்ணினத்திற்கு அமைய வேண்டிய அரும்பெறற் பண்புகள் இவை யிவை என்பதனை இனிது உணர்த்துவன ஆகும். தமிழ்நாட்டுப் பெண்மகளிர் ஒவ்வொருவரும் எவ்வெவ்வகைப் பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதற்கு மீனாட்சியம்மையும், காமாட்சியம்மையும் எடுத்துக் காட்டுக்களாக விளங்குகின்றனர் எனலாம்.

### கணவனை உயர்த்தும் மனைவி :

ஒவ்வொரு பெண்ணும் தன்னை மணந்து கொண்ட கணவனுக்குப் பலவகை மாட்சிமைகளும் அமையும்படி ஒழுகுதல் வேண்டும். செல்வம் மிக்க கணவனை மணந்துகொண்டு அவ்வாற்றால் தான் புதிய சிறப்பைப் பெற்று வாழ்வதைவிட, ஏழைக் கணவனே யாயினும் தன்னால் அவன் சிறப்புற்று வாழும்படி செய்ய வல்ல பெண்மகளே, சிறப்புடையவள் ஆவாள். கணவனால் சிறப்பைப் பெறும் மனைவியை விட, கணவனுக்குத் தன்னாற் சிறப்பை யுண்டாக்கும் மனைவியே, சிறந்த பெண்ணின் நல்லாள் என மதிக்கப்பெறுவாள். மனைவியின் குணமாட்சிமையால் வறுமைமிக்க கணவனும் பெருவளம் பெறுவதுண்டு. 'இவள் வந்த பின்னரே இவ்வீட்டில் இவன் இவ்வளவு செல்வமும் வாழ்வும் பெற்றான்' என்று ஊரவர் கூறுமாறு ஒரு பெண் வாழ்தல் வேண்டும்.

''உடுத்தும் தொடுத்தும் பூண்டும் செரீஇயும்
தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி
விழவொடு வருதி நீயே!-இஃதோ
ஓர்ஆன் வல்சிச் சீரில் வாழ்க்கை
பெருநலக் குறுமகள வந்தென
இனிவ்ழவு ஆயிற்று என்னும்இவ் வூரே''

எனவரும் குறுந்தொகைப் பாடல், இக் கருத்தினை வலியுறுத்தும்.

''இல்லதென் இல்லவள் மாண்பானால்?
உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை?''

''புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை,
இகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை''

எனவரும் இனிய திருக்குறட் பாக்களும், இவ்வுண்மையை இனிது விளக்கும்.

### மீனாட்சியால் வந்த அரசாட்சி :

மீனாட்சியம்மை யாகிய தடாதகைப் பிராட்டியை மணந்து கொண்டதனால், சுந்தர பாண்டியன் ஆகிய சிவபெருமான், பல சிறப்புக்கள் பெற்றான். சடை கட்டியிருந்த அவன், மணிமகுடம் தரித்தான்; கொன்றை மாலையைப் போட்டிருந்த அவன், பாண்டியர் குலத்து வேந்தர்களுக்குரிய வேப்பம்பூ மாலையைச் சூடினான். பாம்புகளை அணிகலன்களாகக் கொண்டிருந்த அவன், மாணிக்கச் சுடர்ப்பூண் ஏந்தினான்: விடைக் கொடியை நீக்கிக் கயற்கொடியை எடுத்தான்; ஆண்டியாக இருந்த அவன், பாண்டியனின் மருமகனாகி உலகம் முழுவதையும் அரசாட்சி செய்தான். இவை எல்லாம் மீனாட்சியால் வந்த வாழ்வுதானே, சோமசுந்தரப் பெருமானுக்கு!

''சடைமறைத்துக் கதிர்மகுடம் தரித்து நறும்
கொன்றையந்தார் தணந்து வேப்பம்
தொடைமுடித்து விடநாகக் கலன்அகற்றி
மாணிக்கச் சுடர்ப்பூண் ஏந்தி
விடைநிறுத்திக் கயல்எடுத்து வழுதிமரு
மகன்ஆகி மீன நோக்கின்
மடவரலை மணந்துலகம் முழுதாண்ட
சுந்தரனை வணக்கம் செய்வாம்''

—பரஞ்சோதி முனிவர்.

### பானை பிடித்த பாக்கியம் :

இங்ஙனம் சொக்கநாதர் ஆகிய சிவபெருமான் பெற்ற சிறப்பெல்லாம், அவர் சொக்கநாயகி ஆகிய மீனாட்சியை மணந்துகொண்ட மாட்சிமையால் விளைந்த பயன்களேயாகும் எனலாம். ஏனெனில், மீனாட்சியை மணப்பதற்கு முன்னர்ச் சொக்கநாதர் ஆனையை உரித்து அதன் தோலைத்தான் போர்த்துக் கொண்டிருந்தார்; அடியும் பட்டார்; மானம் அழிந்து அங்கங்கே இரந்து பிச்சை எடுத்துத் திரிந்துகொண்டு இருந்தார். சொக்கநாயகி யாகிய மீனாட்சியை மணந்துகொண்ட பின்னரோ, பாண்டியனின் மருமகனாகி எல்லாப் பெருமைகளையும் எய்தி, உலகங்களையெல்லாம் ஆளத் தலைப்பட்டார். இத்தகைய பெருவாழ்வு மீனாட்சியம்மையினால் தான், சோமசுந்தரப் பெருமானுக்குக் கிடைப்பதாயிற்று. ஏர் பிடித்தவன் யாது செய்தல்கூடும்? யாவும் பானை பிடித்தவள் பாக்கியமே யன்யன்றோ!

''ஆனை யுரித்தும் அதள்தனைப்
போர்த்திட்டு, அடியும் பட்டு
மானம் அழிந்தங்கு இரந்தே
திரிந்த மதுரைச் சொக்கர்,
ஞானம் மிகப்பெற்று வாழ்வதெல்லாம்
சொக்க நாயகியாள்
பானை பிடித்த முகூர்த்தத்தினால்
வந்த பாக்கியமே''

—தனிப்பாடல்

மீனாட்சியம்மையினால்தான், சொக்கநாதப் பெருமான் அரச வாழ்வு பெற்றார்! சுந்தர பாண்டியன் என்னும் பெயர் தாங்கிப் பாண்டிய நாட்டை அரசாண்டார்.

''விண்ணரசும் பிறஅரசும்
சிலர்எய்த விடுத்தொரு நீ
பெண்அரசு தரக்கொண்ட
பேரரசு செலுத்தினையே''

''ஊன்கொண்ட முடைத்தலையில்
பலிகொண்டார்க்கு உலகேழும்
தான்கொண்ட அரசாட்சி
தந்தநினைப் பாடுவனே''

—குமரகுருபர சுவாமிகள்.

**மனைமாட்சி : குடும்பப் பண்பு :**

இனி, ஒரு பெண்ணின் நல்லாள் குடும்ப வாழ்க்கைக்கு ஏற்ற குணங்கள் (மனைத்தக்க மாண்புகள்) உடையவள் ஆகவும், தன் கணவனின் வருவாய்க்கு ஏற்ப அளவறிந்து குடும்பம் நடத்தும் இயல்பு (மனைமாட்சி) வாய்ந்தவள் ஆகவும் இருப்பது, இன்றியமையாதது.

''மனைத்தக்க மாண்புடையள் ஆகித்
தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை''

''மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின்
வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்''

—திருக்குறள்.

ஒரு குடம் நீராற் சோறுசமைத்து உண்ணுமாறு வறுமை நேர்ந்த காலத்தும், இனிமை கலந்த நன்மொழியும், கணவன்மேற் காதலும், குடும்ப வாழ்க்கைக்குரிய நல்லியல்புகளும் உடையவளாய், கடல்நீரை எல்லாம் வற்ற உண்ணும் அளவிற்குப் பெருந்திரளான சுற்றத்தார் ஒருங்கேவரினும், செல்வம் நிறைந்திருந்தாற் போல மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரிப்பவளாய், மிகவும் திறம்படக் குடும்பம் நடத்துதலைக் குறிக்கோளாகக் கொண்டு, ஒரு சிறந்த பெண்மகள் ஒழுகுதல் வேண்டும்.

''குடநீர்அட் டுண்ணும் இடுக்கட் பொழுது
கடல்நீர் அளவுண்ணும் கேளிர் வரினும்
கடன்நீர்மை கையாறாக் கொள்ளும் மடம்
மொழி
மாதர் மனைமாட்சி யாள்''

—நாலடியார்

**காமாட்சியின் மனைமாட்சி :**

ஒரு குடும்பப் பெண்ணுக்குரிய இவ்வியல்பிற் சிறந்து திகழ்ந்து, எடுத்துக் காட்டாக விளங்குபவள் காமாட்சியம்மை. தன் கணவன் ஆகிய சிவபெருமான்அளித்த இரண்டு நாழியளவு நெல்லைக்கொண்டே, இவ்வுலகில் 32 அறங்களையும் காமாட்சியம்மை குறைவறச் செய்து முடித்தாள்.

தொல்லை மறைதேர் துணைவன்பால் ஆண்டுவரை
எல்லை இருநாழி நெற்கொண்டோர்-மெல்லியலாள்
ஓங்குலகில் வாழும் உயிர்அனைத்தும் ஊட்டுமால்
ஏங்கொலிநீர்க் காஞ்சி யிடை

இச் செய்யுள் தண்டியலங்காரம் என்னும் நூலில், பொருட்குறை விசேடம் என்னும் அணியியலுக்கு மேற்கோள் ஆகும். இங்ஙனம் காமாட்சியம்மை குடும்ப வாழ்க்கைக்குரிய மனைமாட்சித் திறனில் சிறந்து விளங்கி, அறம் பல வளர்த்த அருமைப்பாட்டினைப் புகழ்ந்தோதும் சான்றோர்களின் பொருண்மொழிகள் அளவிடற்கரியன.

நனைமாட்சி மென்கொன்றைத் தாரோன்
தரும்இரு நாழி நெல்லால்
வினைமாட்சி கொண்டு உயிர் எல்லாம்
அளித்தருள் மேன்மையினால்
மனைமாட்சி எய்தும் உனக்கே
பெருங்கற்பு மாட்சியன்றிப்
பினைமாட்சி யார்க்குண்டு? உலகீன்ற
குன்றைப் பெரியம்மையே

—சிவப்பிரகாச சுவாமிகள்

இல்லாளே முப்பத் திரண்டறமும் செய்திருப்பச்
செல்லார் பொழிற்காசிச் செல்வனார்-மெல்லப்
பரக்கின்ற புண்ணீர்ப் படுதலைகொண் டையம்
இரக்கின்ற வாறென்சொல் கேன்?

—குமரகுருபர சுவாமிகள்

இங்ஙனம், 'அனந்தகோடிப் பிள்ளைகள் பெற்றுடைய பெருமனைக் கிழத்தியாய், இரு நாழி நெற்கொண்டே எண்நான்கு அறமும் செய்து' குடும்பம் பேணிய காமாட்சியம்மையின் பெருஞ் சிறப்பு, நம் சமய ஆசிரியர்களால்பெரிதும் புகழ்ந்து போற்றப்பட்டுள்ளது.

நச்சித் தொழுவீர் காள்நமக் கிதுசொல்லீர்
கச்சிப் பொலிகா மக்கொடி யுடன்கூடி
இச்சித் திரும்பூ ளையிடம் கொண்டஈசன்
உச்சித் தலையிற் பலிகொண் டுழல்ஊணே

—சம்பந்தர்.

காரிரும் பொழிற் கச்சி மூதூர்க்
காமக்கோட்டம் உண்டாக நீர்போய்
ஊரிடும் பிச்சை கொள்வ தென்னே
ஓணகாந்தன் தளியு ளீரே.

—சுந்தரர்.

**கணவன் வழிபாடு :**

காமாட்சியம்மையின் வேறு சில பண்புகளும் ஈண்டுக் கருதத் தக்கன. கற்புடை மனைவிக்குக் கணவனை என்றும் நீங்காதிருந்து போற்றி வழிபடுதல், ஒரு தலைசிறந்த கடமையாகும். கொழுநற் றொழுதெழுதல், குடும்பம் பேணும் குலமகளிர்க்கு உரிய அழகு.

''பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்
சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு''

என்னும் திருக்குறளால் திருவள்ளுவர், கணவனை வழிபடுதல், கற்புடை மகளிர்க்கு இன்றியமையாப் பண்பு எனக் குறித்தருளினார். காமாட்சியம்மை திருவேகம்பநாதரை என்றும் முடிவிலாப் பூசை இயற்றிவரும் திறனைப் பெரியபுராணம், காஞ்சிப்புராணம், முதலிய அருள்நூல்கள் விளக்கியுரைக்கின்றன. மேலும், இறைவன் குழையும்படி அம்மை தழுவிய செயல், கணவன் முரடனாக இருப்பினும், மனைவி தன்னுடைய மென்மைப் பண்பால் அவனை நல்வழிப்படுத்தும் கடப்பாடு உடையவளாவாள் என்பதைப் புலப்படுத்துகின்றது எனலாம்.

இருவரின் சிறப்பு இயல்புகள் :

(1)இங்ஙனம் கடவுட் பண்பு நலங்களை யெல்லாம், நாம் நம் கற்றறிவும் சிற்றறிவும் கொண்டு கருதி அளந்தறிய முற்படுதல், நமக்கு எளிதில் இயல்வதொன்று அன்றாயினும், கடவுட் கோட்பாடுகளின் தத்துவ நுட்பக் கருத்துக்களைத் தக்காங்கு ஓரளவேனும் உணர்ந்து கொள்ள முயலுதல், நலம் பயப்பதே யாகும்.

(1) மீனாட்சியம்மை பெண்ணரசு (பெண்களுக்கெல்லாம் அரசியாகத் சிறந்து திகழ்பவள்; பெண்ணாக விளங்கியும் திறம்பட அரசாட்சி செலுத்தியவள்.)

நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா-வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு.

—நளவெண்பா

(2) காமாட்சியம்மை பெண்ணின் நல்லாள். இவ்வாறே பெரியபுராணம் காமாட்சியம்மையைக் குறிப்பிடுகின்றது. ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் காமாட்சியம்மையைப் ''பெண்ணின் நல்லவள் ஆயின பெருந்தவக் கொழுந்து'' எனச் சிறந்தெடுத்துக் கூறிப் போற்றுகின்றார்.

(3) மீனாட்சியம்மை கணவனை உயர்த்தும் மனைவியாக விளங்குகின்றாள்; காமாட்சியம்மை கணவனை வழிபடும் மனைவியாகத் திகழ்கின்றாள்.

(4) ''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்'' எனப் பாரதியார் பாடுவதுபோல, மீனாட்சியம்மை அரசியல் வினைமாட்சியில் வல்ல புதுமைப்பெண்போலப் பொலிகின்றாள். காமாட்சியம்மையோ சிக்கனமும் செம்மைத் திறமும் உடையவளாய், இல்லறம் நடத்தும் மனைமாட்சியில் வல்லவளாக விளங்குகின்றாள். சுருங்கக் கூறிலுறின், துரைத்தனத்திற்கு மீனாட்சியும், குடித்தனத்திற்குக் காமாட்சியும் இணையற்ற எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர் எனலாம்.

(5) பெண்மையின் பெருமிதம் மீனாட்சியாகவும், அருளியல்பு காமாட்சியாகவும் பிறங்குகின்றன. மீனாட்சி பசுமைநிறம் (செல்வச் செழிப்பு) உடையவள்; காமாட்சி பொன்மை நிறம் (பண்பாட்டின் தூய்மைச்சிறப்பு) வாய்ந்தவள். உலகியல் வாழ்வில் மக்களுக்குச் செல்வச் செழிப்பும், பண்பாட்டுச் சிறப்பும் ஆகிய இரண்டும் வேண்டும் என்னும் உண்மையை, அருளுருவாகிய அம்பிகையின் இவ்விரு கூறுகளும், நமக்குச் செவ்விதிற் புலப்படுத்துகின்றன.

முடிவுரை :

(2) ''உலகப் படைப்பில் மிகவும் அழகும் கவர்ச்சியும் உடையவர்கள், கடவுளின் கலைத் திறனில் இறுதியாயும் இணையற்றும் சிறந்து விளங்குபவர்கள், காணவும் கருதவும் படக்கூடிய எல்லா நலங்களும் சிறப்புறப் பொருந்திப் புனித-தெய்விக-நல்ல-விழைதக்க இனிய நிலையில் திகழ்பவர்கள்'' என்று ஜான்மில்ட்டன் என்னும் ஆங்கிலப் பெருங்கவிஞர் புகழ்ந்து கூறும் பெண்குலத்திற்கே, இணையற்ற இனிய எடுத்துக்காட்டாக, எல்லா வகைகளிலும் சிறந்து விளங்கும் மதுரை மீனாட்சியம்மையையும், காஞ்சி காமாட்சியம்மையையும், நாம் நம் மனமொழி மெய்களினால் நன்கினிது வழிபட்டு நலம்பெற்று உய்ய முயலுவோமாக!

1. "Let us, then, if you please, in the first place, announce to the gods that we are not enquiring about them; we do not presume that we are able to do so; but we are only enquiring about the meaning of men in imagining their forms and worshipping them",

—*Socrates, in Plato's Cratylus.*

2. "O woman! Fairest of Creation! Last and best
Of all god's works! Creature in whom excelled
Whatever can to sight or thought be formed,
Holy, Divine, Good, Amiable and Sweet".

—*John Milton.*

## பொறுத்தருள்க

தாள்கள் தட்டுப்பாடு, அரசுத் தபால் தலைகள் (Service Stamp) போதிய அளவு கிடைக்காமை முதலிய காரணங்களால், ''திருக்கோயில்'' இதழ்கள் வெளிவருவதில், காலதாமதம் நேர்ந்து வருகின்றது. அன்பர்கள் தயவு கூர்ந்து பொறுத்தருள்க!

—ஆசிரியர்

# மதுரைக் கோயில் அமைப்பு

## முன்னுரை :

நம் செந்தமிழ்த் திருநாடு, கோயில்களுக்கும் கோபுரங்களுக்கும் மிகவும் புகழ் பெற்றது. தமிழ்நாட்டிலுள்ள சிறந்த பல திருக்கோயில்களில், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், சிறப்பும் முதன்மையும் மிக்கதாகும்.

தமிழ் மக்களின் பண்பட்ட உள்ளம்பரந்து விரிந்திருப்பது போல, மதுரைக் கோயிலும் பெரிதும் பரந்து விரிந்து சிறந்த நிலையில் அமைந்துள்ளது.

பணிஇயர் அத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே

எனப் புறநானூற்றுப் புலவர் ஒருவர், கோயிலை 'நகர்' என்னும் சொல்லாற் குறிப்பிட்டதற்கேற்ப, மதுரைக் கோயில், ஒரு நகரம் என்றே சொல்லலாம்படி, மிகப் பெரிய தொன்றாகத் திகழ்கின்றது.

அதன்கண் உள்ள கலையழகும், சிலையழகும் அளவிடற் பாலன அல்ல. அக்கோயிலினுள் இருக்கும் பல மண்டபங்களும், அரிய பல சிற்பத் திருவுருவங்களும், பொற்றாமரைக் குளமும், வானளாவ ஓங்கி விளங்கும் விமானங்களும், கண்பெற்ற பயனாகக் கண்டு களிக்கத் தக்கவை. அங்குள்ள ஒவ்வொரு கல்லும் கவி பாடும், இசை மிழற்றும். அங்கேயுள்ள சுவர்களெல்லாம் காவியங்களும், ஓவியங்களும் நிறைந்திருக்கும். மதுரை நகரில் இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களை நினைவுறுத்தும் பற்பல சிற்பங்களையும், சித்திரங்களையும் அங்கே காணலாம். தமிழர் நாகரிகத்திற்கும் சிறந்த பண்பாட்டிற்கும், ஒரு பெரிய நிலைக்களனாகவும் எடுத்துக் காட்டாகவும், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் சிறந்து விளங்குகின்றது.

மதுரை நகரின் நடுவில், கிழக்குத் திசை நோக்கிக் கோயில் அமைந்துள்ளது. கோயிலின் நான்கு பெரிய கோபுரங்களும், தொலைவில் இருந்து காணும்போதே கண்களுக்குப் பெரு விருந்து அளிக்கும். மேற்குக் கோபுரம் வருகின்றவர்களையெல்லாம் வரவேற்கும். இதிற் புராணகதைகள் பல, சுதையால் எழிலுறத் தீட்டப் பெற்றுள்ளன. தெற்குக் கோபுரம் மிகவும் உயரமானது. அதன் உயரம் 150 அடி. வடக்குக் கோபுரத்துக்குப் பக்கத்தில் 5 இசைத் தூண்கள் வரிசையாய் நிறுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிலும் 22 தனித்தனித் தண்டுகள் இருக்கின்றன. அவைகளை மெல்லெனத் தட்டினால், பல வியக்கத்தக்க ஓசைகள் தோன்றும். கோயிலுக்குள்ளே 8 கோபுரங்களும், விமானங்களும் உள்ளன. வலப்புறம் மீனாட்சியம்மை கோயிலும், இடப்புறம் சுந்தரேசுவரர் கோயிலும் அழகுற அமைந்துள்ளன.

அம்மையின் கோயிலுக்கு முன்னே வளைவுள்ள அஷ்டசக்தி மண்டபமும், சுந்தரேசுவரர் கோயிலுக்கு முன்னே பெரிய கோபுரமும் இருக்கின்றன. இதன் பக்கத்திற் கருப்பண்ணசுவாமி கோயில் உள்ளது. மதுரை 64 சக்தி பீடங்களுள் தலைசிறந்ததொன்றாதலின், மீனாட்சியம்மையை முதலில் கண்டு தரிசித்துக் கொண்டே, அன்பர்கள் சுந்தரேசுவரப் பெருமானை வணங்கச் செல்வது வழக்கம். கோயிலுக்குள் ஆடி வீதியும், வெளியிற் சித்திரை வீதி, ஆவணி மூலவீதி, மாசிவீதி முதலிய பல வீதிகளும் உள்ளன. திருவிழாக் காலங்களில் முறையே அந்தந்த வீதிகளிற் சுவாமி புறப்பாடு நிகழும். கோயிலின் சுற்றளவு கிழக்கும் மேற்குமாக 847 அடி. தெற்கு வடக்காக 730 அடி.

## மீனாட்சியம்மை கோயில் :

அம்மை கோயிலுக்கு முன்புள்ள அஷ்டசக்தி மண்டபத்தில், கௌமாரி, ரௌத்திரி, வைஷ்ணவி, மகாலட்சுமி, எக்ஞரூபிணி, சாமளை, மகேசுவரி, மனோன்மனி என்னும் எட்டுச் சக்தியின் வடிவங்கள் உள்ளன. மீனாட்சியம்மை வரலாறு முழுவதும், அழகிய ஓவியங்களாகத் தீட்டப் பெற்றுள்ளது.

இதனை அடுத்தது மீனாட்சி நாயக்கன் மண்டபம், திருமலை நாயக்கரின் அமைச்சர்களுள் ஒருவர் கட்டியது. 160 அடி நீளமும், 6 வரிசைகளில் அமைந்த தூண்களும் உடையது. இதன் மேல் விட்டத்தில் 12 இராசிகள் சதுர வடிவில் அமைக்கப் பெற்றிருப்பது, கண்டு

மகிழ்தற்குரியது. இங்குப் பூக்கடைகள் முதலியன உள்ளன.

இதற்கு அடுத்து முதலி மண்டபம் இருக்கின்றது. இங்கு பிட்சாடனர், முனிபத்தினி, தாருகாவன முனிவர், மோகினி, கடந்தை முதலியார் ஆகியோரின் சிலைகள் உள்ளன. இதனைக் கடந்து உள்ளே சென்றாற் பொற்றாமரைக்குளம் காணப்படும். இதிலேயேசங்கப் பலகை இருந்ததாகக் கூறுவர். இக்குளத்தின் தெற்குச் சுவரில் திருப்பனந்தாள் காசிமடம் சீலத்திரு அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் பொருளுதவியால், 1330 திருக்குறட் பாடல்களும், வெண்சலவைக் கற்களில் தீட்டிப் பதிக்கப் பெற்று இருத்தலைக் காணலாம்.

பொற்றாமரைக் குளத்திற்கு மேற்கில், அம்மை சந்நிதிக்கு எதிரில், கிளிக்கூட்டு மண்டபம் உள்ளது. யாளிகளின் சிற்பங்கள் இருப்பதனால், இதனை யாளி மண்டபம் என்றும், சங்கிலி மண்டபம் என்றும் கூறுவர். இங்குப் பஞ்சபாண்டவர் சிலைகள் இருக்கின்றன. இம் மண்டபத்தில் மீனாட்சியம்மை சந்நிதியின் பிரதானவாயில் உள்ளது. சித்தி விநாயகர் வலப்புறமும், குமரர் சந்நிதி இடப்புறமும் உள்ளன. தெற்கு வாயிலை அடுத்துக் காசி விசுவநாதர் விசாலாட்சி சந்நிதியும், செவ்வந்தீசுவரர்கோயிலும், கிளிக்கூடும் உள்ளன. வடபுறத்தில் சுவாமி கோயிலுக்குச் செல்லும் நடுக்கட்டுக் கோபுர வாயில் உளது. இங்குப் பல அழகிய சிற்பங்கள் உள்ளன.

அம்மை கோயிலுக்குள் இரண்டாம் பிராகாரத்தில் கிழக்கில் திருமலை நாயக்கர் மண்டபமும், மேற்கில் நவராத்திரி கொலுமண்டபமும், கூடற்குமரர் சந்நிதியும் இருக்கக் காணலாம். இப்பிராகாரத்துக்கு அடுத்து அறுகாற் பீடவாயில் உள்ளது. இவ்விடத்தில்தான் குமரகுருபர சுவாமிகள் அருளிய 'மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்' அரங்கேற்றப் பெற்றதாகக் கூறுவர். பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற்புராணமும் இங்கேயே அரங்கேறியது. மூலத்தானத்தில் மீனாட்சியம்மை கண்கொள்ளாப் பேரழகுடன், கடைக்கண் நோக்கிற் கருணை பொழிய, இரண்டு திருக்கைகளுடன், இளமைநலம் பொலிய, இனிது எழுந்தருளிக் காட்சி யளித்து நலம் புரிந்து வருகின்றாள்.

## சுந்தரேசுவரர் கோயில் :

கிழக்குத் திசையில் உள்ள பெரிய கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால், வீரவசந்தராய மண்டபம் உள்ளது. இது முத்துவீரப்ப நாயக்கரால் கி. பி. 1609-இல் கட்டப்பெற்றது. இதன் வடபுறத்தில் ஆயிரக்கால் மண்டபம் உள்ளது. (கி. பி. 1559). மதுரையில் நாயக்க மரபினரின் ஆட்சியினை முதன் முதலில் நிறுவிய விசுவநாத நாயக்கர் அவர்களின் முதலமைச்சரும், படைத்தலைவருமாக விளங்கிய அரியநாத முதலியார் என்பவர், இதனைக் கட்டினார். அவருடைய உருவச் சிலையும் இங்கு இருக்கின்றது. அற்புதமான சிற்ப வேலைப்பாடுகள் இங்குக் காணப்படும்.

வீரவசந்தராய மண்டபத்துக்குத் தென்புறத்தில் திருக்கல்யாண மண்டபம் உள்ளது. இது விசயரங்க சொக்கநாத நாயக்கர் அவர்களாற் கட்டப் பெற்றது. இதில் சித்திரை மாதத்தில் மீனாட்சி-சுந்தரேசுவரர் திருமண விழா நடைபெறும். இதற்கு எதிரில் மருதப்ப சேர்வைகாரர் கட்டிய சேர்வைகாரர் மண்டபமும், முத்துராமய்யர் மண்டபமும் அமைந்துள்ளன.

கோயிலிலுள்ள மண்டபங்களிலெல்லாம் மிகவும் சிறப்புற்றுக் காண்டொறும் கண்ணையும் கருத்தையும் கவர்வதாகத் திகழ்வது கம்பத்தடி மண்டபம். துவஜ ஸ்தம்ப மண்டபம் என்றும் இதனைக் கூறுவர். சகம் 1494-இல், கிருஷ்ண வீரப்ப நாயக்கர் என்பவரால் முதன் முதலில் கட்டப்பெற்ற இம்மண்டபம், அண்மையில் சில காலத்திற்கு முன்பு நாட்டுக் கோட்டை நகரத்தார் பெருமக்களாற் புதுப்பிக்கப் பெற்றது. அக்கினி வீரபத்திரர், அகோர வீரபத்திரர், ஊர்த்துவதாண்டவர், பத்திரகாளி ஆகியோரின் திருவுருவங்கள், மிகவும் வியத்தகு நிலையிற் பெரிய அளவில் விளங்குகின்றன.

கொடி மரத்தின் இரு புறங்களிலும் பல சிற்பங்களைக் கொண்ட எட்டுப் பெரிய தூண்கள் உள்ளன. இவற்றில் கைலாசாரூடர் சந்திரசேகரர் ரிஷபாந்திகர் இலிங்கோற்பவர் காமதகனர் நடராசர் சுகாசனர் காலசம்மாரர் மார்க்கண்டேயர் சோமசுந்தரர் கல்யாண சுந்தரர் திரிபுராந்தகர் சங்கர நாராயணர் அர்த்தநாரீசுவரர் ரிஷபாரூடர் ஏகபாதமூர்த்தி சக்ரதரர் சலந்தரானுக்கிரகர் தட்சிணாமூர்த்தி கஜசம்மாரர் சண்டேசானுக்கிரகர் சோமாஸ்கந்தர் கிராதார்ச்சுனர் ருத்திரர் பிட்சாடனர் என்னும் திருவுருவங்கள் சிற்பத்திறன் அமையச் சிறந்து விளங்குகின்றன.

கம்பத்தடி மண்டபத்திற்கு வடக்கில் மண்டப நாயக மண்டபம் உள்ளது. இதனை 'நூற்றுக்கால் மண்டபம்' என்பர். இது சின்னப்ப நாயக்கர் என்பவரால், சகம் 1448-இல் கட்டப்பட்டது.

இதற்குத் தென்புறம் உள்ளது திருஞான சம்பந்தர் மண்டபம். இதனைக் கட்டியவர் கிருஷ்ண வீரப்பநாயக்கர். சுவாமி கோயிலின் பிரதான வாயிலைக் கடந்து, தென் பிராகாரத்துக்குச் சென்றால் முக்குறுணிப் பிள்ளையார் சந்நிதியைக் காணலாம். இப்பிராகாரத்தின் வடமேற்கில் கபிலர் பரணர் நக்கீரர் முதலிய சங்கப் புலவர் மண்டபம் உள்ளது. வடக்குப் பிராகாரத்தில் சங்கப் புலவர் உலா மண்டபம் இருக்கின்றது. வடக்குப் பிராகாரத்தில் தல விருட்சம் ஆகிய பழைய கடம்ப மரம் வெள்ளித் தகடு பொருத்தப் பெற்றுள்ளது

இக்கோயிலில் வெள்ளியம்பலம் உள்ளது. இங்கு நடராசப் பெருமான் கால்மாறி ஆடிக் காட்சி தருகின்றார். சாதாரணமாக வலக் காலை ஊன்றி இடக்காலைத் தூக்கி ஆடுவதனை நடராசப் பெருமானின் திருவுருவங்

களிற் காணலாம். ஆனால் இராசசேகரன் என்னும் பாண்டிய மன்னன் ஒருவனின்வேண்டு கோளுக்கு இணங்க, இங்குப் பெருமான் இடக் காலை ஊன்றி வலக்காலைத் தூக்கி நடனம் ஆடுகின்றார்.

இக்கோயிலில் நடராசருக்குப் பஞ்ச சபைகள் உள்ளன. முதற் பிராகாரத்தில் கனக சபையும், இரத்தின சபையும், வெள்ளியம்பலத்தில் இரசித சபையும், நூற்றுக்கால் மண்டபத்தில் தேவசபையும், ஆயிரக்கால் மண்டபத்தில் சித்திர சபையும் உள்ளன.

மூலத்தானத்தில் சொக்கலிங்கப் பெருமான் (சுந்தரேசுவரர்) எழுந்தருளியுள்ளார். இங்குள்ள விமானம் இந்திரவிமானம் எனப்படும். அஃது எட்டு யானைகளால் தாங்கப் பெறுவது. 6 யானைகள் வெளிப்புறத்திலும், 2 யானைகள் மூலவர் பக்கத்திலும் உள்ளன. மூலவருக்குச் சொக்கலிங்கர் என்றும், உற்சவருக்குச் சோமசுந்தரர் என்றும் பெயர்கள் வழங்கும்.

## மண்டபங்கள்

சுந்தரேசுவரர் கோயிலின் கிழ்ப்புறக் கோபுரத்துக்கு எதிரில் உள்ளது புதுமண்டபம். இதனை 'வசந்த மண்டபம்' என்றும் கூறுவர். திருமலை நாயக்கர் கட்டியது. 333 அடி நீளமும், 105 அடி அகலமும், 25 அடி உயரமும் உள்ளது. 4 வரிசைகளில் 124 தூண்கள் உள்ளன. தூண்களிற் பலவகைச் சிறந்த சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

புதுமண்டபத்துக்குக் கிழக்கே இராய கோபுரம் உள்ளது. 174 அடி நீளமும், 107 அடி அகலமும், நுழைவாயில் 22 அடி அகலமும் உள்ளது. 60 அடி உயரமுள்ள நான்கு தூண்கள் மிகவும் சிற்ப வேலைப்பாடுகளுடன் விளங்குகின்றன. மற்றும் நகாரா (மேள வாத்தியம்) மண்டபம், தேரடி, மண்டபம், மைய மண்டபம் முதலிய பிறவும் உண்டு. இவைகள் அனைத்தும் நேரிற் கண்டுகளிக்கத்தக்க சிறப்புடையவை.

## பிற கோயில்கள்

திருவாப்புடையார் (திருவாப்பனூர்)க் கோயில், வடதிருவாலவாய்க் கோயில், காஞ்சன மாலை கோயில், ஆஞ்சநேயர் கோயில், தென் திருவாலவாய்க் கோயில், பைரவர் கோயில், செல்லத்தம்மன் கோயில், சப்தமாதர் வீர பத்திரர் கோயில், மாரியம்மன் கோயில், முத்தீசுவரர் கோயில், நன்மை தருவார் கோயில், கூடலழகர் கோயில், சீநிவாசப் பெருமாள் கோயில், மதன கோபாலசாமி கோயில், முனீசுவரன் கோயில், பிரசன்ன வேங்கடேசப்பெருமாள் கோயில் முதலிய வேறு பல கோயில்களும் மதுரையில் உள்ளன. அவைகளும் தரிசித்து மகிழத் தக்கவை. —ஆசிரியர்.

---

# நிருவாக அதிகாரிகள் நியமனம்

1959-ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டம் 22, இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 45(1)பிரிவின்கீழ், கோயில்களின் நல்ல நிர்வாகம் குறித்து, பின்வரும் கோயில்களுக்கு நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்;

(1) பட்டுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், மஞ்சக்குடி, அஞ்சேல் என்னும் பெருமாள் கோயிலுக்கு, பட்டுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வட்டம், மீமிசல் அருள்மிகு கல்யாணராமசாமி கோயிலின் நிர்வாக அதிகாரியே, இரண்டிற்கும் உரிய பொது நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். (ந.க. 52838/80-பி6 நாள் 6.12.80)

(2) திருச்சி மாவட்டம், லால்குடிவட்டம், புதூர் உத்தமனூர்க் கிராமம், அருள்மிகு துரைசாமி கோயிலுக்கு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். திருச்சிமாவட்டம் லால்குடிவட்டம், கணக்கிலியா நல்லூர், அருள்மிகு சர்வலோகநாதசுவாமி கோயிலுடன், இக்கோயில் இணைக்கப்பெற்றுள்ளது. (ந.க. 77035/80-பி6 நாள் 3.12.80)

(3) திருச்சி மாவட்டம், டி. வளவனூர், அருள்மிகு இலட்சுமிநாராயணப் பெருமாள் கோயிலுக்கு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இக்கோயிலானது திருச்சி மாவட்டம், லால்குடிவட்டம், மாந்துறை அருள்மிகு ஆம்பிரவனேசுவரர் கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளது. (ந.க. எண். 55196/80-பி6 நாள் 7.12.80)

(4) சென்னை வால்டாக்ஸ் சாலை அருள்மிகு கல்யாணவேங்கடேசப் பெருமாள் கோயிலுக்கு நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இக்கோயிலானது, சென்னை நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையிலுள்ள, அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளது. (ந.க.எண். 59862/80-பி6 நாள் 13.12.80)

(5) பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டம், ஊதியூரி அருள்மிகு உத்தண்டவேலாயுதசுவாமி கோயிலுக்கு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டம், சிவன்மலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயிலுடன், இக்கோயில் இணைக்கப்பட்டுள்ளது. (ந.க.எண். 81380/80-பி6 நாள் 15.12.1980)

## இரத்தினகிரியில்

# அறநிலைய அமைச்சரின் சிறப்புரை

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

*தமிழக அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள், 12-10-80 நாளன்று, இரத்தினகிரி பால முருகன் திருக்கோயிலில், மலைமீது கட்டப்பட்டுள்ள குடிநீர்த் தேக்கத் தொட்டியினை (90,000 லிட்டர் கொள்ளளவு) திறந்து வைத்து நிகழ்த்திய சிறப்புரை :*

சிறப்பான இந்த விழாவின் தலைவர் தமிழக இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆணையாளர் அவர்களே! இந்த விழாவிற்குக் காரணமாக விளங்குகின்ற தவத்திரு பாலமுருகனடிமை அவர்களே! அருமைச் சகோதரர் அரங்கநாதன் அவர்களே! ஆற்காடு சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினர் அருமைச் சகோதரர் சேதுராமன் அவர்களே! இந்த ஆலயத்திற்காக உழைத்துக் கொண்டிருக்கின்ற பெருமக்களே! தாய்மார்களே! நண்பர்களே!

இரத்தினகிரி திருக்கோயிலுக்கு இரண்டாவது முறையாக வருகின்ற ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த தவத்திரு பாலமுருகனடிமை அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். முதல்முறையாக நான் இங்கே அவர்கள் உருவாக்கிய சித்தமருத்துவமனையினைத் துவக்குவதற்காக டிசம்பர் திங்கள் முதல்நாள்78-ஆம் ஆண்டு வருகின்ற ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதற்குப் பிறகு நான் இப்போது இரண்டாவது முறையாக அவர்களாலே அழைக்கப் பெற்று இன்றைக்கு இரண்டு நிகழ்ச்சிகளிலே இந்தத் திருக்கோயிலின் தொடர்பான நிகழ்ச்சிகளிலும், மூன்றாவதாக இங்கே இவர்களது ஆதரவுடன் நடைபெறுகின்ற திருக்குறள் மாநாட்டிற்கும் கலந்து கொள்ளுகின்ற ஒரு வாய்ப்பும் எனக்குக் கிடைத்திருக்கிறது. முதல் முறை வந்தபொழுது சித்த மருத்துவமனையைத் திறந்து வைக்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. இந்தமுறை வந்திருக்கிற எனக்கு அவர்கள் பிறந்த கீழ்மின்னல் கிராமத்திலே நம்முடைய குழந்தைகள் படிப்பதற்கான பள்ளிக் கட்டிடத்தைத் திறந்து வைக்கவும், இந்த ஆலயத்திலே வருகிற பக்தர்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கான ஒரு குடிநீர்த் தொட்டியை ஏறத்தாழ அறுபது அல்லது எழுபதினாயிரம் ரூபாய் செலவில் பக்கத்திலிருக்கிற பாலாற்றிலிருந்து இங்கே கொண்டு வருகின்ற அந்த ஒரு நல்ல முயற்சியைத் துவக்குகின்ற இந்தப் பணியையும் எனக்கு அளித்திருக்கிறார்கள்.

கடந்த முறை நான் இங்கே வந்தபோது நான் கலந்து கொண்டு ஆற்றிய சொற்பொழிவை அவர்கள் புத்தகமாக வெளியிட்டு இருக்கிறார்கள். இந்தப் புத்தகம், எனக்கு முன்னரே அவர்களாலே அனுப்பி வைக்கப் பட்டது. ஆனால் நான் கொஞ்சம் அதிக வேலைப்பளுவின் காரணமாகவும் இருந்திருக்கலாம் அல்லது நானே பேசிய பேச்சுத்தானே என்ற ஒரு அலட்சியம் காரணமாகவும் இருந்திருக்கலாம், நான் மேலோட்டமாக அதைப் பார்த்துவிட்டு அன்றைக்கு அதை வைத்துவிட்டேன். ஆனால் இப்பொழுது இங்கே வந்து உட்கார்ந்ததற்குப் பிறகு அந்தப் பேச்சை—புத்தகமாக வெளியிட்டிருக்கிற அந்த நூலை என்னிடத்திலே தந்தார்கள். அதை நான் புரட்டிப் பார்க்கிறபொழுது, படிக்கின்ற ஒரு ஆர்வம் என்னுள்ளே எனக்கே ஏற்பட்டு, மேலும் மேலும் விரைவாக அதனைப் படித்து முடிக்க வேண்டுமென்ற உணர்வில் படித்து முடித்தேன். படித்ததற்குப் பிறகுதான், இந்தப் பேச்சு நான் பேசிய பேச்சுத்தானா என்கின்ற ஒரு சந்தேகம் என்னுள்ளத்திலேயே எழுந்தது. காரணம் இவ்வளவு விஷயங்களை, அது உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து வந்திருக்கின்ற கருத்துக்களாக அன்றைக்கு வெளிவந்திருக்கின்றன. அது எந்த உணர்வாலே அன்றைக்கு நான் கலந்து கொண்டிருக்கிறேன் என்பதனை ஒரு ஒன்றரை ஆண்டு காலத்திற்குப் பிறகு என்னாலே இன்றைக்கு நான் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. ஆனால் இந்த உரையைப் படித்ததற்குப் பிறகுதான் அந்த அடிப்படை உணர்வும், அந்த உணர்வினாலே எழுந்த ஒரு ஆவேசமும், அந்த ஆவேசம் வெளியிட்ட சில கருத்துக்களும், என்னையே ஆச்சரியத்திற்குள்ளாக்குகிற விதத்தில் அமைந்திருக்கின்ற ஒரு அற்புதத்தை நான் பார்த்தேன். ஒருவேளை இந்தத் திருத்தலத்திலே வந்ததின் காரணமாக அந்த உணர்வுகள் எனக்கு ஏற்பட்டதோ என்று கூட ஒரு ஐயப்பாடு என்னுள்ளத்திலே எழுகின்ற அளவுக்கு, அந்தக் கருத்துக்கள் பல அமைந்திருக்கின்றன. அதை இயற்கையாகவே அப்படி ஒரு வாய்ப்பை அவர்கள் எனக்கு ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.

நான் அன்றைக்கே சொல்லியிருக்கிறேன். இங்கே அவர்கள் ஆலயத் திருப்பணிக்காக என்னை அழைத்திருப்பார்களேயானால் அது வழக்கமாக நடைபெறுகின்ற ஒன்று என்றுகூட நான் எண்ணியிருப்பேன். ஆனால் மக்கள் பணிக்காக மருத்துவமனையைத் திறந்துவைக்கின்ற பணிக்கு அழைத்திருக்கிற அந்த சிறப்பு, நான் போற்றி வணங்குவதற்குரிய- நன்றி தெரிவிப்பதற்குரிய ஒன்று என நான் அதைக் குறிப்பிட்டேன். அதைத் தொடர்ந்துதானோ என்னவோ, இரண்டாவது முறையாகவும் கல்விக்கண்ணை வழங்குகின்ற பள்ளிக் கட்டிடத்தைத் திறக்கவும், மக்களுடைய அடிப்படைத் தேவையான குடிநீரை வழங்குகின்ற ஒரு தொட்டியைத் திறந்து வைப்பதற்கான அந்த நிகழ்ச்சியை அளித்து இங்கே கலந்து கொள்ளுகின்றவாய்ப்பு எனக்கு வழங்கியிருக்கிறார்கள். நான் அதற்காக இன்று தவத்திரு அடிகளார் அவர்களுக்கு என்னுடைய நன்றியினை மீண்டும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இந்தப் பேச்சை நான் படித்ததற்குப் பிறகு, மீண்டும் இந்த ஆலயத்தைப் பற்றியோ, ஆலயத்தைத் திருப்பணி செய்து கொண்டு இங்கே இருக்கின்ற முருகனின் அடிமையாகத் தன்னுடைய வாழ்வை ஒப்படைத்துக் கொண்டிருக்கிற அந்த சிறப்பைப் பற்றியோ, மீண்டும் பேச வேண்டிய அவசியமில்லை என நான் கருதுகிறேன். இங்கே சொன்ன பல்வேறு கருத்துக்களுக்கும் இதிலே பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. 1-12-78ஆம் நாளன்று நான் வந்ததற்குப் பிறகு, இந்த ஆலயத்திற்கும், ஆலயத்திற்காக நம்முடைய அடிகளார் அவர்கள் எடுத்துக் கொள்ளுகிற முயற்சிகளுக்கும், ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது.

அன்றைக்கு நான் வருகிறபொழுது அடிகளார் மிகப்பெரிய சோதனைக்குத் தள்ளப்பட்டிருந்தார்கள்—சோதனைக்கு ஆட்படுத்தப்பட்டிருந்தார்கள் என்றுகூட, தகவல் எனக்குத் தரப்பட்டது. ஆண்டவன் சில நேரங்களில் தன்னுடைய உண்மையான பக்தர்களைச் சோதிப்பான்-சோதிப்பதிலேகூட கடுமையாகச் சோதிப்பான் என்றுகூட நாம் புராணங்களில் படித்து வரலாறுகளிலே தெரிந்து கொண்டிருக்கிறோம். அத்தகைய சோதனையை ஒருவேளை ஆண்டவன் நம்முடைய அடிகளார்க்கும் ஏற்படுத்தினானா என்று எனக்குத் தெரியாது. ஆனால் இன்றைக்கு நான் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறபொழுது, அந்த ஆண்டவன் ஏற்படுத்தினானா ஏற்படுத்தவில்லையா என்பது எனக்குத் தெரியாது— ஆனால் இந்த நாட்டினுடைய அரசியல் சூழ்நிலையில் எங்களுக்கும் அப்படியொரு அக்கினிப் பரீட்சை வைக்கப்பட்டது என்பதையும், அந்த அக்கினியிலே குளித்தெழுந்து, நீறுபூத்த நெருப்பாக இல்லாமல், பத்தரை மாற்றுத் தங்கங்களாக நாங்கள் இன்றைக்குத் தமிழகத்திலே பவனி வருகின்ற ஒரு நிலையில் அந்த நெருப்பிலே குளித்து எழுந்து மீண்டும் அந்த அறநிலையத்துறை அமைச்சராக நான் இங்கே கலந்து கொள்ளுகின்ற ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது என்பதை எண்ணுகிறபொழுது, அது ஒருவேளை பாலமுருகனடிமையைப் போன்ற உண்மையான பெரியவர்களின் வாழ்த்துக்களாலே கிடைத்த வாய்ப்பா, அல்லது தமிழகத்திலே இருக்கின்ற உண்மையான பக்தர்கள் ஆண்டவனை வணங்குகிறவர்கள் அருளிய வரப்பிரசாதமா, என்பதை நான் பக்தர்களுக்கே விட்டு விடுகிறேன். எங்களுக்கும் அப்படியொரு சோதனை ஏற்பட்டது. அல்லது சோதனை வைக்கப்பட்டது. இந்தச் சோதனையிலே வெற்றி பெறுகிறார்களா- இந்தச் சோதனையிலே வெற்றி பெற்றால்தான், தமிழகத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தூய தங்கத்திற்குச் சமமானவர்-பத்தரை மாற்றுத் தங்கத்திற்குச் சமமானவர் என்று எண்ணுகிற ஒரு நிலை அரசியலிலே-இந்தியத் துணைக்கண்டத்திலேயே ஏற்படுத்துகிற ஒரு சோதனையை ஏற்படுத்தப்பட்டது. அந்தச் சோதனையிலே இன்றுவெற்றி பெற்று இங்கே நிற்கின்ற வாய்ப்பை நாங்கள் பெற்றிருக்கிறோம். அப்படிப்பட்ட சோதனைகளாலேதான் நம்முடைய அடிகளார் அவர்களும் ஈடுபடுத்தப்பட்டார்களோ என்று நான் எண்ணுகிறேன்.

சில நேரங்களில் நல்லவர்களுக்கு வைக்கப்படுகிற சோதனைகள் அவர்களுடைய மாசற்ற தன்மையை உலகத்திற்கு எடுத்துக் காட்டுவதற்கு நல்ல எடுத்துக்காட்டாகவும், முன்மாதிரியாகவும் விளங்குகிறது. யாராவது சில பேர் ஐயப்பாட்டிற்குரியவர்கள் சந்தேகத்தையே என்றைக்கும் தன்னுள்ளே வைத்துக் கொண்டிருக்கிறவர்கள், சந்தேகத்தையே தன்னுடைய வாழ்க்கையில் இணைத்துக் கொண்டிருக்கிறவர்கள், சந்தேகத்தையே தனது இரத்தத்தோடு கலந்து கொண்டிருக்கிறவர்கள், யாரைப் பார்த்தாலும் சந்தேகப்படுகிறவர்கள், அப்படிப்பட்ட சந்தேகத்திற்குரியவர்கட்கு எல்லாம், சந்தேகத்தைத் தீர்க்கின்ற ஒருமுயற்சியாக, அப்படிப்பட்ட ஒரு நிலைமை சமுதாயத்திலே பெரியவர்களுக்கெல்லாம் ஏற்படுகிறது. அது வரலாற்றிலேயும் பார்க்கிறோம்-புராணங்களிலேயும் பார்க்கிறோம். அந்தச் சோதனைகளையெல்லாம் தாங்கி, இன்றைக்கு நமது அடிகளார் அவர்கள்,இங்குத் திருப்பணியினைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள்.

இடைக்காலத்திலே - ஒரு நாற்பது ஆண்டு காலம் நான் அதிகமாக ஆலயங்களுக்குச் செல்லாதவன். அதிகமாக என்பதைவிட அறவே செல்லாதவன் என்றுகூட எடுத்துக் கொள்ளலாம். சில நேரங்களில், சில ஆலயங்களில், அங்கே உள்ள சிற்பங்களைப் பார்ப்பதற்காக என்று ஒரு வேளை நான் சென்றிருக்கக்கூடும். ஆனால் இப்போது கடந்த ஒரு இரண்டரை, மூன்று ஆண்டு காலத்தில் தினசரி ஆலயம் செல்ல வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒருவேளை ஆண்டவனுடைய எண்ணமோ என்னவோ எனக்குத் தெரியாது. நாற்பது ஆண்டுகாலம் போகாமல் இருந்த என்னைத் தினசரி நீ போய் அதைத் தீர்த்துக் கொள் என்று சொல்லியிருக்கிறார்களா?என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் அதை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு சென்றுகொண்டிருக்கிறேன்.

ஆனால் ஆலயத்திற்குள்ளே நுழைகிற பொழுது ஆண்டவனே என்னுடைய குடும்பத்தைக் காப்பாற்று என்று வரம் கேட்பதற்காக நான் நுழையவில்லை. ஆண்டவனே உன்னையும் ஏமாற்றிக்கொண்டு, இந்த உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே அவர்களுக்கு நல்ல புத்தியைத் தரக்கூடாதா—இந்த நாட்டிற்கு நல்வழியைத் தரக்கூடாதா என்று கேட்டுக் கொள்ளுகின்ற பக்தனாகத்தான், இன்றைக்கு நான் ஆலயத்திற்குள்ளே நுழைந்து கொண்டிருக்கிறேன். இன்றைக்குக் காலையில் கூட ஒரு ஆலயத்திற்குச் சென்றேன். காரணம் இந்த ஆலயத்திற்குள்ளே வருகிறபொழுது எனக்கு அந்த ஆலயத்தினுடைய நினைவும் வருகிறது. நான் சென்றமுறை இங்கே வருகிற பொழுது ஆற்காட்டிலிருக்கிற காசி விசுவநாதர் ஆலயம் வந்தது. அங்கு ஆலயம் காடாக்கப் பட்டிருப்பதைப் பார்த்தேன். இங்கே காடு அருமையான ஆலயமாக மாற்றப்பட்டிருப்பதையும் பார்த்தேன். இன்றைக்குக் காலையில் நானும் ஆணையர் அவர்களும்தான் சென்றோம். சென்னை நகரத்திலே இருக்கிற ஒரு மிகப் பழம்பெரும் கோயில்-புரசைவாக்கத்திலேயிருக்கிற கங்காதரேசுவரர் ஆலயம். அது அந்தக் காலத்திலேயிருந்து ஒரு புகழ் பெற்ற ஆலயமாக விளங்குகிறது. அதற்கென்று ஏகமான, அநேகமாக கோடிக்கணக்கிலே சொத்துக்கள் என்று எண்ணுகிற அளவுக்குச் சொத்துக்கள் இருக்கின்றன. ஆனால் அந்த ஆலயத்திலே இரண்டுநேரங்கள்கூட பூசை நடத்தாமல் அந்த ஆண்டவன் அனாதையாக விடப்பட்டிருக்கின்றான். இது தான் இன்றுநாட்டிலே நம்முடைய பக்தர்கள் ஆண்டவனை வழிபடுகிற நெறியும், முறையும் என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அந்த ஆலயத்திற்கு நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சென்னை நகரத்தில், ஒரு கிரவுண்டு என்று அழைக்கப்படுகிற ஒரு மனைக்கு 60, 40 என்றமனைக்கு 40 ஆயிரம், 50 ஆயிரம் ரூபா மதிப்புள்ள அளவுக்கு அந்த மனைக்கட்டுகள் ஏறத்தாழ 400 முதல் 500 கிரவுண்டுகள் அந்த ஆலயத்திற்குச் சொந்தமாக இருக்கிறது. அதில் மாளிகைகள் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த இடத்திற்குத் தருகிற வாடகை 4 ரூபாய், 5 ரூபாய். பெரிய மாளிகைகள்—பங்களாக்கள் - லட்சாதிபதிகள்-ஆண்டவனுடைய இடத்திலே கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அது விலைக்கு வாங்க வேண்டுமானால், இரண்டு கிரவுண்டு என்றால் ஒரு லட்சம் தர வேண்டும். அவர்கள் தருகிற வாடகை 2 ரூ, 3ரூ, 4ரூபாய். இதைவிட மிகப்பெரிய கொடுமை-அங்கே ஒரு கல்யாண மண்டபத்திற்கென்று அடிக்கல் போட்டிருக்கிறார்கள். பெயரையும் போட்டிருக்கிறார்கள். நான் அதையெல்லாம் சொன்னால் அரசியல் பேசுகிறேன் எனக் குற்றச்சாட்டுக்கு ஆளாக வேண்டிவரும். ஆனால் ஆலயத்திலே நின்று பேசிக் கொண்டிருக்கிறேன். இங்கே ஆலயத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிற அடிகளார் பக்கத்தில் நின்று பேசிக்கொண்டிருக்கிறேன். பக்தர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். இந்த நாட்டிலே பக்தர்கள் எப்படி இருக்கிறார்கள், எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு இவைகள் எடுத்துக் காட்டாக இருக்குமென்பதற்காகத்தான் இதனைச் சொல்லுகிறேன்.

அங்கே கல்யாண மண்டபம் கட்டுவதற்காக அடிக்கல் போட்டிருக்கிறார்கள். தூண்கள் எழுப்பியிருக்கிறார்கள். 50,000 மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. 75,000 ரூபாய் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மொட்டைக் கோபுரத்தைப் போல, மொட்டைத் தூணாக நிறுத்தி விட்டுச் சென்றுவிட்டார்கள். திருக்குளம் இருக்கிறது. அற்புதமான தண்ணீர் சுரந்துகொண்டிருக்கிறது. அங்கே, சென்னை நகரத்திலே இருக்கிற மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்குளம் வற்றினாலும், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலுடைய திருக்குளம் வற்றினாலும், அந்த கங்காதரேசுவரர் திருக்குளம் வற்றியதே இல்லையென்று பெருமையோடு சொல்லுகிறார்கள். அந்தத் திருக்குளத்தைச் சுற்றிக் கடைகளைக் கட்டி, விலைக்கு விற்றுவிட்டார்கள். திருக்குளத்துக்குள்ளே நுழையவே முடியாது. படிக்கட்டுகள் கிடையாது. ஆண்டவனைச் சந்தித்துவிட்டு, கோவிலுக்குள்ளே சென்றால்தான் படிக்கட்டுகள்-சுற்றியும் வாடகைக்கு விட்டிருக்கிறார்கள் - சிலருக்கு விற்றிருக்கிறார்கள்-வாடகைக்கு வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் 15ரூ வாடகை, 10 ரூபாய் வாடகை,என்னே! நீங்கள் புரசைவாக்கம் கங்காதரேசுவரர் கோயில் சென்னைக்குச் சென்றவர்களுக்குத் தெரியும். அந்தப் புரசைவாக்கத்தின் இதயம் போன்ற இடத்தில் இருக்கிற அந்த இடத்தில் இப்படி அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆண்டவன் இரண்டு வேளை பூசைகூட நடத்தப்படாமல் அங்கே இருக்கிறார் என்பதை எந்தப் பக்தனும் இதுவரை கவனிக்கவில்லை.

இப்போதுதான் அதற்கு அறங்காவலர்கள் நியமித்துள்ளோம். வள்ளல் டாக்டர் அழகப்பச் செட்டியார் அவர்கள் புதல்வி திருமதி உமையாள் ராமநாதன் அவர்கள் தலைவியாகவும், மற்றும் நால்வரை அங்கே அறங்காவலர் குழுவினராகவும் போட்டிருக்கிறோம். நானும் ஆணையர் அவர்களும் அங்கே போனதற்குப் பிறகுதான், எப்படி கொள்ளை போய்க்கொண்டிருக்கிறது ஆண்டவனுடைய சொத்து என்பதைப் பார்க்க முடிந்தது. நல்லவேளை, இது போன்ற கோயில்கள் பால முருகனடிமை போன்றவர்களுடைய பொறுப்பில், நல்லவேளையாக வந்து சேர்ந்திருக்கிறது. அதிலேயும் சில விசேஷம். இப்போது வருகிற சொத்துக்கள் முறையாகப் பாதுகாக்கப்படுகிற நிலைமையிலே தான் வருகின்றன. இன்றைக்குப் பெருமைப் பட்டு வருகிற சில திருக்கோயில்கள், அதிலே நம்முடைய அருள்மிகு தேவி கருமாரியம்மன் கோவிலைப் போன்ற அந்த ஆலயங்கள்,எப்படி இன்றைக்கு இலட்சக்கணக்கான வருமானம் வருகிற கோயில்களாக இருக்கின்றன. ஆனால் அது நல்லமுறையிலே இன்றைக்குக் கண்காணிக்கப்படுகிற நிலைமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், அந்தக் காலத்தில் அன்றைக்கு இருந்தவர்கள், இந்த நாட்டிலே சமயமும், தெய்வ வழிபாடும் மனிதனுக்கு வேண்டும்-தூய நெறியை வளர்ப்பதற்கு வேண்டுமென்பதற்காக எழுதி வைத்துவிட்டுச் சென்ற அறக்கட்டளைகள், இன்றைக்குச் சூறையாடப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதனைச் சொல்லுகிற பொழுது, நான் காலையிலே பார்த்த கங்காதரேசுவரர் ஆலயமும், மாலையிலே பார்க்கிற இரத்தினகிரி ஆலயமும், என் கண்முன்னாலே வருகிறது. இந்த இரண்டு படங்களையும் நான் இந்தச் சமுதாயத்திற்கு வைக்கிறேன். பத்திரிகைகாரர்கள் இதனைத் தெளிவாகப் போட வேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன். யாரையாவது ஒருவரைப் புகழவேண்டுமென்பதோ அல்லது இன்னொருவரை இகழ வேண்டுமென்பதோ, அரசாங்கத்தினுடைய நோக்கமல்ல. ஆலயங்கள் பாதுகாக்கப்பட வேண்டும், பாதுகாக்கப்படவேண்டும் என்று எல்லோரும் பேசுகிறார்கள்.

நேற்று முன்தினம்கூட எங்களுடைய மதிப்புக்குரிய பெரியவர், முன்னாள் முதல் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள்கூட, பேசியிருக்கிறார்கள். நீண்ட நெடுநாட்களாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக இருந்தவர்கள். அவர்கள் காலத்திலேயிருந்து என்ன நடந்திருக்கிறது என்பதனை எனக்குக் காலையிலே பார்த்த கங்காதரேசுவரர் கோயில் நிரூபித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் பக்தவத்சலம் அவர்கள், இன்றைக்கு நடைபெறுகிற நிர்வாகத்தில் ஏதோ குறை இருக்கிறது என மக்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள் என்று, பெரியவர் அவர்கள் பிறந்தநாள் செய்தியாக வெளியிட்டிருக்கிறார்கள். நான் அவர்கட்குக் காணிக்கையாக வைக்கிறேன். உங்களுடையகாலத்திற்கும்முன்பேயிருந்துதான், கங்காதரேசுவரர் ஆலயம் இந்தக் கதிக்கு வந்திருக்கிறது. இரண்டு வேளை பூசை செய்வதற்கு இல்லாமல், இத்தனைச் சொத்துக்கள் இத்தனை கோடிக்கணக்கான சொத்துக்களை வைத்துக் கொண்டிருக்கிற ஒரு ஆண்டவன்-ஆலயம்-அதுவும் சென்னை நகரத்திலே, தமிழகத்தின் தலைநகரத்தில் நிர்க்கதியாக விடப்பட்டிருக்கிற கொடுமையை நாம் எங்கே போய்ச் சொல்வது! எப்படி மாற்றுவது? என்பதைப் பக்தர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட ஆலயங்கள் ஒருபுறத்திலே எழுப்பப்படுகின்றன. நமக்கு மனமகிழ்வு ஏற்படுகிறது. மன நிறைவு ஏற்படுகிறது. அதைத் தக்கவர்கள் இருந்து நடத்துகிறார்கள். இன்றைக்கு இங்கு வருகிறபொழுது இவரைப்பற்றிய வரலாற்றை நான் கேட்டுக் கொண்டு வந்தேன். காரணம் இவருடைய உடன்பிறந்த சகோதரர், என்னோடு காரில் வந்தார். நான் சென்றமுறை வருகிறபொழுது இதனுடைய மொத்த வரலாற்றினைத் தெரிந்து கொள்ளுகிற நெருக்கடிக்கு, நான் ஆளாக்கப்பட்டிருந்தேன். இன்றைக்கு நான் இவர்களைப் பற்றிய தனி வரலாறு, இவருடைய சொந்த வாழ்க்கை என்ன? என்பதனைப் பற்றிக் கேட்டுக்கொண்டு வருகிற ஒரு அவசியம் ஏற்பட்டது-நெருக்கடி ஏற்பட்டது. ஏனென்றால் தெளிவாகத் தெரிந்து கொண்டு அவர்களைப் பாராட்ட வேண்டும், புகழ வேண்டும் என்பதுதான், நாங்கள் கற்றுக் கொண்ட பாடம். காவி அணிந்து, கமண்டலம் ஏந்தி, சடைமுடி தரித்து உருத்திராட்சம் அணிந்துவிட்ட காரணத்தினாலேயே, அவர்களையெல்லாம் பெரியவர்கள் என்று ஏற்றுக்கொள்ளுகிற மனப்பான்மையை நாங்கள் பெறவில்லை.

நான் வெளிப்படையாகவே சொல்கிறேன். இவர்கள் எப்படி இந்த ஆலயத்தோடு இணைந்தார்கள் என்கிற ஒரு வரலாறு எனக்குத் தேவை. அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலினாலே அவருடைய சகோதரருடன் பேச்சுக் கொடுத்துக்கேட்டுக்கொண்டே வந்தேன். அவர்கள் 1968-ஆம் ஆண்டிலே தினந்தோறும் இங்கே போகிறபொழுது, வேலைக்குச் செல்லுகிறபொழுது, இங்கே வணங்கிச் செல்லுகிற அந்த முறையைப் பற்றியும், ஒருநாள் அவர்கள் வணங்குகிற பொழுது இங்கேயும் அப்படிப்பட்ட ஒருநிலைமை — தீபாராதனை செய்யக்கூட முடியாத ஒரு நிலையை இங்கே இருக்கிற குருக்கள் அவர்களுக்குத் தெரிவித்ததையும், அதனைக் கேட்டு அவர்கள் கண்ணீர் மல்கியதும், அதற்குப் பிறகு அவர்கள் சுற்றி வந்ததும், எதுவும் தெரியாமல் மயங்கி விழுந்து அதுமுதல் அவர் இங்கேயே தங்கியிருக்கிறார் என்கிற வரலாறு. 68விருந்து பன்னிரண்டாண்டு காலத்தில் இவர்கள் எப்படி இதனை மாற்றியிருக்கிறார்கள் என்று எண்ணுகிறபொழுது, நான் அது அவர்களுடைய ஆற்றல் என்று சொல்ல விரும்பவில்லை. ஆனால் மனிதன் தூய உணர்வோடு, தூய நெறியோடு, தன்னுடைய ஈடுபட்டிருக்கிற இலட்சியத்திற்காக, உள்ளத்திலே ஏற்படுத்திக் கொண்டிருக்கிற அந்த நெறிக்காகப் பாடுபட்டானேயானால், ஆண்டவன் எந்த ரூபத்திலே வேண்டுமானாலும் அவர்களுக்கு வரமளிப்பான் என்பதனைத்தான், இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிற திருப்பணிகள் நமக்கு எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன என்பதை, அவர்கள் இன்றைக்கு நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள், சட்டமன்றத்திலேயும் விவாதங்கள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பத்திரிகைகளிலேயும் வந்து கொண்டிருக்கிறது. நானும் பல இடங்களில் பேசிக் கொண்டிருக்கிறேன். ஒளிவு மறைவு இல்லை. இன்றைக்கு ஆதீனத் தலைவர்கள் என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள், மடத்தைக் கட்டி ஆள்கிறவர்கள், கோடிக்கணக்கான சொத்துக்களை அந்தக் காலத்தில் பெரியவர்கள் எழுதி வைத்துவிட்டுச் செல்ல, அதற்குத் தலைமைப் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறவர்கள், இன்று நடந்துகொள்கிற முறை, இந்த சமுதாயத்தில் இந்து சமயத்தை அழிப்பதற்காகப் பயன்பட்டுக்கொண்டு வருகிறது என்பதனை, நான் தெளிவாக எடுத்துச் சொல்லிக்கொண்டு வருகிறேன். காரணம் நான் இந்து சமய அறநிலையப் பாதுகாப்பு அமைச்சன்-எனக்கு இந்து சமயம் இருக்கிறதா-நான் எந்த மதத்தைச் சார்ந்தவன் என்று கேட்டால், நான் 'மனிதன்' என்று தயங்காமல்

கூறுவேன். ஆனால் எனக்குள்ள கடமை இந்த நாட்டில் இந்து சமயத்தைப் பாதுகாக்க வேண்டிய, இந்து சமய அறக்கட்டளைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டுமக்கள் நம்பிக்கையோடு இருக்கிறார்கள். மீண்டும் புரட்சித் தலைவரைத் தேர்ந்தெடுத்தார்கள் என்றால், இவர் இந்த நாட்டு மக்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக இருப்பார் என்று தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதற்காகத்தான் அவர்கள் எனக்கு இந்தப் பொறுப்பைத் தந்திருக்கிறார்கள் என்றால், பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது.

ஆதீனத் தலைவர்களாக இருப்பவர்கள், அந்த ஆதீனகர்த்தர் என்று சொல்லிக்கொண்டிருப்பவர்கள், அதற்கு முறையான நெறியுடன் இந்த நாட்டு மக்களை வாழ வைக்கிற முயற்சியிலே, அவர்கள் ஈடுபட வேண்டுமென்று நான் சொல்லிக் கொண்டு வருகிறேன். விவாதங்கள் எல்லாம் சட்டமன்றத்திலே வந்திருப்பதனை நீங்கள் பார்த்தீர்கள். அவர்கள் துறவிக்கோலம் பூண்டவர்கள் என்று வெளியே சொல்லிக் கொள்வதும், அவர்களுக்கு அங்கே எப்படிப்பட்ட வாழ்க்கை இருக்கிறது என்று ஊரார் பேசிக்கொள்வதும், இன்றைக்கு விவாதத்திற்குப் பொதுமக்கள் மத்தியில் மேடைக்கு வந்துவிட்டது. சட்டமன்றத்திற்கும் வந்துவிட்டது. ஆனால் இங்கேயே பக்கத்திலே அடிகளாரைப் பார்க்கிறபொழுது அவர் மனைவி குழந்தை குட்டிகளோடு இருந்தவர். அவர்களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு இங்கே வந்து பாலமுருகனுடைய அடிமையென்று தன்னை ஆக்கிக்கொண்டு இங்கேயே தவமிருக்கிறார்கள் என்றால், இந்த வாழ்க்கையையம் பாருங்கள், அந்த வாழ்க்கையையும்பாருங்கள். நான்கூட கேட்டேன்-சமீபத்தில் இவர்களுடைய திருமகளாருக்குத் திருமணம் நடந்து நான் வாழ்த்து அனுப்பினேன், அதற்கு இவர்கள் ஏதாவது உதவி செய்தார்களா எனக் கேட்டேன். அவருடைய தம்பியை! ஆமாம். உதவி செய்தார் என்றார்.

என்ன உதவி? என்றேன். அந்தத்திருமண மண்டபத்தை இலவசமாகத் தந்தார் எனச் சொன்னார். இந்தத் திருமண மண்டபம் எல்லாருக்கும் இலவசமாகவும் குறைந்த வாடகைக்கும் தருவதற்காகத் தானே கட்டியிருக்கிறார். அதைத் தன்னுடைய திருமகளார் கல்யாணத்திற்கு இலவசமாகத் தந்தார். அந்த உதவியைச் செய்தார் என்று சொல்லுகிற பொழுது, அவர்களுடைய வாழ்க்கையை நாமெல்லாம் எண்ணிப் பார்க்கிறோம். இதே நேரத்திலே மற்றவர்களுடைய வாழ்க்கையும் என் கண்முன்னாலே வருகிறது. காரணம் அதையெல்லாம் பார்க்கவேண்டிய இடத்திலே ஆண்டவன் என்னைக் கொண்டு போய் வைத்துவிட்டான். இல்லையானால் நாங்கள் எங்கேயோ இருப்போம். இவர்களைப் பற்றி நாங்கள் கவலைப் படமாட்டோம். ஆனால் அவர்களுடைய கணக்கு வழக்குகளைப் பார்க்க வேண்டிய பரிதாப நிலைக்கு எங்களைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள். எத்தனை லட்சத்திற்குக் கணக்குகள் அங்கே வைக்கப்படவில்லை என்பதனை, நீங்கள் பத்திரிகைகளிலே பார்த்திருப்பீர்கள். இன்றைக்கு ஒரு மடத்தினுடைய வரவு செலவு கணக்குகளைப் பார்ப்பதற்காக, தமிழகத்தினுடைய அறநிலையத் துறையில் ஒரு துணை ஆணையரை அதற்கென்றே நியமித்திருக்கிறோம். கணக்குகளை, ஊழலைக் கண்டுபிடிப்பதற்காக. எத்தனை லட்சக்கணக்கான சொத்துக்கள். இன்றைக்கு இங்கே இருக்கிற சொத்துக்கள், இவருடைய அன்பினாலேயே பெறப்படுகிறது.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

ஆனால் அந்த சொத்துக்கள், இன்றைக்கு இருக்கி[illegible] பெறப்பட்டதல்ல. நமது மூதாதையர்கள் - முன்னோர்கள் பெரியவர்கள் வைத்து விட்டுப்போன சொத்து. இந்த மனிதர்களை நம்பி எழுதிவைத்துவிட்டுப் போன சொத்து. நம்பிக்கைத் துரோகம் நடக்கிறது. இதை அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். நான் இந்த நாட்டுப் பக்தர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களை அடிபணிந்து கேட்டுக் கொள்ளுகிறேன். இதை உங்கள் பொதுப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளுங்கள். இங்கே கணக்கு வழக்குகளை நாங்கள் கேட்கவில்லை. அனுமதி தந்துவிடுகிறோம் என்று இங்கு தெரிவிக்கப்பட்டது. அதிலேயும்கூட ஆணைகள் பிறப்பிப்பதில் தாமதங்களாகின்றன என்று சொன்னார்கள். அதைத்தான் ஆணையர் அவர்கள் சொன்னார். சில விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த விதிகளின்படி சில உத்திரவுகள் வருகின்ற முறையில், சில நேரங்களில் சில தாமதங்கள் இருக்கலாம். ஆனால் தடைகளிருக்காது என்று சொன்னார்கள். நான் அதையே முன்னாலேயே பேசியிருக்கிறேன். ஒரு முறையும், அதற்கான சில விதிமுறைகளையும், வழிமுறையையும் ஆண்டவன் நமக்குக் கற்பித்துத்தந்திருக்கிறான். மனிதன் என்றால் இப்படியெல்லாம் வாழ்ந்தால்தான் அவனுக்குமனிதன் என்ற பெயர். அதைப் போலத்தான் மனிதன் செய்கிற காரியங்களுக்குச் சில விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் விதிமுறை என்பது நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்ளுகிற விதிமுறைகளே தவிர, மற்றவர்களால் ஏற்படுத்துகிற விதிமுறைகள் அல்ல. ஆகவே இங்கே நடைபெறுகிற எந்தத் திருப்பணிகளானாலும் நான் ஏற்கனவே அனுமதித்திருக்கிற முறைப்படி அவர்களுக்கு அனுமதி தந்துகொண்டே இருக்கிறோம். காரணம் அவர்கள் பணத்தை எங்கேயிருந்தோ பெறுகிறார்கள் - யார்மூலமோ பெறுகிறார்கள் - யாரோ கொண்டு வந்து தருகிறார்கள். அதை முறையாக, அரை பைசா-நயா பைசா உள்பட கணக்குகள் வைத்துக் கொண்டு, இங்கே எழுப்பிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இங்கே எங்களுக்குக் கவலையே இல்லை. இதிலே உள்ளே நுழைந்து கொண்டு கணக்குப் பார்க்க வேண்டிய வேலையை அவர்கள் வைக்கவில்லை. ஆனால் ஒரு ஆபத்து இதிலே இருக்கிறது. அதனை அவர்கள் காலத்திலேயே அவர்கள் முடிவு செய்துவிட்டுப் போகட்டும்.

கரையான் புற்றெடுக்கக் கருநாகம் குடி புகுந்து கொள்ளுகிற கதைகள், இந்த நாட்டிலே நடந்து கொண்டிருக்கிறது. அதைத்தான் தஞ்சையிலே இருக்கிற மடங்கள், எனக்கு நிரூபித்துக் கொண்டிருக்கிறது. அதனாலே தான் அரசாங்கம் கொஞ்சம் விழிப்போடு இருக்கிறது. ஆகவே எதிர்காலத்திலே அது எப்போது என்று எனக்குத் தெரியாது, அவர்கள் எத்தனை ஆண்டுகாலம் இருக்கப் போகிறார்களோ அதையும் நாம் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட ஒரு எதிர்காலத்தில் இவர்கள் உருவாக்கி வருகின்ற இந்த அறநிலையம் என்றைக்கும் பாதுகாக்கப்படவேண்டும் என்றுதான், அரசாங்கம் ஒருசில விதிமுறைகளை உருவாக்குகிறதே தவிர, இவர்களிடத்தில் சந்தேகப்பட்டோ, அல்லது இவர்கள் கையாடிச் செலவழிக்கிறார்கள் என்று பார்ப்பதற்கோ, இந்த விதிகள் குறுக்கிடவில்லை என்பதனை நான் எல்லோருடைய முன்னிலையில், அமைச்சர் என்ற முறையில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். என்ன என்ன செய்து விட்டுப் போயிருக்கிறார். அதையேகூட சிலர் எதிர்காலத்தில் மாற்றிவிடக்கூடும்.

இங்கே ஒரு பாலமுருகனடிமை இருந்தார் என்பதைக்கூட, எவனாவது பின்னாலே வந்து மாற்றிவிடுவான். காலம் அப்படி இருக்கிறது. இது கலியுகம் என்று சொல்லி வைத்திருக்கிறார்கள். கலியுகத்தில் என்ன நடைபெறும் என்று நமக்குத் தெரியவில்லை. ஆகவேதான் எல்லாக் காரியங்களும் ஒழுங்காகவும் முறையாகவும் நடந்து கொண்டே வந்தால், என்றைக்கும் அது நிலைத்திருக்கும். இன்றைக்கு அவர்கள் இதை அப்படி உருவாக்கி வருகிறார்கள். நமது அரங்கநாதன் அவர்கள் மிகப் பெரிய ஆசையை வெளியிட்டார். இரத்தின கிரி, இரத்தினகிரி என்று தமிழகமெல்லாம் புகழ்பரவ வேண்டும் என்றார். நான் அவருக்கு நிச்சயமாகச் சொல்லுகிறேன். இரத்தின கிரி என்பது தமிழ்ச் சமயத்தினுடைய வரலாற்றில், தமிழ்மொழியினுடைய வரலாற்றில், தமிழ்நாட்டினுடைய வரலாற்றில், நிச்சயமாக ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு இடம் பெறப் போகிறது என்பதனை, இன்றைக்கு நான் சொல்லுகிறேன் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். இதற்குள்ளே நுழைந்து நான் விரிவுரை செய்ய விரும்பவில்லை. ஏன் என்று கேட்காதீர்கள். அதைச் சொன்னால் சில நேரங்களில் சிலருக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும்.

இன்றைக்கு இருக்கிற இரத்தினகிரி ஆலயம், இந்த நாட்டினுடைய தமிழ் மக்களுடைய சமுதாய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை, ஒரு புத்துணர்ச்சியை, புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற ஆலயம் என்பதை மாத்திரம், நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முருகன் தமிழகத்திற்கு, தமிழ் மக்களுக்குச் சொந்தமான ஒரே கடவுள் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். ஆனால் முருகனை எப்படி ஆக்க வேண்டும், எப்படி மக்களிடத்திலே காட்ட வேண்டும், எப்படி மக்களுள்ளே இணைய வைக்க வேண்டும், என்ற பெரு முயற்சியிலே நம்முடைய தவத்திரு பாலமுருகனடிமை மேற்கொண்டிருக்கிறார்கள். இது வளர்ந்து கொண்டேயிருக்கிறது. இதன் குறுக்கே யாரும் வந்து இதைத் தடுத்து விட முடியாது. இது யார் வளர்க்கிறார்கள்-இதனை ஆண்டவன் வளர்க்கிறாரா நமக்குத் தெரியாது. பாலமுருகனடிமை வளர்க்கிறாரா- அதுவும் நமக்குத் தெரியாது. மக்கள் வளர்த்துக் கொண்டே யிருக்கிறார்கள். பக்தர்கள் இன்றைக்கு இதன் பக்கத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதன் சக்தியை வெல்லுவதற்கு யாருமில்லை.

தமிழகத்தில் எழுதப்பட இருக்கிற இலக்கிய வரலாற்றில், இடம் பெற இருக்கிற ஒரு பெயர் இரத்தினகிரி. அது பாடல் பெற்ற தலம் என்கிறார்கள். அருணகிரிநாதரே பாடியிருக்கிறார் என்கிறார்கள். ஆனால் அருணகிரி நாதர் பாடினார். ஆனால் இங்கே என்ன இருந்தது. கருவறை இருந்தது-இல்லைஇல்லை 35-40 ஆண்டுகட்கு முன்னாலே அதற்குள்ளே சிலையை வைத்திருக்கிறார்கள். நான் அன்றைக்கும் பேசினேன். ஒரு வாரத்திற்கு முன்னாலேயே நம்முடைய தேவி கருமாரிஅம்மன் உபாசகராக இருக்கின்ற இராமதாசர் அவர்களின் 68-ஆவது பிறந்த நாள் விழாவின்போது பேசினேன். இந்து சமயத்தைக் காக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள், கொஞ்சம் விசால உள்ளத்தோடு இருக்க வேண்டும். குறுகிய உள்ளத்தோடு இருந்தால் இந்து சமயத்தை நீங்கள் காப்பாற்றவும் முடியாது, வளர்க்கவும் முடியாது. நீங்கள் பல பேருக்குக் கதவை அடைக்கிறீர்கள். ஆகவே அவர்கள்இன்னொரு கதவைப் போய்த் தட்டுகிறார்கள். அங்கே கதவு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

நான் ஒரு இந்து சமய வாதி என்பதால் சொல்லவில்லை. இந்து சமயத்தை வளர்க்க வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். வளர்க்க வேண்டிய, காக்க வேண்டிய பொறுப்பிலே இருப்பவன் என்பதாலே சொல்லுகிறேன். அன்றைக்கும் சொன்னேன், இன்றைக்கும் சொல்லுகிறேன். அதைத்தான் இங்கேயும் சொல்லுகிறேன். இங்கே கருவறை காலியாக இருந்த இடத்தில், ஒரு இரத்தினகிரி ஆலயத்தை எழுப்பி விட்டார். ஆனால் பக்கத்திலேயிருக்கிற வேலூரில் கருவறை இருக்கிறது. கர்ப்பக்கிரகம் இருக்கிறது. அங்கே ஆண்டவன் இல்லை. அது மத்திய அரசினுடைய தொல் பொருள் இலாகாவினிடத்தில் இருக்கிறது. அது உங்களுக்கு என்றைக்கும் நினைவிலே வருகிற அபாய அறிவிப்பாக இருக்க வேண்டும்.

நாம் கொஞ்சம் அயர்ந்தால், நம்முடைய பாதையிலே இருந்து மாறினால், நாம் ஏமாந்தால், என்ன நடக்கும் என்பதற்கு, அது உங்களுக்கு என்றைக்கும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதுதான், நான் இரத்தினகிரி ஆலயத்திலே நின்றுகொண்டு, தமிழ்நாட்டினுடைய சமயத்தைப் பின்பற்றுகிறதமிழ்ப் பெருமக்கள் அனைவர்களுடைய பாதத்திலும் சமர்ப்பிக்கிறேன். பெரியவர்கள் யாராக இருந்தாலும்,

நான் காஞ்சிப் பெரியவரிலிருந்து கீழே இருக்கிற மதத் தலைவர்கள் அத்தனை பேர்களுக்கும் சரி, சொல்லுகிறேன்-இந்த நாட்டிலே மதத்தைக் காப்பாற்ற வேண்டும் என நீங்கள் விரும்பினால், இந்து சமயம் காப்பாற்றப்படவேண்டும் என விரும்பினால், இருக்கிற தடைகளை அகற்றுங்கள் - ஒரு வழியைக் காட்டுங்கள். உள்ளே நுழைகிறபொழுது இன்னார் நுழைய வேண்டும்-இன்னார் நுழையக் கூடாது, இன்னார் இன்ன இடத்திலே வரவேண்டும், இன்னார் இந்த இடத்திலே வரக்கூடாது, இந்த மொழியிலேதான் இருக்க வேண்டும், இந்த மொழியிலே இருக்கக்கூடாது என்றெல்லாம் தடைபோட்டால், என்ன ஆகும் என்பதை, அடிக்கடி வேலூரை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

எல்லா இடத்திற்கும் நம்முடைய பால முருகனடிமை தோன்ற மாட்டார்கள். எல்லா இடத்திலேயும் காலிசெய்யப்பட்ட கர்ப்பக்கிரகங்களை மீண்டும் ஆயலங்களாக எழுப்ப முடியாது. ஒரு இடத்திலேதான் ஒரு பாலமுருகனடிமை தோன்றியிருக்கிறார். அதற்காகத்தான் அவருக்கு இவ்வளவு சிறப்பு, இவ்வளவு பாராட்டு, இவ்வளவு வணக்கங்களும் வாழ்த்துக்களும். ஆனால் இதே நேரத்தில் ஒரு பால முருகனடிமை ஒரு பக்கத்திலே எழுப்பினால் அதைச் சாய்ப்பதற்கும், அழிப்பதற்கும் பல பேர் தோன்றுகிறார்கள். அதையெல்லாம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். நான் இங்கேயும் சொல்லுகிறேன். நம்முடைய வழிபாட்டு முறைகளிலேயே பல்வேறு விதங்களைப் புகுத்தி, பக்தர்களைப் பிரிக்கிறோம். உள்ளே வரவிடாமல் தடுக்கிறோம். நான் இங்கேயும் சொன்னேன். பல இடத்திலேயும் பேசினேன். இங்கே நாம் ஆண்டவனை வணங்குகிற முறையோடு, வணங்குகிற முறையில் எல்லாக் கோயிலுக்கும் போகிறோம். இங்கேயும் முருகனை வணங்குகிறோம். திருத்தணியிலும் வணங்குகிறோம். திருச்செந்தூரிலும் வணங்குகின்றோம். திருப்பரங்குன்றத்திலும் வணங்குகிறோம். சுவாமிமலையிலும் வணங்குகிறோம். ஆனால் இங்கேயெல்லாம் போகிறபொழுது, மற்ற இடங்களிலேயெல்லாம் நாம் ஆடையணிந்து பயபக்தியோடு போவதற்கு அனுமதிக்கப்படுகிறோம். ஆனால் திருச்செந்தூரிலே போகிறபொழுது சட்டையைக் கழட்டிவிட்டு உள்ளே வாருங்கள் எனத் தடுக்கப்படுகிறோம். அதைத் தாண்டிக் கன்னியாகுமரிக்குப் போனால், அங்கேயும் சட்டையைக் கழட்டிவிட்டு உள்ளே வாருங்கள் என்கிறோம். நான் கேட்கிறேன்-பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த முறையை எந்தக் காலத்தில், யார் ஏற்படுத்தினார்கள்? எதற்காக ஏற்படுத்தினார்கள்? ஆண்டவனை வணங்கப்போகிற பொழுது மேலே வெள்ளை சட்டைப்போட்டுக் கொண்டு, உள்ளே உள்ளத்தைக் கறுப்பாக வைத்துக் கொண்டிருந்தால், இருள்புகையாக வைத்துக்கொண்டிருந்தால், அவன் உண்மையான பக்தனுமல்ல. ஆனால் வெளியே சட்டையெல்லாம் கழட்டிவிட்டுத் திறந்த மேனியாக உண்மையான பக்தனைப் போல, அவன் உள்ளத்தை இருட்டாக வைத்துக்கொண்டிருந்தால் அவனும் பக்தனல்ல. ஆகவே பக்தி என்பது அவரவருடைய உணர்வாலே இருக்கிறதே தவிர, அவன் அணிந்து கொண்டிருக்கிற ஆடையிலே இல்லை. இன்றைக்கு ஆடையைக் கழட்டிவிட்டு வா என்பதாலே, கன்னியாகுமரியில் இருக்கிற கோயில்களில் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் செல்லவிடாமல் தடுக்கப்படுகிறார்கள். திருச்செந்தூரிலேயும் அப்படித்தான். இந்த உணர்வுகளையெல்லாம் வளர்த்தாக வேண்டும்.

இதிலேதான் மகத்தான ஒரு புரட்சியை இந்த ஆலயத்திலே பாலமுருகனடிமை செய்து கொண்டிருக்கிறார்கள். இது ஒரு மவுனப் புரட்சி. இவர்கள் செய்து கொண்டிருக்கிற புரட்சியினுடைய விளைவும், இதனுடைய பதிலும், இதனுடைய முடிவுகளும், இன்னும்பத்து அல்லது இருபது ஆண்டு காலத்திற்குப் பின்னாலே, இந்த சமுதாயத்திலே தெரியப்போகிற விளைவுகளாகும். இன்றைக்கு இது தெரியாது. நான் அதனாலேதான், அவ்வளவு ஈடுபாடு கொண்டு இதை பாராட்டவும், போற்றவும், வணங்கவும் கடமைப்பட்டிருக்கிறேன். பக்தர்கள் இதை எண்ணிப் பார்த்தாக வேண்டும். இந்து சமயத்தை, இந்து சமயம் காப்பாற்றப்படவேண்டுமென்ற உணர்வைக் கொண்டிருக்கிற அத்தனை பேரும் இதற்கு முடிவு எடுத்தாக வேண்டும். இதற்கு ஆதரவு காட்டியாக வேண்டும். அப்படிப்பட்ட ஒரு அறநெறிக்கு நல்வழி காட்டுகிற, தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற பாலமுருகனடிமை அவர்களை நான் வாழ்த்தவும், தமிழ்ச் சமுதாயத்தின் சார்பில் வாழ்த்தவும், தமிழகஅரசின் சார்பிலே வாழ்த்தவும், வணங்கவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இத்தகைய தூய திருப்பணிக்கு, அவர்கள் மேற்கொண்ட அந்தத் திருப்பணிக்கு என்னையும் ஒரு காரணமாக வைத்து, அதைத் திறந்து வைக்கிற பணிக்கு என்னை உள்ளாக்கிய அவர்களுக்கு நான் நன்றி கூறி, வாழ்த்தி வணங்கி விடைபெற்றுக் கொள்ளுகிறேன், வணக்கம்.

# பிராட்டியின் பெருமை

திரு. நா. வேணுகோபால் நாயகர், B.A., B.L.
செயலாளர், வைணவ மகா சங்கம், சென்னை.

(முற்றொடர்ச்சி)

பெரிய பிராட்டியார்தான் சீதாபிராட்டி என்பதைத் தெரிந்துகொண்டபிறகு, பிராட்டியின் பெருமையை அல்லது வைபவத்தைக் காணலாம். அயோத்தி(யின்) இராமன், கௌசல்யா ராமனாக, தசரத ராமனாக வளர்ந்த பிறகு, சீதாராமனாவதற்குக் கல்யாணராமனாக மிதிலையின் ராஜவீதியிலே பவனி வருகிறான். அலை அலையாகத் திரண்டு வந்த மக்கள் வெள்ளம் இராமனைக் கண்டு வியந்ததாம்! ஆனால் ஒருவராவது இராமனின் முழு வடிவத்தையும் காணமுடியவில்லையாம்! ''யாரே வடிவினை முடியக் கண்டார்''. இதற்குக் காரணம் என்ன? இராமனின் தோள் அழகைக் கண்டவர்கள் தோளையே கண்டார்களாம்! ''தோள் கண்டார், தோளே கண்டார்''. அடுத்தபடி இராமனின் வீரக் கழல் அணிந்த தாமரை போன்ற திருவடிகளில் கண் வைத்தவர்கள், வைத்த கண்ணை வாங்காமல் அவன் திருவடிகளையே சேவித்தார்கள். தொடு கழற்கமலம் அன்ன தாள் கண்டார் தாளே கண்டார்''.

அடுத்தபடியான பிரிவினையர்கள், இராமனுடைய விசாலமான திருக்கைகளைச் சேவிக்க ஆரம்பித்தவர்கள், அத்திருக்கைகளின் அழகிலேயே சொக்கிவிட்டார்களாம்! ''தடக்கை கண்டாரும் அஃதே!''. இங்கே ஒரு நியாயமான கேள்வி. ஆயிரக் கணக்கான மக்கள் கூடி, தெய்வமானாலும்கூட, மனித வடிவத்தில் உலவும்போது, தோள், கால், கை இவைகளைக் கண்டு, வைத்த கண் வாங்காமல் பார்த்தார்கள் என்றால் நம்ப முடியுமா? இதைக் கவிச் சக்கரவர்த்தியின் கவிதையாகக் கருதலாமா?

கவிச் சக்கரவர்த்தி இப்பாடலில் பல பூட்டுக்களை அமைத்துத் தன் முழுத் திறமையையும் காட்டியுள்ளார். பிராட்டியின் பெருமை என்பது மகுடமாகையாலே ஒரு பூட்டை மாத்திரம் நுண்ணிதின் ஆராய்ந்து அறியலாம். மிதிலையிலே இராமனைச் சேவித்த மக்கள் குருடர்கள் அல்ல. காண்பதில் தேர்ச்சிபெற்ற, வாள் போன்று ஒளிவீசும் கண்களையுடைய பெண்கள். இவர்களாலேயே இராமனின் ஒரு அங்கத்தைத் தவிர மற்ற பாகங்களைப் பார்க்கமுடியவில்லையாம்! ''வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்!'' மிதிலை மக்கள் இராமனின் வருகையை எதிர் நோக்கி இருக்கின்றார்கள்! ஏன்? இராமன் மிதிலை வருமுன்னே அவன் கீர்த்தி மணிஓசை மிதிலை மக்களின் காதுக்கு எட்டிவிட்டது.

பலகாலமாக அட்டகாசம்செய்துகொண்டு மக்களுக்கு யமனாக உலவிக் கொண்டு வந்த தாடகையை, சிறுபிள்ளையான இராமன் வதம் செய்த ஆச்சரியத்தைத் கேள்விப்பட்டார்கள் மக்கள். எனவே, தாடகைவதம் செய்த இராமனின் தோள்களை சேவித்தவர்கள் அந்தத் தோள்களையே கண்டு, அவன் பராக்கிரமத்தைப் பாராட்டிக் கொண்டே இருந்தார்களாம்! எனவே, இராமனின் தோள்கண்டார், தோளே கண்டார்!.

அதைவிட ஒரு பெரிய அதிசயத்தை நடத்திக் காட்டினான் இராமன். கௌதமமுனிவரின் சாபத்தாலே கல்லாகச் சமைந்த அகலிகை பலருடைய பரிதாபத்திற்குள்ளானாள். கௌதமரின் சாபத்திற்கு எதிர்கணை ஏவ யாரால் முடியும். இராமன் தன் திருவடிகளால் அகலிகைக்குச் சாபவிமோசனம் அளித்ததால், அவனுடைய திருவடிகளைச் சேவித்தவர்கள், வேறு ஒரு அவயவத்தையும் பார்க்க விரும்பாமல், அந்தத் திருவடிகளிலேயே லயித்து விட்டார்களாம்! எனவே, தொடு கழல் கமலம் அன்ன தாள் கண்டார் தாளே கண்டார்! சரி, இவைகளிலெல்லாம், எங்கேயோ, எப்போதோ நடந்தவைகள்! சொல்லக் கேள்வி தான். பார்த்ததில்லையே நேரில்! ஆனால் மற்றொரு அதிசயத்தை மிதிலை மக்கள் நேரிலேயே தம்முடைய கண்களாலேயே கண்டனர். சிவதனுசை ஒடிக்கிறதாவது, சீதைக்குக் கலியாணம் ஆகிறதாவது? என்று வெறுப்படைந்து, உள்ளம் குன்றிக் கிடந்த நிலைமையிலே, இராமன் சிவதனுசை, பொன்மயமான மேரு மலைபோன்ற அந்தப் பிரமாண்டமான வில்லை, சீதையைத் திருமணம் செய்து கொள்வதற்காக, அவள் கழுத்தில் அணிவிக்கத் தக்க மாலை என்றே மதித்து எடுத்து விட்டானாம்!

ஆடக மால்வரை
அன்னது தன்னைத்
தேடரு மாமணி
சீதை எனும்பூந்
தோடலர் கொம்பினைச்
சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலைஇ(து),
என்ன எடுத்தான்!

சரி, அடுத்தபடி,

''எடுத்தது கண்டனர்!
இற்றது கேட்டார்!

வேறு ஒன்றும் தெரியாதாம். நேரில் பார்த்த வர்கள்கூட, இப்படியாக, சிவதனுசை ஒடித்த இராமனின் திருக்கைகளைச் சேவித்த வர்கள்கூட, இந்த மிகமகத்தான சாதனையைச் செய்த திருக்கைகள் இவைகளா என்று நம்ப முடியாமல் ஆச்சரியப்பட்டனர். அந்தத் திருக் கைகளின் அழகிலே, திறத்திலே, தீரத்திலே சொக்கிக் கிடந்தார்கள், நன்றியும் மகிழ்ச்சி யும் கலந்து! — தடக்கை கண்டாரும் அஃதே!

எனவே இராமனின் தோள்கள் தாள்கள் தடக்கைகள் மூலம் மூன்று அரிய சம்பவங் களைக் காட்டி ஜாலவித்தை செய்கிறார் கவிச் சக்ரவர்த்தி. இங்கே நாம் கவனிக்கவேண்டிய மிக நுணுக்கமான சிகரமான பாகம் வருகிறது. அர்ச்சுனன் திரௌபதியின் சுயம்வரத்தில் வில்லை நாணேற்றி மீனக் குறியை அடித்தான். இங்கே சீதையின் சுயம்வரத்தில் வில்லை முறிக்க வேண்டுமென்று நிபந்தனை. மேரு வைப்போன்ற வில்லைக் கையாண்டு நாணேற்றி யல்லவா பராக்கிரமத்தைக் காட்டவேண்டும்? அதுவும் ஏற்கெனவே திருமால்-சிவன் போரில் உடைந்துவிட்ட வில்லாமே! அப்படியானால் அதை ஏன் உடைக்கவேண்டும் மேற்கொண்டு!

இராமனின் தோள், தாள், தடக்கை களைச் சேவித்த மிதிலையின் வாள் கொண்ட கண்ணார்களை, இன்னும் ஒரு மெருகு போட் டுக் காண்பிக்கிறார் கம்பநாட்டாழ்வார்! பார்த்தவர்கள் சாமானிய ஜனங்கள் அல்லவே! பல்லூழிக் காலமாக இறைவனுடைய வடிவழ கையும், தத்துவத்தையும் அறிய முயன்றுவரும் சாதுகோட்டியர்களைப் போல, மிதிலை மக்க ளும் அவனுடைய வடிவழகையும் குணவழகை யும் காண முயன்றார்கள். ''ஊழ்கண்ட சமயத்(து) அன்னான், உருவுகண் டாரை ஒத் தார்!''. இதனால் அரிய பெரிய தத்துவங் கள் விளங்குகின்றன.

இறைவன் உலகில் அவதரிக்கும்போதெல் லாம் பிராட்டியும் உடனே அவதரிக்கின்றாள். காரணம், ஈசுவரன் தன் இச்சையாக மக்களின் குற்றம் கண்டு தண்டித்து விடுவானே எனப் பயந்து அதைத் தடுப்பதற்கே! முமுட்சுப்படி துவய அதிகாரத்திலே பிராட்டியின் இந்த தன்மையை வெளியிடுருள்கிறார் பிள்ளை லோகாசாரியார்.

> ''ஈசுவர சுவாதந்தரியத்தையும், சேதனனு டைய (சீவாத்துமாக்களின்) அபராதத்தை யும் கண்டு அகல மாட்டாள்.'' (132).

இக்காரணத்தினால்தான், இறைவனோடு அவ தாரம்தோறும் பிராட்டியும் அவதரிக்கிறாள்! எனவே, இராமனாக இறைவன் அவதரித்த போது பெரிய பிராட்டியாரும் சீதாபிராட்டி யாக அவதரித்தாள்.

பெரியபிராட்டியார், சீதாபிராட்டியார் மிதிலையிலே அவதரித்த பிறகு, இராமனுக்கு விசுவாமித்திர மாமுனி கற்றுத்தந்த கலை களைப் பற்றி எல்லாம் அறிந்தாள். பிரபஞ் சத்தை ஆளும் இறைக்கும், உலகை ஆளும் இறைவனுக்கும் இரண்டு குணங்கள் பொது வானவை. ஒன்று துஷ்டநிக்கிரகம், மற்றையது சிஷ்ட பரிபாலனம். இராமன் தாடகைவதம் மூலமாக துஷ்ட நிக்கிரகம் பயின்றான். அக லிகை சாபவிமோசன மூலம் சிஷ்ட பரிபாலன மும் பயின்றான். சீதாபிராட்டி இந்த இரு குணங்கள் மட்டும் அமைந்த மாப்பிள்ளை தனக்குத் தேவை இல்லை என்றாள்!

''நான் உலகின் தாய். என் மக்களில் சில ரைத் துஷ்டர்கள் என்று வேறுபடுத்தி அவர் களை நிக்கிரகம் செய்ய ஒப்பமாட்டேன். சர்வ லோகமும் அறிய இராமன் (பெருமாள்) துஷ் டர்களையும் பரிபாலனம் செய்வதாகச் சபதம் பூண்டால்தான் அவரைத் திருமணம் செய்து கொள்வேன்.'' என்றாள். சிஷ்டபரிபாலனத் தின் சின்னமானது நாரணன் வலியில் ஆண்ட வில். துஷ்டநிக்ரகத்தின் சின்னமானது சம்மார மூர்த்தி சிவனின் வில். துஷ்டநிக்ரகக் கொள்கை சிஷ்ட பரிபாலனக் கொள்கையைவிடத் தாழ்ந் தது என்பதைக் காட்டவே முன்பு சிவதனுசு நாராயணதனுசுடன் தேவர்கள் அறிய மோதி வீரப்பட்டது. அந்த துஷ்ட நிக்ரகச் சின்ன மான சிவதனுசை,சுயம்வர மண்டபத்திலே அடி யோடு முறித்து, அதன்மூலம் 'இனி துஷ்டநிக் ரகம் செய்வதில்லை, துஷ்ட பரிபாலனம்தான் செய்வேன் என்று பலர் அறியச் சபதம் பூண வேணும்'' என்றாள் சீதாபிராட்டி! அப்படியே ஒப்புக்கொண்டு சிவதனுசை முறித்துப் போட் டான் இராமன்.

ஆனால் ஒரு சமரசமும் ஏற்பட்டது. சீதாபிராட்டியுடன் எழுந்தருளியிருக்கையில் துஷ்டநிக்ரகம் செய்வதில்லை, துஷ்டபரிபால னம் தான்! ஆனால் அவள் அருகில் இல்லாத சமயம் துஷ்ட நிக்ரகம் நடைபெறலாம். இதை அடிப்படையாக வைத்தே பிள்ளைலோகாசாரி யர் முமுட்சுப்படியில் பிராட்டியின் பெருமை யாக ஒரு இரகசியத்தை வெளியிடுகிறார்.

> ''இவள் சந்நிதியாலே காகம் தலைபெற்றது! அது இல்லாமையாலே இராவணன் முடிந் தான்!'' (135)

சீதையைக் காயப்படுத்தி அபசாரப்பட்ட காகாசுரன், இவள் முன்னிலையில் தலைதப்பி னான். சீதையைத் தீண்டாத இராவணனோ தலைகளை இழந்தான், பிராட்டி எதிரில் இன்மையாலே. எனவே நாம் பெருமாளை அடையும்போது: ''இளைய பெருமாளைப் போல (பெருமாளும் பிராட்டியுமான) இருவரு மான சேர்த்தியிலே (தொண்டு) அடிமை செய் வது முறை'' என்றும், ''அடிமைதான் சித்திப் பதும், ரசிப்பதும் அச்சேர்த்தியிலே'' என்றும் உபதேசித்தருள்கிறார் பிள்ளை லோகாசாரி யர்! இருவருமான சேர்த்தியிலே, அடிமை செய்தால், நம் குற்றங்களைப் பொறுத்தருளும் படி ஈசுவரனிடம் புருஷகாரம் செய்ய முடி

யுமா பிராட்டியால் என்று சந்தேகம் வேண்டாம். ''நீரிலே நெருப்புக் கிளருமாப்போலே (பெருமாளின்) குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தால் சீற்றம் பிறந்தால் பொறுப்பது இவளுக்காக'' என விளக்குகிறார் பிள்ளைலோகாசாரியர்.

முரட்டுச் சுபாவமுடைய அனுமனையே திருத்தி அசோகவன அரக்கியரை அவனிடமிருந்து காப்பாற்றிய பிராட்டி; தன் சொற்படிக் கேட்கக் காத்திருக்கும் பெருமாளை நிச்சயமாக நம் குறைகளைப் பொறுத்து ரட்சிக்கும்படிச் செய்வாள் என்று உபதேசிக்கிறார் பிள்ளைலோகாசாரியர்.

''திருவடியைப் (அனுமனைப்) பொறுப்பிக்கும‌வள் தன் சொல்வழி வருமவனை (பெருமாளைப்) பொறுப்பிக்கச் சொல்ல வேண்டாவிறே!''(139).

வடிவாய் வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும், அகலகில்லேன் இறையும் என்று அவன் மார்பில் உறையும் அலர்மேல் மங்கையுமான பிராட்டி, சீவாத்துமாக்களை இரட்சிக்கும் பொருட்டும், தன் நிலையை வெளிப்படுத்தும் பொருட்டும், மூன்று காரணங்களுக்காகப் பெருமாளை விட்டுப் பிரிகிறாள். அதாவது:

(1) தன் கருணையை வெளிப்படுத்த

(2) அவன் இட்ட வழக்காக இருக்கும் (தன் பாரதந்திரியத்தை) வெளியிட

(3) அவனைத் தவிர வேறு கதியில்லை என்ற (அநந்யார்கத்வத்தை) வெளியிடுகைக்காக.

இம்மூன்று காரணங்களுக்காகவும் பெரிய பிராட்டியார் சீதாபிராட்டியாக அவதரித்த போது பிரிந்ததைக் காணலாம். இராவணனால் பிரிக்கப்படுவதாகக் காட்டி, முதலில் பிரிந்த போது தேவமாதர்களை இராவணனது சிறையிலிருந்து மீட்டும், அசோகவன அரக்கியர்களை அனுமனிடமிருந்து காப்பாற்றியும் தனது கருணையை வெளியிட்டாள்.

மணிவயிறு வாய்த்திருந்தபோது பெரிய பெருமாளின் ஆணையால் வால்மீகி ஆசிரமத்தில் விடப்பட்டபோது பிரிந்தது; அவன் (இராமன்) இட்ட வழக்காகத் தான் இருப்பதை பாரதந்தர்யத்தை வெளிப்படுத்தவே.

சீதாபிராட்டி, வான்மீகிமுனிவரின் ஆசிரமத்திலிருந்து, அயோத்திக்கு மீண்ட பிறகு, பூதேவியானவள், நான் தூய்மையானவள் என் பதைக் காட்டத் தன்னுள் இடம் தருவாளாக! என்று சூளுரையிட்டு, பூதேவி அளித்த பீடத்தில் அமர்ந்து பூமிக்குள் பிரிந்து எழுந்தருளிய போது 'இராமனைத் தவிரக் கதியில்லை' என்று வாழ்ந்ததை (அநந்யார்கத்துவத்தை) வெளியிட்டாள்! பிராட்டியின் இப் பெருமைகளைப் பிள்ளைலோகாசாரியர் சீர்வசனபூடணத்தில் விளக்கியருள்கிறார். ''பிராட்டி முற்படப் பிரிந்தது தன்னுடைய கிருபையை வெளியிடுகைக்காக, நடுவிற் பிரிந்தது பாரதந்தர்யத்தை வெளியிடுகைக்காக, அநந்தரம் (கடைசியாக) பிரிந்தது அநந்யார்கத்துவத்தை வெளியிடுகைக்காக.(81)

பிராட்டியின் ஏனைய முக்கியமான சிறந்த சில குணங்களைக் காண்போம். இறைவனுடன் சேர்ந்திருப்பினும், பிரிந்திருப்பினும் சீவர்கட்கு இறைவனின் கருணைகிடைக்க உதவுவாள். '' சம்ச்லேஷ விச்லேஷங்கள் இரண்டிலும் புருஷகாரத்வம் தோற்றும். கூடியிருக்கும் நிலையில் சீவர்களையும் திருத்துவாள். இருவரையும் தன் இனிய உபதேசத்தாலே திருத்துவாள்''. சம்ச்லேஷ தசையில் ஈஸ்வரனைத் திருத்தும்; விச்லேஷ தசையில் சேதனனைத் திருத்தும் இருவரையும் திருத்துவதும் உபதேசத்தாலே. உபதேசம் பலனளிக்காவிடில், உபதேசத்தாலே மீளாதபோது, சேதனனை அருளாலே திருத்தும், ஈசுவரனை அழகாலே திருத்தும்!

இராம நம்பியைக் காணச் சீதை நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும் என்று எடை போட்ட கம்பநாடர், சீதையான கொம்பினைக் காணுந்தோறும் (பார்க்கும்போதும் ஒவ்வொரு முறை பார்க்கும்போதும்) இராமகுரிசிற்கும் அன்னதே யாம் என்று சீதாபிராட்டியின் வடிவழகைச் சிறப்பித்துள்ளதால், பிராட்டிதன் அழகாலே பெருமாளைத் திருத்துகிறாள், தன் கடைசி காரணமாக என்பதில் என்ன ஐயம்! பெரிய பிராட்டியாரின் பெருமையை, வைபவத்தை, சீதாபிராட்டியின் மூலம் ஒருவாறு அறிந்தோம்.

## செய்திச் சுருக்கம்

இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில் மலைமீது கட்டப்பெற்றுள்ள குடிநீர்த்தேக்கத்தொட்டி (கொள்ளளவு 90,000 லிட்டர் - மதிப்பீடு ரூ. 45,000), 12.10.80 அன்று அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களால், அறநிலைய ஆணையர் திரு. யு. சுப்ரமணியன் அவர்கள் தலைமையில், திறந்து வைக்கப்பெற்றது. அது போது மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் நிகழ்த்திய சிறப்புரை, இந்த இதழில் விரிவாக வெளியிடப்பட்டுள்ளது.

—ஆசிரியர்.

# திருக்கழுக்குன்றத் தலச் சிறப்பு

'சங்கநூற் பெரும்புலவர்'

தவத்திரு. குருகுலம் அழகரடிகள், மதுராந்தகம்

திருக்கழுக்குன்றம் :

தேவாரப் பாடல் பெற்ற தொண்டை நாட்டுச் சிவத்தலங்களுள், திருக்கழுக்குன்றம் பெரும் சிறப்பு வாய்ந்ததாகும். திருக்கழுக் குன்றம், நால்வர்களின் பாடலும் பெற்றது. தொண்டை நாட்டில் நால்வர் பதிகம் பெற்ற தலம், இதனைத் தவிர வேறு இல்லை. நால்வர்களும் வேறுவேறு காலத்தவர். ஆயினும் ஒரே கோட்பாடு உடையவர்கள். நால்வர் என்றதுமே, அப்பர் சம்பந்தர் ஆரூரர் மாணிக்க வாசகர் என்பவர்களின் நினைவே வரும். திருக்கழுக்குன்றத்தில் இந்நால்வரும் மலை மீது ஏறவில்லை. மலைவலம் மட்டும் வந்தார்கள். நான்கு வேதங்களே திருக்கழுக் குன்றத்தில் மலையாக அமைந்திருக்கின்றன என்பது மரபு. அதனால், அம்மலைமீது கொண்ட பெரும் மதிப்பினாலும் பக்தியினாலும், நால்வர் பெருமக்கள் அம்மலைமீது ஏறவில்லை. மலைவலம் மட்டும் வந்தார்கள்.

திருநாவுக்கரசர் :

திருநாவுக்கரசர் பெருமான், தம் தல யாத்திரையில் சோழநாட்டிற்குச் சென்றார். அங்கே திருப்புகலூர்த் தலத்தில் நீண்ட காலம் தங்கியிருந்து, திருப்புகலூர்ப் பெருமானை வழிபட்டு வந்தார். அங்ஙனம் சோழநாட்டில் திருப்புகலூரில் தங்கியிருந்தாராயினும், அவருக்கு எப்போதும் திருக்கழுக்குன்றத்தின் நினைவு இருந்து கொண்டேயிருந்தது. சோழநாட்டில் தங்கியிருந்தாலும், அவர்தம் சிந்தை, தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த திருக் கழுக்குன்றத்தில் பெரிதும் ஈடுபட்டிருந்தது. ஒரு சித்திரை மாதத்துச் சதயத் திருநாளில், அவர் சிவபிரானோடு இரண்டறக் கலந்து ஒன்றி இன்புறும் நிலையினை எய்த இருக்கின்றார். அங்ஙனம் இவ்வுலக வாழ்வை நீத்தொழித்து இறைவனோடு ஒன்றப்புகும் இறுதி நிலையிலும்கூட, அவருக்குத் திருக்கழுக்குன்றத்தின் நினைவே, மேலோங்கி நின்றது. அதனால்,

தேவார்ந்த தேவனைத் தேவர் எல்லாம்
திருவடிமேல் அலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்!
கழுக்குன்றத் துச்சியாய்! கடவுளே! நின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்!
பூம்புகலூர் மேவிய புண்ணியனே!

என்று, தாம் பாடிய திருப்புகலூர்த் திருத் தாண்டகத்தில், ''கழுக்குன்றத்து உச்சியாய்! கடவுளே! நின் பூவார்ந்த பொன்அடிக்கே போதுகின்றேன்'' என்று, திருநாவுக்கரசர் பாடுவாராயினர்.

மலை உச்சியில் பாறைகளின்மேல், கோயில் கட்டப் பெற்றிருக்கின்றது. எத்தனையோ சமதரைகள் மலையின்மீது இருந்தாலும், இவ்வாறு கோயில் கட்டப் பெற்றுள்ளமையால், இங்கே உச்சியில் மட்டும் ஏதோ ஓர் இயற்கைச் சிறப்பு அமைந்திருத்தல் வேண்டும் என்று தோன்றுகிறது. இங்கு இறைவன் இயல்பாக ஒரு பாறையின் இடுக்கில் முளைத்தார்; அதனால் இங்குள்ள வேதகிரீசுவரப் பெருமான், பிறர் நிறுவிய அல்லது உளியால் செதுக்கிய இலிங்கம் அன்று; இயல்பாகவே தோன்றிய சுயம்புலிங்கம்! இப்போது அதன் மேல், காப்பாக ஒரு கவசம் அமைக்கப்பட்டுள்ளது.

திருச்செங்கோடு, திருச்சிராப்பள்ளி, திருஈங்கோய்மலை, திருவாட்போக்கி, முதலிய தலங்களிலும் கோயில்கள் உச்சியில்இருப்பினும், திருக்கழுக்குன்றம் மலையுச்சியில் உள்ள கோயிலுக்குத்தான், பெரும் சிறப்பு உள்ளது. அதனாலேதான், அங்கெல்லாம் இறைவன் மலையுச்சியின் மேலுள்ள சிறப்பினைப் போற்றாமல் திருக்கழுக்குன்றத்தில் உள்ள இறைவனை மட்டும் திருநாவுக்கரசர் ''கழுக்குன்றத்து உச்சியாய்! கடவுளே!'' என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

இனி, 'கயிலாயத்து உச்சியாய்' 'கழுக் குன்றத்து உச்சியாய்' என்று, இரண்டு இடங்கள்

தவிர, வேறு எந்தத் தலமும் கோயிலும், இவை களைப் போல் மலையுச்சியில் தனிப்பெருஞ் சிறப்பாக அமையவில்லை. ஏனைய தலங் களெல்லாம் திருக்கயிலாயத்துக்கு இணை யன்று; திருக்கழுக்குன்றம் ஒன்றே, திருக்கயி லாயத்துக்கு இணையானதாகும்.

**பட்சி தீர்த்தம் :**

திருக்கழுக்குன்றத்திற்குப் பட்சிதீர்த்தம் என்றும் ஒரு பெயருண்டு. இந்தியாவின் வடக்குப் பகுதியில் இப்பெயர் பெரிதும் சிறப்பாக வழங் கப்படுகிறது. இரண்டு கழுகுகள் காலையில் காசியில் கங்கையில் நீராடித், திருக்கழுக்குன் றத்தில் பகலுணவு அருந்தி, இராமேசுவரத்தில் இரவைக் கழிக்கின்றனவாம். பறவைகளில் தலைமையானதும், வலிமை மிக்கதும் கழுகு. உருசியாவிலிருந்தும், வேடந்தாங்கலுக்குப் பற வைகள் வேகமாக வருகின்றனவாம். பறவை களுக்கு வேகமாகப் பறந்து செல்லும் ஆற்றல் உண்டு. அம்முறையில், இக்கழுகுகளும் வேகம் உடையன போலும். புலால் உண்ணும் இயல் புடைய கழுகுகள், திருக்கழுக்குன்றத்தின் மலை மீது தேசிகர் தரும் நெய்யோடு கூடிய சர்க் கரைப் பொங்கலை உணவாக உண்ணுதல், ஒருவகையில் வியப்பாகவும், தெய்விக நிகழ்ச்சி யாகவும் உள்ளது. கழுகுகள் வருதல் திருக் கழுக்குன்றத்தில் ஒரு பெரும் சிறப்பு நிகழ்ச்சி யாக, அனைவரும் கண்டு களிக்கத்தக்கதாக விளங்கி வருகின்றது. இற்றைக்கு 600 ஆண்டு களுக்கு முன்பு வாழ்ந்திருந்த அருணகிரிநாத ரும், இந்நிகழ்ச்சியைத் தமது திருப்புகழில், ''கழுகு தொழு வேதகிரி'' என்னும் தொட ரால் குறிப்பிட்டுள்ளார். இக்காரணம்பற்றியே இத்தலத்திற்குப்பறவைகளின் கோயில் என்னும் பொருளில், பட்சி தீர்த்தம் என்னும் பெயர் வழங்கி வருகின்றது.

**சம்பந்தர் :**

திருஞானசம்பந்தர், திருக்கழுக்குன்றம் பற்றி ஒரு தேவாரத் திருப்பதிகம் பாடியிருக் கின்றார். அதில் இறைவன் திருக்கழுக்குன்றத் தலத்தை மிகுதியாக விரும்புகின்றான் – காத லிக்கின்றான் என்பதை, ஒவ்வொரு பாடலிலும் இறுதி வரியில் ''காதல் செய் கோயில் கழுக் குன்றே'' என்று சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

தோடுடையான் ஒருகாதில்
தூயகுழை தாழ,
ஏடுடையான் தலைகலனாக
இரந்து உண்ணும்
நாடுடையான், நள்ளிருள்
ஏம நடமாடும்
காடுடையான் காதல்செய்
கோயில் கழுக்குன்றே!

இறைவன் காதலிப்பது உமையம்மை ஒருவ ரைத்தான். இரண்டாவதொன்று, இடமாகக் காதலிப்பதானால், இறைவன் காதலிப்பது திருக்கழுக்குன்றம் என்ற தலத்தைத்தான், என்று திருஞானசம்பந்தர் குறிப்பிடுவது, நாம் சிறப்பாகக் கருதி மகிழ்தற்குரியது. ''பெண்மகள் தன்னை ஒருபாகம்காணவல்லான் காதல் செய் கோயில் கழுக்குன்றே'' என்றும், ''பெண்மகள் தன்னோடு ஒருபாகம் காதல் செய்தான், காதல் செய் கோயில் கழுக்குன்றே' என்றும் வரும் தேவாரப் பகுதிகள், இவ்வுண் மையை வலியுறுத்தும். திருக்கழுக்குன்றம் மலை யில், வேதகிரீசுவரப் பெருமான் சிறப்பு. தாழக் கோயிலில் திரிபுரசுந்தரியம்மை சிறப்பு.

**சுந்தரர் :**

நம்பியாரூரர் என்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும், திருக்கழுக்குன்றம் பற்றி ஒரு தேவாரத் திருப்பதிகம் அருளிச் செய்துள்ளார். திருக்கழுக்குன்றம் தேவர்பிரான் ஆகிய சிவ பிரான் உறையும் இடம் என்றும், அத்தலத் தைச் சென்று வழிபடுவதனால் கொலைப் பாவம் முதலிய கொடிய பாவங்களெல்லாமும் கூட நீங்கும் என்றும், அதனால் அங்குச்'சென்று சென்று தொழுமின்' என்றும், நம்பியாரூரர் இத்தலத்தைச் சிறப்பித்து ஓதுகின்றார்.

கொன்று செய்த கொடுமையாற்
பல சொல்லவே
நின்ற பாவ வினைகள்தாம்
பல நீங்கவே,
சென்று சென்று தொழுமின்
தேவர் பிரான் இடம்,
கன்றி னோடு பிடிசூழ்
தண்கழுக் குன்றமே!

**மணிவாசகர் :**

மாணிக்கவாசகர் அருளிச் செய்த திரு வாசகப்பதிகம் ஒன்றும், திருக்கழுக்குன்றத்தின் சிறப்பை விளக்குவதாகக் கிடைத்துள்ளது. மாணிக்க வாசகர் திருப்பெருந்துறையில் சிவ பிரானின் திருவடிகளை அடையப்பெற்று, அவற்றைத் தலைமேல் தாங்கிக் கொண்டு, வடக்கே திருக்கழுக்குன்றம் வந்து சேர்ந்தார். ஆதலின் திருப்பெருந்துறையையும் திருக்கழுக் குன்றையும் இணைத்து அத் திருவாசகப்பதிகம் அருளிச் செய்யப் பெற்றுள்ளது. மணிவாசகர் இடையில் பிற தலங்களுக்கும் சென்று வழிபட் டாராயினும், தலப்பயணத் தொடக்கம் திருப் பெருந்துறையிலும், அதன் முடிவு திருக்கழுக் குன்றத்திலுமே, அவருக்கு அமைந்தன. இரண் டும் இணைந்தனவேயாயினும், இத்திருவாசகத் திருப்பதிகம் திருக்கழுக்குன்றத்திலேயேஅருளிச் செய்யப் பெற்றது. காரணம் திருப்பெருந் துறையில் அவர் பெற்ற குருதரிசனம், மீண்டும் அவருக்கு இத்திருக்கழுக்குன்றத்திலேதான், கிடைக்கப் பெற்றது.

பிட்டு நேர்பட வந்த
பெருந்துறைப் பெரும் பித்தனே!
சட்ட நேர்பட வந்திலாத
சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்;
சிட்டனே சிவலோகனே! சிறு
நாயினும் கடையாய வெம்
கட்டனேனையும் ஆட்கொள்வான் வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே!

**சுயம்புலிங்கம் :**

வேதமலையில் இறைவன் வேதங் கடந்த பெருமானாய் இருப்பதனால், மலைக்கு மேல்

கோயில் அமைந்தது. கோயில் இருக்கும் இடத்துக்கு மேல், உச்சியிடம் மலைமுழுதும் இல்லை. கோயில் உள்ள இடமே உச்சி இடம். கோயில் வாயில் கிழக்குப் பார்த்தது. கோயிற் கருவறையில் 'சிவலிங்கம்' உள்ளது; பின்பக்கச் சுவரில் கந்தப் பெருமானுடன் கூடிய அம்மையப்பர் திருவுருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. எதிரில் பலிபீடமும், கொடி மரமும், முன்மண்டபத்தில் உள்ளன. அங்கு வடகிழக்குப் பக்கம் வேள்விக்கும் மேடை இருக்கிறது. சுவர்கள், சாளரங்களெல்லாம் கோயில் முழுதும் கருங்கற்களால் ஆனவை. கருவறையைச் சுற்றி ஒரு சுற்று உள்ளது; கோயில் பழுதின்றி நன்றாக அமைந்திருக்கிறது; திருமுன்னிலை கிழக்கு நோக்கியது.

மலையின்மேல் நந்தி இல்லை. அதற்குரிய நந்தி, திருவாயிலுக்கு நேர் கீழே, நால்வர் கோயிலில் உள்ளது. மலையைச் சுற்றிலும், நந்திகளும் பலிபீடங்களும் உள்ளன. தாழக் 'கோயிலில் பெரிய நந்தி ஒன்று மலையைநோக்கி, திருமுன்னிலைக்குப் பின்புறமாய் ஒரு குளக் கரையில் உள்ளது. அக்குளத்திற்கு 'நந்தி தீர்த்தம்' என்று பெயர்.

R. RAJU
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

**திருநந்திதேவர் :**

கடவுள் வேதமலையைக் கடந்திருப்பதனாலும், நந்தியெம் பெருமானுக்கு வேதத்தை அறிவுறுத்தினார் என்பதனாலும், நந்தியெம் பெருமானை எதிரில் வைத்தே அறிவுறுத்த வேண்டியிருத்தலாலும், எதிரிலுள்ள நால்வர் கோயிலில் நந்தி அமைந்தது. நால்வர் கோயிலில் அமைய வேண்டிய காரணம், நால்வர் அருளிய தேவார திருவாசகங்களும் 'மறை' என்று போற்றப்படுதலால் என்பது. அறிவுறுத்துபவர் மேல்நிலையிலும், கேட்பவர் கீழ் நிலையிலும் இருந்தே, மனவொருமையுடன் கேட்க வேண்டியிருத்தலால், நந்தி கீழே அமைவதாயிற்று. நால்வர் பெருமக்களும், எதிரில் தாழவே இருந்து தமிழ் வேதத் திருப்பதிகங்களை ஓதியிருக்கின்றனர்.

வேதங்களே மலைவடிவமாக அமைந்துள்ளன என்பது மரபாதலின், சைவ சமயாசிரியர் நால்வரும், மலையின்மேல் ஏறவில்லை. மலையைச் சுற்றி வருவதற்குப் பாட்டை உள்ளது. திருத்தணி, பழநி முதலிய தலங்களிலெல்லாம், மலையைச் சுற்றி வர, அண்மையிலேதான் பாட்டைகள் அமைந்தன. திருக்கழுக்குன்றம் வேதமலையானதனால், மலையின் மேல் நால்வர் பெருமக்கள் ஏறாமல், மலையை மரியாதையுடன் சுற்றி வந்து, திருமுன்னிலைக்கு எதிரில் நின்று திருப்பதிகங்கள் பாடினார்கள். ஆதலால் அவர்கள் காலத்துக்கு முன்பே மலைப்பாட்டை மிகப் பழைய காலத்திலேயே அமைந்துவிட்டது

**நால்வர் கோயில் :**

நால்வர் பெருமக்கள் வலம் வந்து நின்று, திருப்பதிகங்கள் பாடிய இடத்திலே தான், நால்வர் கோயில் தனியாக அமைந்திருக்கிறது. நந்தியும் அங்கே அமைந்து விட்டது. மாணிக்கவாசகப் பெருமான் திருப்பெருந்துறையிலிருந்து ஏந்தி வந்த இறைவன் திருவடியும், நால்வர் கோயிலில் உள்ளது. அதற்குக் கோபுரம் அமைந்திருக்கிறது. ஆக, நந்தியும் திருவடி நிலையும் நால்வர்கோலமும் சேர்ந்ததே, இறைவன் திருமுன்னிலையாய், நால்வர் கோயிலாய், இருக்கிறது.

மலைமேல் இறைவன் திருமுன்னிலை என்பது, அன்றாட வழிபாட்டுக்காக அமைந்ததேயன்றி, அடியார்களின் வழிபாட்டுக்கு அன்று; அடியார் வழிபாட்டுக்கு நால்வர் கோயிலே, திருமுன்னிலையாக அமைந்திருக்கிறது. இவ்வாறு தமிழகத்திலும் இந்தியாவிலும் எங்கும் அமைப்பில்லை. கோயில்களில் பெரும்பாலும் அம்பலவாணர் திருமுன்னிலைக்கு எதிரில் நால்வர் திருவுருவங்கள் நிறுவப்படும்; திருக்கழுக்குன்றத்தில் மலைக்கடவுளுக்கு முன் நால்வர் கோயில் தனியாகத் தாழ்வரையில் அமைந்திருக்கிறது; இது, திருக்கழுக்குன்றத்தின் தனிச் சிறப்பு!

நந்திக்குக் குறுக்கே யாரும்செல்லக்கூடாது. காரணம், அருளுரை பகரும் இடம்; நந்திக்குப் பின்புறமே திருவடிக் கோபுரமும் இருக்கிறது. இறைவன் 'பசுபதி' ஆனதனால், பசுவாகிய நந்தி உயிர்களுக்கெல்லாம் தலைமையாய் விளங்குகிறது. அதனால், திருவடி அதன்பின் அமைந்தது! வழிபடுவோர் முதலில் மலைவலம் வருவர்; வந்து, நால்வர் கோயிலில் மலை வலத்தை முடிப்பது வழக்கமாய் இருக்கிறது. வழிபடுவோர், இறைவன் திருமுன்னிலையாகிய நால்வர் கோயிலில், திருவடிக்கோபுரத்துக்குப் பின்புறமும், நால்வர் பெருமக்களுக்கு முன்பும் நின்றிருந்து வழிபாடு செய்வர்; திருக்கழுக் குன்றத்திலேயே, வேதமலைப் பெருமானுக்குத் திருமுன்னிலையாய் இருப்பது நால்வர் திருமுன்னிலையாகிய நால்வர் கோயிலே!

**திருவிழாக்கள் :**

சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாதங்கள் நால்வர் திருநாட்கள் வருகின்றன. ஆண்டுதோறும் அவை முதல் நான்கு மாதங்களாக வருவது, முதலில் சமய குரவர்களே வழிபாடு செய்யப்படுவதற்குரியவர் என்பதை நினைவூட்டுகின்றது. அடுத்து ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை என்னும் ஆறுமாதங்கள், சமயத்தில் உட்பிரிவுகளாகிய கணபதி, அம்மை, முருகர், ஒளிக்கடவுள், அம்பலவாணர், சூரியன் முதலியவர்களின் வழிபாடுகள் வருகின்றன; யாரை வழிபட்டாலும் முழுமுதற் கடவுளையும் சேர்த்தே வழிபாடு செய்வது முறை! ஏனென்றால் கடவுளின் பாகங்களே இவர்கள்; திருக்கோயில்களிலும் இதற்குரிய கடவுளமைப்பு உண்டு; தனியாக யாரும் அமைவதில்லை.

அதன்பின், மாசியில் முழுமுதற் கடவுளைச் 'சிவராத்திரி'யிலும், அம்மையைப் பங்குனி மாதத் 'திருஉத்திரத்'திலும் சிறப்பாக வழிபாடு செய்வது மரபு; இங்ஙனம் வழிபடுவோர் பங்குனித் திருவுத்திரத்தில் அம்மையப்பர்க்குத்

திருமணவிழா நடத்தித் தாமும் கூட்டாகத் திருமணங்கள் செய்து கொண்டு வாழ்க்கை நடத்துவர். மாசி, பங்குனி மாதங்கள் இரண்டும், முழுமுதற் கடவுளாகிய அம்மை அப்பர் வழிபாட்டுக்கு உரியவை; இதோடு ஆண்டு முடிவடைகிறது. சமய அன்பர்கள் இவ் ஒழுங்கினை நினைவு கூர்வர். சமய அன்பர்களுக்கு, முதலில் சமய குரவர் திருநாள் வழிபாடு முக்கியமானது என்பது, முதல் நான்கு மாதங்களில் மாதந்தோறும் முதலில் அமைந்த இவ் வழிபாட்டு நிலைகளிலிருந்து நன்கு தெரிகிறது. ஆண்டமைப்பு இவ்வாறு இருந்தும், மக்கள் பெரும்பாலும் இதனைக் கவனிப்பதில்லை. குருமார் அருள் பெறாமலே ஆண்டவன் திருவருள் பெறச் சிலர் முந்துகின்றனர்.

''சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந்திட மன்றுள் வெளி காட்டும்
இந்தக் கருத்தை''

என்று, தாயுமான அடிகள், சமய நெறி கடந்த கடவுளைத் திருவம்பலத்துள் அறியலாமென்று தெளிவித்தல் உணர்தற்குரியது.

சமய உட்பிரிவுகளில் கார்த்திகை மாதம் ஒளிமாதம் என்பதும், மார்கழி மாதம் அவ்வொளியைத் திருவம்பல ஒளியாகக் காண வேண்டும் என்பதும், முக்கியமாய் இருக்கின்றன; அத்தகைய முக்கியங் கருதியே திருக்கோயில்களில் சமய குரவரில் மாணிக்க வாசகர் திருவம்பலத்தின் பீடத்திலேயே அம்மை அப்பரோடு ஒருங்கு சேர்ந்திருத்தல் காணலாம். ஞான மா ஞான குரவர் மாணிக்கவாசகர். மார்கழி மாதம் திருவாதிரை விழாவும், மாணிக்க வாசகரின் திருவெம்பாவை விழாவும் முதன்மையாய் இருப்பதும் கவனிக்கத்தக்கது! அம்பலவாணர் திருமுழுக்கு இம்மாதத்திற் சிறப்பு! ''ஆதிரை நாளால் அதுவண்ணம்'' என்பது திருமுறை! ''மார்கழி மாதம் திருவாதிரை நாள் வரப் போகிறது ஐயே'' என்று நந்தனார் மிக ஆவலாகக் கூறுவதாக 'நந்தனார் கீர்த்தனை'யும் பாடும்.

**குருவருள் :**

இங்ஙனமெல்லாம், நால்வர் வழிபாடு மக்களுக்கு ஆண்டு முதலில் இன்றியமையாததென்பது இனிது விளங்கும். அதற்குத் திருக்கழுக்குன்றத்தில் நால்வர் திருமுன்னிலையும், நால்வர் கோயிலும் நன்றாக விளங்கவேண்டியிருக்கின்றன. நாடு முழுதுமிருந்து எல்லா மக்களும் ஆண் பெண் குழந்தைகள் அனைவருமாக நால்வர் திருவருளைப் பெறுவதற்கு நால்வர் திருநாட்களில், திருக்கழுக்குன்றத்தில் ஒருங்கு சேர்ந்து வழிபாடு செய்வது முக்கியம். திருக்கழுக்குன்றத்திலேதான், நால்வர் திருமுன்னிலை தெய்வத் திருமுன்னிலையாக (வேதமலைப் பெருமான் திருமுன்னிலையாக) விளங்குகிறது. 'குருவருளால் திருவருள்' பெறுவதென்பது நன்றாக அமைந்துள்ள வகை, இந்தத் தலத்தில் மிகச் சிறப்பு !

அவரவர் இடங்களிலும் ஊர்களிலும் ஏனைத் தலங்களிலும் நால்வர் வழிபாட்டை உருகிச் செய்யலாமாயினும், 'குருவருளால் திருவருள்' என்னும் உண்மைக்குத் திருக்கழுக்குன்றத் தலம் தகுதியாயிருக்கிறது. ஏனைய மாதங்களில் வரும் நால்வர் நாட்களிலெல்லாம் அன்பர்கள் அவரவர் இடங்களில் நால்வரை வழிபட்டு, ஆண்டுக்கு ஒருகால் சித்திரை முதல் ஆடிவரையில் வரும் நால்வர், திருநாட்களில், திருக்கழுக்குன்றம் நால்வர் கோயிலுக்கு வந்து, வழிபடுதல் சிறப்பாகும்; தெய்வத் திருமுன்னிலையும் நால்வர் திருமுன்னிலையும் ஒன்றாய் இருப்பதோடு, நால்வர் கோயில் தனிக் கோயிலாகவும் மலைத் தாழ்வரையில் நேரே அமைந்திருக்கிறது; திருக்கழுக்குன்றம், பிணி தீர்த்து அருள்சேர்க்கும் மலைத்தலம் என்பது கவனித்தற்குரியது.

''குருவழி யாய குணங்களில் நின்று
கருவழி யாய கணக்கை அறுக்க''

(திருமூலர்: 2655)

திருக்கழுக்குன்றம் நிறைவாக உதவும். திருக்கழுக்குன்றத்துக்கு வர இயலாதவர்கள், அவரவர் இடங்களிலும் தலங்களிலும் வழிபட்டுக் கொள்ளலாம்; மேலும், திருக்கழுக் குன்றம், நால்வர் திருப்பதிகங்களும் பெற்றது. நால்வர் பாடல்களை அங்கே நால்வர் கோயிலில், நால்வர் திருமுன்னிலையில் இருந்து பாடுதலும் இசையரங்கு நடத்துதலும் மிகச் சிறப்பு.

**நால்வர் விழா :**

நால்வர் திருநாள் விழாக்களில், சித்திரை மாதத்தில் அப்பர் திருநாளில், நாடெங்கும் உள்ள சமயத் தொண்டர்கள் 'தொடர் விழா' வாகத் திருக்கழுக்குன்றத்தில் ஒருங்குகூடி வழிபாடு செய்யலாம். கூட்ட விழாவும் எடுக்கலாம்; அடுத்த ஆண்டு வரையில், தாம்தாம் செய்ய வேண்டிய திருத்தொண்டுகள் பற்றிச் சூள் ஏற்றுக் கொள்ளலாம். விழாவுக்கு முன், முழுமுதற் கடவுளின் திருக்கொடி ஏற்றுதல் இன்றியமையாதது.

வைகாசித் திங்களில், ஞானசம்பந்தர் திருநாளில், அவர் இசைவல்லவரானதனால், எல்லாரும் ஒருங்குகூடி ஞான சம்பந்தரை வழிபட்டு, 'இசைவிழா' நடத்தலாம். ஆண்டுக்கு ஒரு நாள் திருக்கழுக்குன்றத் தலத்தில் இசை வல்லுநர் ஒருங்கு சூழ்ந்து, அந்த ஆண்டுமுழுதும் அவரவர் பயின்ற புதுப்புது இசைமுறைகளைப் பாடி வழுத்தலாம். சிறந்த இசை வல்லுநர் அனைவரும், அவரவரே முன்வந்து வழிச் செலவு, கைச்செலவு முதலிய எல்லாச் செலவுகளையும் ஏற்று, இறைவன் காணிக்கையாக ஆண்டவன் மலைத்தாழ்வரையில் நால்வர் கோயிலில், தம் இசைகளை மிழற்றினால், ஏனை மாதங்களில் ஆண்டுமுழுதும் நாட்டில், வருவாய் பெருக்கிக் கொள்ளலாம்; மெய்யன்புடையவர்க்கு எல்லா நலங்களும் வாய்க்கும். முன் வரிசையிலுள்ள தக்க இசைவாணர் பலரும் இவ்விழாவில் அவரவர் பொறுப்பிலேயே

ஈடுபடுதல் நல்லது; வரவேற்புக்கும் உண்டி இருப்பிடங்களுக்கும் குறைவிராது. உறுப்பின ராகத் தம்மை ஒரு குழுவாக்கிக்கொள்ளுதலும், அரசிற் பதிவு செய்து கொள்ளுதலுங்கூட உதவியாயிருக்கும். இசைவாணர்க்கு நால்வர் திறத்திலும், அவர்கள் மறை வாக்குகளிலும் உருக்கம் முதன்மை.

ஆனிமாதம் மாணிக்கவாசகர் திருநாளில் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் நான்கு நாட்கள் சிறப்பாக விழா நிகழ்த்துகிறது; 32 ஆண்டாக மேற்கொண்டு ஊக்கமாக நடத்தி வருகிறது. அது 'ஓதுவார்விழா' வாக மலையைச் சுற்றிலும் பல ஊர்ப் பாராயணக் குழுக்களை வரவழைத்து நடத்தி வருகிறது. மற்ற திருநாட்களுக்கும் அவ்வாறே அங்கங்குள்ள அடியார் திருக்கூட்டங்கள் நடத்த முன் வரலாம்.

ஆடி மாதம் சுந்தரர் திருநாளில், சிவாச்சாரியர் விழா நடத்தப்படுகிறது. எல்லாச் சிவாச்சாரியர்களும் ஒருங்கு கூடி விழா நிகழ்த்தி மகிழலாம். 'முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்' என்று சுந்தரமூர்த்தி நாயனாரே அருளிச் செய்கின்றார்; அச்சிறப்பில், நாடுமுழுதும் மக்கள் திரண்டு அவ் விழாவை மேம்படுத்தலாம். ஆரூரர், 'திருத்தொண்டத் தொகை' பாடியவர், அதில் தில்லைவாழ் அந்தணருடன் ஏனை அடியார்களும் போற்றப்படுகின்றனர். அடியார் பெருமக்கள் விழாவாக ஆரூரர் திருநாள் விழாவை நடத்துதல் நன்று.

திருநாட்களைக் கொண்டாடுதலும், திருவிழாக்கள் நடத்துதலுமெல்லாம் மக்கள் முன்னேற்றத்துக்கே யாதலின், பல துறை வல்லுநர்க்கும் பொறுப்புக்கள் மிகுதியா யிருக்கின்றன; நால்வர் திருப்பதிகங்களில் மனித குலத்துக்கும், ஏனைச் சிற்றுயிர்த் தொகுதிக்கும் தேவையான எல்லாச் சீர்திருத்தங்களும் திருக்குறட் பொதுமறையிற்போல நிரம்பியுள்ளன.

திருக்கழுக்குன்றத்தில் இப்போதும் நால்வர் திருநாட்கள் நடைபெற்று வருகின்றன; என்றாலும், நாடு முழுதும் ஒருங்கு திரண்டு நால்வகை விழா நாட்களாக மிகச் சிறப்பாய் நடைபெறுதல் இன்றியமையாதது.

## செம்மைத் தமிழின் சிறப்பு

மொழிகள் பலப்பலதாம் மூதுலகில் உண்டு!
இழிவின் றவையுயர்ந்த வேனும்,—விழுமியநல்
தெய்வ நலம்சிறந்த சீர்த்தியினிற் செந்தமிழ்போல்,
வையத் துயர்ந்தனஇல் மற்று!

சட்டத்தில் லத்தீனம்; சால்பறத்தில் ஈபுருவம்;
தட்பமிகு தத்துவத்தில் சம்ஸ்கிருதம்;—நுட்பமிக
ஆன்ற அறிவியலில் ஆங்கிலம், செர்மன், ஃபிரெஞ்ச்போல்,
சான்றஇறை மாண்பில் தமிழ்!

நம்மருமைச் செந்தமிழின் நல்லமைப்பை ஆராய்ந்தால்
செம்மைமிகு நற்றமிழர் தெய்வநல-மெய்ம்மைகள்தாம்
எல்லாம் பொதிந்தொளிர்தல், யாரும் இனிதுணர்ந்து
நல்லோராய் வாழ்வர்! நயந்து.

செகப்பிரியர் பேசிய சீர்மொழி என்று
மிகப்பெரிதும் கொள்கின்றார் வீறு!—தகச்சிறிதோ
நம்மருமை ஆழ்வார்கள் நாயன்மார் கள்பாடும்
செம்மைத் தமிழின் சிறப்பு!

—ஆசிரியர்.

# மீனாட்சி சுந்தரேசுவரர்

மதுரையில் உள்ள அம்பிகைக்கு மீனாட்சி அம்மை என்றும், சுவாமிக்குச் சுந்தரேசுவரர் என்றும் பெயர் வழங்கும்.

மீனாட்சி என்னும் சொல்லுக்கு 'மீன் போன்ற கண்ணையுடையவள்' என்பது பொருள். அட்சம்-கண்; அட்சி-கண்ணை யுடையவள். மீனம்-மீன். மீன அட்சி-மீனாட்சி.

கோழி தன் முட்டைகளைச் சிறகுகளால் அணைத்து அடை காத்துக் குஞ்சு பொரிக்கச் செய்து பாதுகாத்தல் போலவும்; கடலில் ஓர் இடத்தில் தான் இட்டு வைத்த முட்டைகளை, அங்கிருந்து நெடுந்தூரம் சென்று விட்ட பின்னரும் மனத்தால் நினைவு கூர்ந்து, அந்நினைவு மாத்திரத்தினாலேயே அம்முட்டைகள் குஞ்சு பொரித்து உயிர் வாழும் வண்ணம் செய்கின்ற ஆமையைப் போலவும்; மீன் தான் இட்ட முட்டைகளைத் தனது கண்களினாற் பார்த்து, அப் பார்வையினாயே குஞ்சு பொரிக்கச் செய்து காப்பாற்றும்.

மீனானது தன் கண்களின் பார்வையினாலேயே தன் முட்டைகளைக் குஞ்சு பொரிக்கச் செய்து காப்பாற்றுதல் போல, அம்பிகையும் தனது திருவருட் கடைக்கண் பார்வையினாலேயே, உலகத்திலுள்ள உயிர்த் திரள்களையெல்லாம் பாதுகாத்து வருகின்றாள். ஆதலின் மீனாட்சி (அங்கயற்கண்ணி) என்பது, அம்பிகைக்கு ஒரு பெயர் ஆயிற்று.

''ஒளியால் உலகீன்று, உயிர் அனைத்தும்,
மீன்போற் செவ்வி யுறநோக்கி,
அளியால் வளர்க்கும் அங்கயற்கண்
அன்னே! கன்னி அன்னமே!
அளியால் இமவான் திருமகளாய்
ஆவி யன்ன மயில்பூவை
தெளியா மழலைக் கிளிவளர்த்து
விளையாட் டயரும் செயலென்னே ?''

—பரஞ்சோதி முனிவர்

மலைவல்லி கர்ப்பூரவல்லி அபிராமவல்லி மாணிக்கவல்லி மரகதவல்லி முதலிய வேறு பல பெயர்களும், மீனாட்சியம்மைக்கு உண்டு.

சுந்தரம் என்பது அழகு, ஈசுவரர் கடவுள். 'அழகே வடிவமான கடவுள்' சுந்தரேசுவரர் (சுந்தர ஈசுவரர்) எனப்படுவர். கடவுள் பேரழகு உடையவராதலின், அவருக்குச் 'சுந்தரேசுவரர்' என்பது ஒரு திருநாமம்.

சொக்கு-அழகு. பிறரைச் சொக்க வைக்கும் பேரழகு சொக்கு எனப்படும். எனவே தமிழிற் சொக்கநாதர் என்பதற்கும், சுந்தரேசுவரர் என்பதற்குப் போலப் 'பேரழகு மிக்கவர்' என்பதே பொருள்.

மதுரையில் மலயத் துவச பாண்டியனின் மகளாகத் தோன்றியருளிய தடாதகைப் பிராட்டியாகிய மீனாட்சியம்மையைச் சுந்தர பாண்டியர் ஆகப்போந்து, சிவபெருமான் திருக் கல்யாணம் புரிந்து கொண்டதனால், கல்யாண சுந்தரர் எனப் பெயர் பெற்றார். இயல்பாகச் சுந்தரர் என இருந்த சுந்தரேசுவரர், திருமணம் செய்து கொண்டு மீனாட்சியோடு கூடியதனால், மீனாட்சி சுந்தரேசுவரர் என வழங்கப் பெற்றார்.

மீனாட்சி சுந்தரேசுவரருக்குச் சோமசுந்தரர் என்றும் பெயர் வழங்கும். சோமசுந்தரர் (சஹ உமா சுந்தரர்) என்பதற்கு, 'உமையோடு கூடிய அழகர்' என்பது பொருள்.

இந்தமா இலிங்கத் தெண்நான்கு
இலக்கண இச்சை மேனி
அந்தமிழ் அழகன் பாகத்
துமையொடும் அழகு செய்து
சந்ததம் விளக்கும் செய்யும்
தகைமையை நோக்கிச் சோம
சுந்தரன் என்று நாமம்
சாத்தினார் துறக்க வாணர்.

—பரஞ்சோதி முனிவர்

கர்ப்பூர சுந்தரர், கடம்பவனச் சுந்தரர், அபிராமசுந்தரர், சண்பகசுந்தரர், மகுட சுந்தரர், பழியஞ்சு சுந்தரர் முதலிய வேறு பல பெயர்களும் சுவாமிக்கு வழங்கும்.

புழுகுநெய்ச் சொக்கர், அபிடேகச் சொக்கர், கர்ப்பூரச் சொக்கர், அழகிய சொக்கர், கடம்பவனச் சொக்கர், செந்தமிழ்ச் சொக்கர் முதலிய வேறு பல பெயர்களும் சுந்தரேசுவரருக்கு உண்டு.

* * *

# "நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர்"

திரு ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## முன்னுரை

திருஞானசம்பந்தப் பெருமானுக்குப் பல திறச் சிறப்புக்கள் உண்டு. அவற்றுள் அவர் ''நற்றமிழ் வல்லவர்'' என்பதும் ஒன்று. திருஞானசம்பந்தப்பெருமானே தம்மை 'நற்றமிழ் வல்லவர்' எனப் பல இடங்களில் குறிப்பிட்டுக் கொள்வதுடன், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தமது பாடல்களில் அவ்வுண்மையை வழிமொழிந்துகூறி வற்புறுத்தி உணர்த்துகின்றார். நம்பியாண்டார் நம்பிகள் ''ஆறது ஏறும் சடையான் அருள் மேவ அவனியர்க்கு வீறது ஏறும் தமிழால் வழி கண்டவன்'' எனத் திறம் அறிந்து பாராட்டித் திருஞானசம்பந்தரைப் போற்றித் துதித்துள்ள அருமைப்பாடு, பெரிதும் அறிந்து மகிழ்தற்குரியது.

## நற்றமிழ்

ஞானசம்பந்தர் நற்றமிழில் வல்லவர் என்பதனை நன்கினிது, உணர்த்தும் நல்ல பல சான்றுகள், அவர்தம் திருப்பாடல்களில் ஆங்காங்கே மலிந்து காணப்படுகின்றன. 'நற்றமிழ்' என்னும் தொடருக்கு, எத்தனையோ பல இயைபுடைய பொருள்களைத் தத்தம் மதிநுட்பத்திற்கு ஏற்ப அறிஞர்கள் இனிதெடுத்து விளக்குதல் கூடும். ஆயினும், 'பல்பொருட்கு ஏற்பின் நல்லது கோடல்' என்னும் தந்திர உத்திபற்றி, 'நற்றமிழ்' என்றது, ஈண்டுச் சங்கத் தமிழ் மொழியையே குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

பத்துப்பாட்டு ஆதிமனம்
பற்றினார் பற்றுவரோ?

எத்துணையும் பொருட்கிசையும்
இலக்கணமில் கற்பனையே

எனப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் கட்டுரைக்கும் திறம் கருதி உணர்ந்தால், சங்கத் தமிழ் மொழியை நற்றமிழ் எனக் கொள்ளுதலின் பொருத்தத்தை அறிஞர்கள் அனைவரும் நயந்து உடன்படுவர்.

## சம்பந்தரும் சங்கத் தமிழும்

ஞானசம்பந்தப் பெருமான், சங்ககாலத் தமிழ் மரபை நன்குணர்ந்து பாடுதலில் வல்லவர். சங்க காலத்தில் வழங்காத பல புதிய பாவினங்களை ஞானசம்பந்தப் பெருமான்தான், முதன்முதற் பாடியருளிப் பெருக வழங்கச் செய்தனர். ஆயினும், அவர் சங்ககாலத் தமிழ் மரபைப் பெரிதும் போற்றியவரேயாவர். ஞானசம்பந்தர்க்குச் சங்ககாலச் சான்றோர்கள் மாட்டும், சங்ககாலத் தமிழ்ப் பண்பாட்டு மரபு நெறிகளிலும், மிக்க ஈடுபாடு இருந்ததெனத்தெரிகின்றது. தமது பாடல்களை ''ஞானசம்பந்தன் உரைசெய் சங்கமலி செந்தமிழ்கள்'' என அவர் சிறந்தெடுத்து உரைத்தலால், இதனைத் தெளியலாம். மேலும், அவர் ''பட்டிமன் தென்னன்'' என்றும், ''அந்தண் மதுரைத் தொகை ஆக்கினான்'' என்றும், ''அம் கழகச் சுதை மாடக்கூடல் ஆலவாய்'' என்றும் அருளிச் செய்திருத்தலால், ஞானசம்பந்தர்க்குச் சங்கத் தமிழின்பால் இருந்த எல்லையற்ற ஈடுபாடும் பெருமதிப்பும் இனையன என்று இனிது புலப்படுத்தும்.

ஞானசம்பந்தரின் பாடல்கள், எத்துணையோ பலப்பல நலங்கள் சான்றவை. அவர்தம் அழகிய இனிய பாடல்களில், ஆங்காங்கே சங்க நூற்சாயல்களும், கருத்துக்களும் மரபுகளும் வழக்காறுகளும் நிறைந்து காணப்பெறுகின்றன. அவ்வொப்புமைப் பகுதிகளைக் கண்டு சுவைத்து மகிழ்வதும், ஞானசம்பந்தரின் பாடல்களை ஆராய்ந்துணர்ந்து நாம் நலம் பெறத்தக்க பல திற வழிவகைகளுள் ஒன்றாகும்.

பிறமொழிகளிற் காணப்பெறாத தனிப் பெரும் சிறப்பியல்புகள் பல, நம் தமிழ் மொழிக்கு உண்டு. ஆசிரியர் சிவஞான சுவாமிகள், தமது தொல்காப்பியச் சூத்திரவிருத்தி என்னும் நூலில் தமிழ்மொழிக்கே உரிய சிறப்பியல்புகள் சிலவற்றைத் திறம் தெரிந்து சிறந்தெடுத்துக் காட்டிக் குறிப்பிட்டருளியிருக்கின்றனர். அவற்றுள், ''தமிழ்மொழியில் மட்டுமே குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றிற்குரிய முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்பவற்றின் விளக்கங்களும் முதலியனபற்றிய கூறும் பொருள் இலக்கணம் என்பதொன்று தனியே விரிவுற அமைந்திருக்கின்றன'' என்று அவர் சிறப்புற எடுத்துக்காட்டியிருக்கிறார். பொருளிலக்கணம் தமிழ் மொழிக்குப் பெரும் சிறப்பை விளைவித்து விளங்கிக் கொண்டிருத்தலை, மிகப் பழைய பரிபாடல் என்னும் சங்க நூலும், ''தள்ளாப் பொருளியல்பில் தண்டமிழ் ஆய்வந்திலார், கொள்ளார் இக்குன்றின் பயன்'' என்னும் வரிகளாற் புலப்படுத்தியிருக்கின்றது. குறிஞ்சி முல்லை முதலிய திணைப்பாகுபாடுகள் தமிழ்மொழிக்கே சிறப்பாக உரியன ஆதலை வலியுறுத்திச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும், ''திணைகொள் செந்தமிழ்ப் பைங்கிளி தெரியும் செல்வத் திருநின்றி ஊரானே'' எனவரும் தமது தேவாரப் பாடற் பகுதியில் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

திருஞானசம்பந்தர் ''அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல'' அவதரித்தருளியவர். வேறுபிற எந்தப் பண்டைத் தமிழ்ச் சான்றோரும் குறிப்பிட்டுக் கொள்ள நினையாத நிலையில், தம்மைத் ''தமிழ் ஞான சம்பந்தன்'' எனப் பலப்பல (45) இடங்களில், முதன்முதலாகக் குறிப்பிட்டுக்கொண்டு, நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பியருளிய நலம் சிறந்தவர் அவர்! ஞானசம்பந்தரை நினைப்போர், நல்ல தமிழையும், நல்ல தமிழை விரும்புவோர் ஞானசம்பந்தரையும் ஒருங்கியைத்தே நினைவு கூர்வர். தமிழுக்கும் ஞானசம்பந்தருக்கும் அத்துணைச் சிறந்த தொடர்பு உண்டு. தமிழ்மொழியை வளர்த்து வாழ்விக்கத் தோன்றியவர்களுள், தலைசிறந்த ஒருவர் திருஞான சம்பந்தர். தமிழைப் பரப்பி வளர்த்தவர்களின் வரிசையில், ஞானசம்பந்தருக்குத் தனிப்பெரும் சிறப்பிடம் உண்டு. அவரை ஒரு சிறந்த 'தமிழ் வீரர்' என அருணகிரிநாதர் புகழ்ந்து போற்றுதல் போல, நாமும் புகழ்ந்து கூறித் துதித்துப் போற்றலாம்.

## குறிஞ்சித் திணை

சங்க காலத்தைச் சேர்ந்த அகம் புறம் என்னும் பாகுபாடுடைய நூல்களில், குறிஞ்சி முல்லை திணைகள் பற்றிய வருணனைகள் இடையிடையே வருவதை நாம் அறிவோம். அத்தகைய பல வருணனைகள், திருஞான சம்பந்தரின் தேவாரப் பாடல்களிலும் பெரிதும் விரவி வருவதை நாம் காணலாம். சங்க காலக் கவிஞர்கள் வெறும் இயற்கைக் காட்சிகளையே பெரிதும் பாடிச் சென்றனர். ஆனால், திருஞானசம்பந்தரோ, வெறும் இயற்கைக் காட்சியோடு அமையாமல், அவற்றின் இடையே பொலியும் இறையருட் காட்சியையும் இணைத்து இயைத்து, இயலிசை நாடகம் என்னும் முத்தமிழும் பொலியத் தமது பாடல்களை அருளிச் செய்துள்ளார். சங்ககாலக் கவிஞர்களிற் பலர், ஒவ்வொரு சிறப்புறப்பாடும் திறம் பெற்றிருந்தனர். குறிஞ்சித் திணையைப் பாடுதலிற் கபிலரும், பாலைத் திணையைப் பாடுதலில் பாலை பாடிய பெருங்கடுங்கோவும், நெய்தற் திணையைப் பாடுவதில் நல்லந்துவனாரும் சிறப்புற்றிருந்தனர் என நாம் அறிகின்றோம். அங்ஙனமின்றித் தமிழகத்தின் ''நானிலத்து ஐந்திணை வளங்களையும்'' நயமுறப் பாடுதலில், ஞானசம்பந்தர் இணையற்றுத் திகழ்ந்திருந்தார்.

திருஞானசம்பந்தர் பாடியருளிய தலங்கள் பல. அவற்றுள் திருவண்ணாமலை, இந்திரநீலபருப்பதம், ஈங்கோய்மலை, திருக்கயிலாயம் திருக்கழுக்குன்றம், திருக்காளத்தி, திருக்கற்குடி, திருக்குற்றாலம், திருக்கேதாரம், திருக்கொடுங்குன்றம், திருப்பரங்குன்றம், திருப்பருப்பதம், திருமுதுகுன்றம், திருக்கோகரணம் என்னும் தலங்கள், குறிஞ்சித் திணையாகிய மலையும், மலைசார்ந்த பகுதிக்கும் உரிய தலங்களாகும். அத்தலங்களுக்குரிய தேவாரத் திருப்பதிகங்களில், பழந்தமிழ்ப் பெருஞ்சான்றோராகிய தொல்காப்பியர் விதித்தருளிய பண்டைய தமிழ் இலக்கண மரபு அமைதிகளைத் தழுவி, ஞானசம்பந்தர் குறிஞ்சித் திணையின் வளங்களை நலந்திகழப் பாடியருளியுள்ளார். இங்கு அவர் குறிஞ்சித் திணையைப் பற்றிப் பாடியருளிய ஒருசில பகுதிகளை மட்டும், இயன்றவரை ஈண்டுச் சுருக்கமாகக் காண்போம்.

## நல்லிசைக் கவிஞர்

ஒரு பெரும் நல்லிசைக் கவிஞரின் கவிதைச் சிறப்பினை நலந்தெரிந்து சுவைத்து மகிழ்தற்குப் பலவழிகள் உண்டு. அவற்றுள், அவர் இயற்கைப் பொருள் நிகழ்ச்சிகளையும், காட்சிகளையும் எங்ஙனம் திறம்பட புனைந்துரைத்து விளக்கியுள்ளார் எனக் கண்டறிவதும் ஒரு வழியாகும். இயற்கையில் ஈடுபடும் அதனைப் புனைந்துரைக்கும் ஆர்வமும், கவிஞர்கள்பால் பொதுவாகக் காணப்படும் சிறப்பியல்பாகும்.

''கவிஞரின் கண்ணானது மிகச் சிறந்ததோர் உள்ளெழுச்சியினால், விண்ணிலிருந்து மண்ணையும், மண்ணிலிருந்து விண்ணையும் சுற்றிச் சுழன்று பார்வையிடுகின்றது; காணவும் கருதவும் இயலாத பொருள்களின் இயல்புகளைக் கவிஞனின் எழுதுகோல் எழில்கனிந்த கலை

யோவியங்களாக இனிது வடித்துக் கொடுக் கின்றது; காற்றென நுண்ணியவாய்க் காணப் படாமையின் இல்லனவாய் விளங்குவனவற் றிற்குக் கவிஞனின் கற்பனை உணர்வு ஓர் உறை விடமும் பெயரும் அளிக்கின்றது''.

வல்லதம் விழியின் வீச்சால்
மண்ணொடு விண்ணும் எல்லாம்
ஒல்லையின் அளந்து தேர்ந்து
கற்பனை உணர்வின் மாண்பால்
இல்லது தனையும் ஊர்பேர்
இயைபுறப் படைத்துக் காட்டும்
நல்லியற் கவிஞர் செய்கை
நலமெலாம் நவிலற் பாற்றோ!

—தமிழாக்கம் : ந. ரா. மு.

எனச் செகப்பிரியர் கவிஞர்களின் இயல்பினை இனிதெடுத்து விளக்குகின்றார். அதனால் கவி ஞர்களின் கவித்திறனுக்கும், இயற்கைப் புனை விற்கும் இடையே மிக்க பெருந்தொடர்பு உண்மை புலப்படும். ஞான சம்பந்தர் ஒப்புயர் வற்ற ஒரு பெரும் நல்லிசை கவிஞராதலின் இயற்கைக் காட்சிகளைத் தமது பாடல்களில் எழில் கனிந்த சொல்லோவியங்களாக வடித்து கொடுத்திருக்கின்றார்.

### திருமுதுகுன்றம்

இந்நாளில் 'விருத்தாச்சலம்' என வழங் கும் தலம், ஞானசம்பந்தர் காலத்தில், 'திரு முதுகுன்றம்' எனப் பெயர் பெற்றிருந்தது. அத்தலத்தைக் குறித்து, ஏழு தேவாரத் திருப் பதிகங்களை ஞானசம்பந்தர் பாடியிருக்கின் றார். தொல்காப்பியர் மலையும் மலைசார்ந்த பகுதியும் குறிஞ்சித் திணையென்றும், அதற் குரிய தெய்வம் முருகன் என்றும், அத்திணைக் குரிய பண் குறிஞ்சிப் பண் என்றும் பிறவாறும் தமது இலக்கண நூலிற் குறிப்பிட்டிருக்கின் றார். ''சேயோன் மேய மைவரை யுலகம்'' என் பது தொல்காப்பியம். திருமுதுகுன்றம் பற்றிய தேவாரப் பாடல்களில் அங்கே உள்ள மலைநில மக்களாகிய குறவர்குலப் பெண்கள், தமது குறிஞ்சித் திணைக்குரிய குலதெய்வமாகிய முருகனைக் குறிஞ்சித் பண்கொண்டு பாடி மகிழ்கின்றார்கள்.

---

† '' The poet's eye in a fine frenzy rolling,
Doth glance, from heaven to earth,
from earth to heaven;
And as imagination bodies forth
The form of things unknown,
the poet's pen
Turns them to shapes,
and gives to airy nothing
A local habitation and a name.

—William Shakespeare,
A Midsummer - Night's Dream'

கருகு குழல் மடவார்
கடிகுறிஞ்சி யதுபாடி
முருகன்னது பெருமைபகர்
முதுகுன்று அடைவோமே

இவ்வரிகளில் 'குறிஞ்சி' என்னும் சொல்லும் அத் திணைக்குரிய 'முருகன்' என்னும் தெய்வத்தின் பெயரும் பயின்று வந்திருத்தல் அறிந்து மகிழ் தற்குரியது.

திருமுதுகுன்றத்தில் எழுந்தருளியுள்ள சிவ பெருமான், ஒரு காலத்தில் உறுதிப் பொருள் கள் யாவை என்று தெளிவுறத் தெரியாமல், சிந்தை கலங்கி வருந்திய சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர் என்னும் நான்கு முனிவர்களுக்கும் ஆலமர நிழலின்கண்ணே அமர்ந்திருந்து அறம்பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கினையும் உப தேசித்தருளினான்.

அழிந்தசிந்தை அந்தணாளர்க்கு
அறம்பொருள்இன்பம் வீடு
மொழிந்தவாயான் முக்கண் ஆதி
மேயது முதுகுன்றே

என்னும் தேவாரப் பாடல்களில் தொல்காப்பிய ரும் திருவள்ளுவரும், விளக்கியருளிய அறம் பொருள் இன்பங்களைப் பற்றிய குறிப்பும், அவற்றின் பயனாகிய வீடுபேற்றின் திறமும் சுட்டப் பெற்றிருத்தல் ஓர்ந்து உணர்ந்து மகிழற் பாலது.

கடவுளுணர்ச்சி, என்பது மக்கள் எல்லோ ருக்குமே பொதுவாக உரியது. மக்கள் தத்தம் பண்பாட்டின் தரத்திற்கு ஏற்பக் கடவுள் வழி பாடு புரிவர். குறிஞ்சி நிலத்தில் உள்ள கொல் லைப் பகுதிகளில் வாழும் வேடர்கள், திரண்டு கூடித் தங்கள் தெய்வத்திற்கு விழாக் கொண் டாடிக் கும்பிடுகின்றனர். அங்கு அருகேயுள்ள முல்லைக் கொடிகளிற் பூக்கள் மலர்ந்திருத்தல் அவ்வேடர்களின் இனிய செயல்கண்டு மகிழ்ச்சி யால் முறுவல் புரிவது போல உள்ளது.

கொல்லை வேடர் கூடி
நின்று கும்பிட
முல்லை அயலே முறுவல்
செய்யும் முதுகுன்றே

எனத் திருஞானசம்பந்தர், இக்காட்சியை எழி லுறப் பாடுகின்றார். சிறந்த இப்பாடலின் கருத்தை நினைப்பிக்கும் வகையில், -பின்வரும் குறுந்தொகை வரிகள், அமைந்திருத்தல் காண லாம்.

முல்லை வாழியோ முல்லை; நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்
டனை;
நகுவை போலக் காட்டல்
தகுமோ? மற்றிது தமியோர் மாட்டே

—குறுந்தொகை, 162.

பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை இலங்கெயிறு ஆகத்
தகுமோ தோழி! நறுந்தண் காரே

—குறுந்தொகை, 126

(2) திருக்காளத்தி

சிவனடியார்களுள் தலைசிறந்தவராகிய கண்ணப்பரோடு தொடர்புடையது திருக்காளத்திமலை. அதனை இரண்டு திருப்பதிகங்களால் சிறப்பித்துப் பாடியருளியுள்ளார், திருஞானசம்பந்தர். திருக்காளத்தி மலை வேங்கை மரங்கள் நிறைந்தது. வேங்கைமரம் குறிஞ்சித் திணைக்குரியது. பண்டைத் தமிழகத்தில் குறிஞ்சி நில மக்கள் வேங்கை மலரும் பருவத்தினைத் தினையறுக்கும் காலமாவும், திருமணம் செய்தற்குரிய காலமாகவும் கொண்டிருந்தனர். திருமணத்திற்குரிய காலத்தினைக் கணித்துக் கூறும் கணியன் (சோதிடன்) போல ஒருவகையில் வேங்கை மரம் பூத்துக் காலத்தை அறிவித்து வந்தமையின், வேங்கை மரத்திற்கு 'கணி' என்னும் ஒரு காரணப்பெயரும் உண்டு. ''கணியார் நம்மைக் கடைக்காணியார் நாளைக் கருங்கணியே'' என்னும் பழைய பாடல் ஒன்றில், இச் சொல் அழகுறக் கையாளப்பட்டிருத்தல் காணலாம். வேங்கை மலரும் பருவமே திருமணம் செய்தற்குரிய காலம் எனச் குறிஞ்சி நில மக்கள் கொண்டிருந்தனர் என்பது,

வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன
நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே

—அகம், 2

வருமோ தோழி நன்மலை நாடன்
வேங்கை விரிவிடம் நோக்கி
வீங்கிறைப் பணைத்தோள் வரைந்தனன்
கொளற்கே

எனவரும் அகநானூற்றுப் பாடற்பகுதியாலும், ''இணர்விரிதலும் ஊர்கோடலும் ஆகிய இரண்டும் மனஞ்செய் காலம் இதுவென உணர்துலாகிய ஒரு பொருள்குறித்து நின்றமையால், அவை ஒருவினைப்பாற்படும் என்பது'' எனப்போதரும் சேனாவரையர், நச்சினார்க்கினியர் உரைகளாலும் தெளியப்படும். இச் சங்க நூற் கருத்தினைத் தழுவி,

புனவர்புன மயிலனைய மாதரொடு
மைந்தரும் மணம் புணரும் நாள்,
கனகம்என மலர்கள்அணி வேங்கைகள்
நிலவு காளத்தி மலையே

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல் வரிகள் அருளிச் செய்யப்பெற்றுள்ளமை பெரிதும் சுவை பயக்கின்றன அன்றே!

குறிஞ்சித் திணைக்குரிய மலைப்பகுதிகளில் பாம்புகள் மிகுதியாக வாழும். பாம்புகளின் நஞ்சே மாணிக்கமாக மாறும் என்றும், அம்மணிகளைப் பாம்புகள் தாம் வேண்டும் பொழுது வெளியே உமிழவும், மீண்டும் விழுங்கவும் முடியும் என்றும், இரவுக் காலங்களில் பாம்புகள் மணியை உமிழ்ந்து, அதன் ஒளியால் கண்பார்வை பெற்று இரைதேடி உலாவும் என்றும், சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன.

இருங்களிறு அட்ட பெருஞ்சின உழுவை
நாம நல்லராக் கதிர்பட உமிழ்ந்த
மேய்மணி விளக்கிற் புலர ஈர்க்கும்
வாள்நடந் தன்ன வழக்கறும் கவலை

—அகநானூறு, 72

நறுந்தாது ஊதும் குறுஞ்சிறைத் தும்பி
பாம்புமிழ் மணியில் தோன்றும்
முந்தூழ் வேலிய மலைகிழ வோற்கே

—குறுந்தொகை, 239

திருக்காளத்தி மலையின் சிறப்பை விவரிக்குங்கால், திருஞானசம்பந்தர் இச் செய்தியை பின் வருமாறு குறிப்பிடுகின்றார்.

ஊரும் அரவம் ஒளிகொள் மாமணி
உமிழ்ந்தவை உலாவி வரலால்
கார் இருள் கடிந்து கனகம் என
விளங்கு காளத்தி மலையே

(3) திருக்கேதாரம்

வடஇந்தியாவில் இமயமலைச் சாரற் பகுதியில் அமைந்துள்ள சிறந்ததொரு பெருந் தலம் இது. இத்தலத்தைப் பற்றிய பாடல்களிலும் திருஞானசம்பந்தர் குறிஞ்சித் திணையின் வளங்களைப் பாடியிருக்கின்றார். மலைப்பகுதியைச் சார்ந்த காடுகளில் வேங்கை மரங்கள் நிறைந்திருக்கும். அவற்றின் பூக்கள் பொன்னிறமுடையனவாய் மலைநிலத்துக் கருங்கற்பாறைகளின் மீது சிதறிக்கிடக்கும் காட்சி, மதயானைகளுக்குப் புலியின் தோற்றத்தையும் நினைவையும் எழுப்பும். அதனால் வெருக்கொண்ட மத யானைகள் வேங்கை மரத்தின்மீது பாய்ந்து மோதிப் பொருதும் இச்செய்தி சங்கநூல்களில் ஆங்காங்கே பல இடங்களிற் குறிப்பிடப்படுகின்றது.

கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையில் தோன்றும் காட்
டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் நிலவே

—குறுந்தொகை, 47

ஓங்கல் மிசைய வேங்கை ஒள்வீ
புலிப் பொறி கடுப்பத் தோன்றும்

—அகம், 228

அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட்டு ஒள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறம் கடுக்கும்

—புறம், 202.

கருங்கால் இனவேங்கை கான்றபூக் கல்மேல்
இருங்கல் வயவேங்கை ஏய்க்கும்

—திணைமாலை, 26

குறிஞ்சித் திணையைப் பாடுதலில் வல்லவராகிய கபிலர் என்னும் பெரும் புலவர், வேங்கை மரம் பூத்திருத்தலைக் கண்டு, அதனைப் புலியென நினைந்து மருண்டு, அதன்மீது பாய்ந்து மோதியதனால், அம்மரத்தில் ஆழப் பதிந்துவிட்ட தனது தந்தங்களை மீட்டு இழுக்க முடியாமல், அலறிக் கதறிப் பிளிறும் சோகக் காட்சி, செருக்கு மிகுந்து திருக்கயிலை மலையைப் பெயர்த்து எடுக்க முனைந்த இராவணன், அதன்கீழ் அகப்பட்டுக் கொண்டு வருந்தி அழுத காட்சியைப் போன்றிருந்தது, எனக் குறிஞ்சிக் கலியில் ஓர் இடத்திற் பாடியிருக்கின்றார். இன்னோரனைய பல சங்க நூற்கருத்துக்களை நமக்கு நினைப்பிக்கும் வகையில் திருஞானசம்பந்தப் பெருமான், திருக்கேதாரப் பதிகத்தில் பாடியிருக்கும் பின்வரும் வரிகள் அமைந்திருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

உடைந்த காற்றுக்கு உயர்வேங்கை
பூத்து உதிரக் கல்லறைகள்மேல்
கிடந்த வேங்கைச் சினமா முகம்
செய்யும் கேதாரமே.

ஆசிரியர் திருவள்ளுவர், அறிவை அங்குசமாகக் குறிப்பிட்டு, அதனால் ஐம்பொறிகளை அடக்கி ஆள்பவன் வீட்டுலகத்திற்கு வித்தாகத் திகழ்வான் என்னும் கருத்தமைய அருளிச் செய்த ''உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான் வரனென்னும் வைப்பிற்கோர் வித்து'' என்னும் திருக்குறளின் அழகிய கருத்தைத் தழுவி விளக்கும் முறையில்,

தொண்டர் அஞ்சு களிறும் அடக்கிச்
சுரும்பார் மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யும்
இடம் என்பரால்;
வண்டு பாட மயில் ஆல
மான்கன்று துள்ள வரிக்
கெண்டை பாயச் சுனைநீல
மொட்டலரும் கேதாரமே

என்னும் திருக்கேதாரப் பாடல் அமைந்திருத்தலும், ஈண்டு இயைபுடைமை பற்றி நாம் அறிந்து இன்புறற்பாலது.

சங்க நூல்களில் பறவை விலங்கு முதலியன பற்றிய செய்திகள் பலப்பல வரும். பறவைகள் தம்முடைய குஞ்சுகளுக்கு இரை தேடிக் கொணர்ந்து அதனை இன்னருளோடு அவற்றின் வாயிற்பெய்து ஊட்டி மகிழும் அழகிய காட்சி, எவருள்ளத்தையும் மகிழ்விக்கும். இக் காட்சியை வருணிக்கும் முறையில்,

அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுற ஓங்கிய நெறியியல் மராஅத்த
பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
இரைகொண் டமையின் விரையுமாற்
செலவே

—குறுந்தொகை, 92

உடங்கிரை தேரும் தடந்தாள் நாரை
ஐய சிறுகட் செங்கடைச் சிறுமீன்
மேக்குயர் சினையின் மீமிசைக் குடம்பைத்
தாய்ப்பயிர் பிள்ளை வாய்ப்படைச் சொரி
யும்

—நற்றிணை, 91.

எனப் பல பகுதிகள், சங்க நூல்களில் வரும் பறவைகள் தம் பார்ப்பினங்களுக்கு உணவூட்டி மகிழும் இனிய காட்சியைப் பலகாற் கண்டு மகிழ்ந்த குழந்தையாகிய ஞானசம்பந்தர், அதனைப் பின்வரும் திருக்கேதாரப்பாடல் வரிகளில் அரியதோர் சொல்லோவியமாக அமைத்திருக்கின்றார்.

பிள்ளை துள்ளிக் கிளைபயில்வ
கேட்டுப் பிரியாது போய்க்
கிள்ளை ஏனற் கதிர் கொணர்ந்து
வாய்ப்பெய்யும் கேதாரமே.

## (4) திருக்கற்குடி

திருக்கற்குடி என்பது, திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள சிறந்த ஒரு பெரும் தலமாகும். இது அப்பர் சம்பந்தர் சுந்தரர் என்னும் மூவர் பாடலும் பெற்ற சிறப்புடையதாகும். இங்குள்ள இறைவனுக்கு விழுமியான், உய்யக் கொண்டான் என்னும் பெயர்கள் வழங்கப் படும். இத்தலத்தைப் பற்றிய பாடல்களிலும் குறிஞ்சித் திணைக்குரிய யானைகளைப் பற்றிய இனிய செய்திகள் பல அமைந்து கிடக்கின்றன.

மக்களிடையே நிகழும் இல்லற வாழ்வு, வன விலங்குகளிடையிலுங்கூட ஒரு வகையில் அமைந்து காணப்படுகின்றன. தான் மணந்து கொண்ட மனைவியின் மனம் மகிழும்படி, பல வகை நல்லுணவுப் பொருள்களைத் தேடிக் கொணர்ந்து தருகின்றான் கணவன். அது போலவே ஆண் யானைகளும், தாம் உண்ணாமல் தமது பிணையாகிய பெண் யானைகளின் வாயில் மூங்கில் நெல்லின் இனிய முளைகளை வாரிக் கொணர்ந்து கொடுக்கின்றனவாம். அத்தகைய அழகிய இயற்கை வளத்தான்மிக்கது கற்குடி மாமலை

மருங்கு அளியார் பிடிவாயில்
வாழ்வெதிரின் முளைவாரிக்
கருங் களியானை கொடுக்கும்
கற்குடி மாமலையாரே

என்பது சம்பந்தர் தேவாரம். இங்ஙனம், களிறுகள் பிடிகளுக்குக் கவளம் தேடிக் கொணர்ந்து கொடுத்தலைச் சங்க நூல்களும் பல இடங்களிற் குறிப்பிடுகின்றன.

கயந்தலை மடப்பிடி உயங்குபசி களைஇயர்
பெருங்களிறு தொலைத்த முடைத்தாள் ஓமை

—நற்றிணை, 127

பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பிளக்கும்
அன்பின தோழி, அவர் சென்ற ஆறே

—குறுந்தொகை, 37.

குறிஞ்சி நிலத்தில் மூங்கிற் காடுகள் அடர்ந்து ஓங்கி உள்ளன. அங்கு உயர்ந்தோங்கி வளர்ந்துள்ள மூங்கில் மரங்களை யானைகள் தம் துதிக்கையினால் தாழ்ப்பற்றி ஈர்க்கின்றன. ஈர்த்து அதன் இலைகளை உண்கின்றன. உண்ட பின்னர், அவற்றைத் தம் கைநெகிழ்ந்து விடுகின்றன. அதுபோது அம் மூங்கில்கள் மிக்க விசையுடன் உயர்ந்து சென்று மேகங்களை மோதிக், கீறி நிற்கின்றன. ''விட்ட குதிரை விசைப்பின் அன்ன விசும்பு தோய் பசுங்கழைக் குன்ற நாடன்'' எனவரும் குறுந்தொகை (174) வரிகளை, நினைக்கச் செய்யும் வகையில் பின் வரும் பாடற்பகுதி அமைந்திருத்தல் காணலாம்.

தாள் அமர் வேய்தலை பற்றித்
தாழ்கரி விட்ட விசைபோய்க்
காளமது ஆர்முகில் சீறும்
கற்குடி மாமலை யாரே

இத்தகைய குறிஞ்சி நில மூங்கிற் காடுகளில் குரங்குகளும் ஏராளமாக வாழ்கின்றன. குரங்குகள் குறும்பு செய்யாமல் வாளா இருக்குமோ? அவைகள் மூங்கிற்கொம்புகளில்பாய்ந்து தாவி ஏறுகின்றன. அவைகள் ஏறுந்தோறும் மூங்கில்கள் வளைந்து தாழ்கின்றன. அவற்றின் மேற் குரங்குகள் நின்றும் நடந்தும் குனிந்தும் ஓடியாடி களிநடம் புரிகின்றன.

திருகல் வேய்கள் சிறிதே
வளையச் சிறுமந்தி
முருகின் பணைமேல் இருந்து
நடஞ்செய் முதுகுன்றே

எனத் திருஞானசம்பந்தர் அருளியுள்ள இனிய தேவாரப் பாடல்களை ஓதுங்கால் பின்வரும் சங்கப் பாடல்கள், நம் நினைவுக்கு வராமல் இருத்தல் இயலாது.

சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கூழை
குரங்கின் வன்பறழ் பாய்ந்தென, இலஞ்சி
மீன்எறி தூண்டிலின் நிவக்கும் நாடன்
உற்றோர் மறவா நோய்தந்து
கண்டோர் தண்டா நலம் கொண்டனனே

—ஐங்குறுநூறு, 228

கான யானை கைவிடு பசுங்கழை
மீன்எறி தூண்டிலின் நிவக்கும்

—குறுந்தொகை, 54.

## (5) திருச்சிராப்பள்ளி

ஆணும் பெண்ணும் அன்பினாற் கலந்து கூடி வாழ்தல், இயற்கையமைப்பின் நியதி. இந்நியதி மக்களின் வாழ்க்கையில் மட்டுமேயன்றி, விலங்குகளின் மாட்டும் விளங்கித் தோன்றுகின்றது. திருச்சிராப்பள்ளி மலையில் ஆண்குரங்காகிய கடுவனும், பெண் குரங்காகிய மந்தியும், கணவனும் மனைவியுமாய்க் கூடிக் களித்து வாழ்கின்றன. கூடலுக்கு ஊடல் இன்றியமையாத தொன்றன்றோ? ஆதலின் மந்தி கடுவனோடு ஊடல் கொண்டது. ஊடலினால் தன் கையில் தன் மகவாகிய குட்டியை அணைத்து எடுத்துக் கொண்டது. குட்டியின் பொருட்டாகவாதல் கணவன் தன்னைத் தேடி வந்தே தீர்தல் வேண்டும் என்னும் கருத்தில், அது தன் கணவன் ஆகிய கடுவனை விட்டுப் பொய்க் கோபமாகிய ஊடல் கொண்டு மலை உச்சியில் உள்ள மூங்கிலில் ஏறி அங்கிருந்து கீழே குதித்து விடுவதற்குத் துணிந்தது போல, வரை ஏறிச் செல்கின்றது.

கைம்மகவு ஏந்திக் கடுவனோடு
ஊடிக் கழை பாய்வன்
செம்முக மந்தி கருவரை
ஏறும் சிராப்பள்ளி

எனத் திருஞானசம்பந்தர், இக்காட்சியினைப் புனையா ஓவியமாகப் புனைந்து காட்டிப் பாடுகின்றார். இது போன்றதொரு செய்தி பின் வரும் குறுந்தொகைப் பாடல் ஒன்றில் கூறப் பட்டிருத்தல், ஒப்புநோக்கி யுணர்ந்து மகிழ்தற் குரியது.

கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்
சாரல் நாட! நடுநாள்
வாரல் வாழியோ! வருத்துதும் யாமே

—குறுந்தொகை, 69.

## (6) திருவண்ணாமலை

பிடியும் களிறும் மலைப்பகுதிகளில் உலா வருகின்றன. அப்போது அங்கு ஒரு புலி வரு

கின்றது. புலியும் களிறும் ஒன்றையொன்று சினந்து மோதிப் பொருதுகின்றது. அது கண்டு பெண்யானை அஞ்சித் தன் கன்றுகளுடன் வெகுண்டு ஓடுகின்றது. புலியைக் கொன்ற களிறு, பின்னர் தன் பிடியையும் கன்றுகளையும் காணாமல் தேடி அலைகின்றது. தன் குரலொலி காட்டிப் பிளிறி அலறுகின்றது. எங்கும் தேடிக் காணாமையால் களைப்படைந்து, தன்னையும் அறியாமலே உறங்கத் தலைப்படைகின்றது. அத்தகைய இயற்கை யமைப்புடையது திருவண்ணாமலை எனப் பாடுகின்றார் திருஞானசம்பந்தர்.

பிழைத்த பிடியைக் காணாது ஓடிப்
பெருங்கைம் மதவேழம்
அழைத்துத் திரிந்தங்கு உறங்கும் சாரல்
அண்ணா மலையாரே

இஃது ஒருவகையில், களிற்றைக் காணாமல் பிடியானது அலைந்து தேடி வருந்துவதாகக் கூறும் அகநானூற்றுப் பாடல் வரிகளை ஒத்துக் காணப்படுகின்றது.

வெண்கோட்டு யானை முழக்கிசை வெரீஇக்
கன்றொழித்து ஓடிய புன்றலை மடப்பிடி
கைதலை வைத்த மையல் விதுப்பொடு
கெடுமகப் பெண்டிரில் தேரும்
நெடுமர மருங்கின் மலையிறந் தோரே

—அகநானூறு, 347.

## (7) திருக்கொடுங்குன்றம்

இது பிரான்மலை என இந்நூலில் வழங்குகின்றது. சங்க காலத்திற் புகழ்பெற்ற விளங்கிய பாரி வள்ளல், அரசு செலுத்திய பறம்பு மலை இதுவேயாகும். இத்தலத்துத் திருப்பதிகத்திலும் திருஞானசம்பந்தர், குறிஞ்சித் திணைக்குரிய அரிய செய்தி ஒன்றைக் குறிப்பிடுகின்றார்.

'யாளி' என்பது பண்டொருகால் இருந்தது, இஞ்ஞான்று இல்லையாய் மறைந்து போன ஒருவகை விலங்கு. அவ்விலங்கு யானைகளையும் விடப் பெரியதாய், அவைகளைக் கொல்ல வல்ல பேராற்றல் உடையதாக விளங்கியிருந்ததெனத் தெரிகின்றது. யாளிகள் வந்து விடுமோ என்ற அச்சத்தால், அவற்றினிடமிருந்து தப்பும்பொருட்டு, யானைகள் மலைகளைக் குத்திக் குடைந்து குகைகளையுண்டாக்கி பாதுகாப்பாக இருந்து வருகின்றன.

மத்தக் களிறு ஆளி வரவஞ்சி
மலை தன்னைக்
குத்திப் பெருமுழை தன்னிடை
வைகும் கொடுங்குன்றம்

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடலால், இச் செய்தியை இனிதுணரலாம். இவ்வரிகளின்படி யானைகள் யாளிக்கு அஞ்சும் இயல்பின என்பது,

மழைவிளை யாடும் கழைவளர் அடுக்கத்து
அணங்குடை யாளி தாக்கல்விற் பலவுடன்
கணஞ்சால் வேழம் கதழ்வுற் றாஅங்கு
எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை

—பெரும்பாண், 257.

எனவரும் பெரும்பாணாற்றுப்படை வரிகளால் தெளியப்படும். யாளி என்னும் விலங்கு பண்டொரு கால் வாழ்திருந்து இன்று இல்லையாய் யாய் மறைந்து போயினும் அதனைப் பற்றி திருஞானசம்பந்தர் பாடலில் வந்திருத்தல் நாம் மகிழத் தக்க நற்செய்தியாகும்.

## (8) திருக்கயிலாயம்

விலங்குகளிற் பெரியது யானை. ஆயினும் அதனையும்கூடச் சில சமயங்களில் விழுங்கி விடக்கூடிய பாம்புகள் சில, மலைப் பகுதிகளில் உண்டாம். மிகவும் பெரிய யானையையே விழுங்கி விடக்கூடிய அம்மலைப் பாம்புகள், எத்துணைப் பெரியனவாக இருக்கும் என்பது, நாம் உன்னிஉணரற்பாலது.

பரிய களிற்றை அரவு விழுங்கி
மழுங்க இருள்கூர்ந்த
கரிய மிடற்றார் செய்ய மேனிக்
கயிலை மலையாரே

எனத் திருக்கயிலாய மலையில், யானைகளையும் விழுங்கவல்ல மிகப் பெரிய பாம்புகள் இருப்பனவாக ஞானசம்பந்தர் நவிலுகின்றார்.

ஞால்வாய்க் களிறு பாந்தட் பட்டெனத்
துஞ்சாத் துயரத்து அஞ்சுபிடிப் பூசல்
நெடுவரை விடரகத்து இயம்பும்
கடுமான் புல்லிய காடிறந் தோரே

—நற்றிணை, 261.

களிறுஅகப் படுத்த பெருஞ்சின மாசுணம்
வெளிறில் காழ்மரம் பிணித்துநனி மிளிர்க்கும்

—நற்றிணை, 14.

## முடிவுரை

இதுகாறும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல்களில் வரும் குறிஞ்சித் திணைவளம் பற்றிய செய்திகளை ஒரு சிறிது இயன்றவரை கண்டோம். ''கடல் கண்டோம் என்போர் யாவரே முடிவுறக் கண்டார்'' என்றபடி, இத்தகைய ஆராய்ச்சிகளுக்கும் ஒரு முடிவில்லை. இவைகள் விரிப்பிற் பெருகியும், தொகுப்பின் எஞ்சியும் நிற்கும் இயல்புடையன. ஆதலின் இதன் அளவு உண்டுகோள் மதி வல்லோர்க்கு'' என்னும் முறையில் ஒருசில கருத்துக்கள் மட்டுமே இங்குச் சுட்டப்பெற்றன. ஆயினும் இவற்

றால் தமக்கு முன்பிறந்த சான்றோர்களை மதித்துப் போற்றிய திருஞானசம்பந்தரின் சிறப்பும் அவர்தம் பாடல்களின் அருமை பெருமைகளும் தமிழ்ப் பெருவீரராகத் திகழ்ந்து நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பித் தொண்டாற்றிய அவர்தம் சான்றாண்மை நலங்களும் இனையவென்று, நாம் நன்கினிது உணர்தல் கூடும். உணர்ந்து திருஞானசம்பந்தரைப் போற்றி அவர்தம் செந்நெறியில் நின்றொழுகிச் சிறப்புடன் வாழ, முயலுவோமாக.

அற்றைநாட் சங்கத் தருந்தமிழ்ப் புலவோர்
அரும்பெரும் புலமையின் சிறப்பும்,
கற்பனை வளஞ்சால் கவிதையின் திறனும்,
கனிந்தொளிர் சொற்பொருள் நலனும்,
பெற்புறும் அவர்தம் புனிதநற் பண்பும்,
கொள்கையும், பேற்றிக் காத்தளித்த,
நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தர்
நலம்எலாம் பேற்றி, நாம் உய்வோம்!

ந. ரா. முருகவேள்

# கொழும்புமா நகரில் "கோபுரம்" இதழ் வெளியீட்டு விழா

இலங்கை அரசின், பிரதேச அபிவிருத்தி-இந்து சமய-தமிழ் அலுவல்களின் அமைச்சர் மாண்புமிகு திரு.செல்லையா இராசதுரை அவர்களின் அரும்பெரும் முயற்சியினாலும், ஆற்றல் மிக்க தீர்க்கதரிசன நோக்கினாலும், அவர்தம் இந்து சமயத் திணைக்களத்தின் சார்பில், ''கோபுரம்'' என்னும் செந்தமிழ்த் திங்கள் இதழ் ஒன்று, நமது தமிழ்நாடு அரசின் அறநிலைய ஆட்சித்துறையின் திங்கள் இதழாகிய ''திருக்கோயில்'' போல, அண்மையில் தொடங்கப் பெற்றது; அவ்விதழின் வெளியீட்டு விழா, கொழும்பு மாநகர்க்கு அணித்தேயுள்ள மருதானைக் கப்பித்தாவத்தை அருள்மிகு கயிலாசநாதசுவாமி கோயிலின், அருள்மிகு பாலசெல்வ விநாயக மூர்த்தியின் சந்நிதியில், 21.12.80 ஞாயிறன்று, மிகவும் சிறப்புற நடைபெற்றது.

இலங்கை அரசின் பிரதேச அபிவிருத்தி-இந்து சமய-தமிழ் அலுவலர்களின் அமைச்சர் மாண்புமிகு திரு. செல்லையா இராசதுரை, ஓய்வுபெற்ற நீதியரசர் திரு.சிவசுப்பிரமணியம், பேராசிரியர் திரு. கே.இலட்சுமணஐயர், திரு. எஸ். டி. சிவணநாயகம், இந்து சமயத் திணைக்கள உயர்அலுவலர்கள் திரு. சிவ. சி. மாணிக்கவாசகர், திரு. வே.ந. சிவராசா, கலாநிதி திரு.ஆ. கந்தையா, 'கோபுரம்' இதழாசிரியர் தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை முதலிய பெருமக்கள் பலர், விழாவிற் கலந்துகொண்டனர்.

அதுபோது, ஏற்கனவே (4.12.80 முதல் 23.12.80 முடிய) ஈழத்தில் சைவசித்தாந்தத் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்ந்த அழைக்கப்பெற்றுச் சென்றிருந்த ''திருக்கோயில்''ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், M.A.,M.O.L. அவர்கள், மாண்புமிகு அமைச்சர் திரு. இராசதுரை அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, அவ்விழாவில் ஒரு சிறப்புரை நிகழ்த்தியதுடன், 'கோபுரம்' இதழ் நன்கினிது உயர்ந்து வளர்ந்தோங்கிச் சிறந்தமுறையில் சமயநெறியினையும், செந்தமிழ் மொழியினையும் செழிப்பித்து ஒளிர்தல் வேண்டும் என்று விரும்பி, பின்வரும் வாழ்த்தியற் கவிதையினையும் இயற்றிப் பொருள்விளக்கம் செய்தார். அப்பாடல்கள் வருமாறு:

(அறுசீர் விருத்தம்)

அன்பார் அமைச்சர் இராசதுரை அவர்கள், சமயம் தமிழ்வளர்க்க
இன்பார்ந் தொளிர்கோ புரம்என்னும் இதழைத் தொடங்கி நடத்தலுற்றார்
பண்பாடு, அன்பு, நல்லொழுக்கம், பக்தி, சமாதானம் பரப்பி,
நன்றாய் இக்கோ புரம்இதழ்தான், நலமே வளர்க! வாழ்கநன்றே! (1)

இந்து சமயக் கலாசார இனிய அமைச்சொன் றேற்படுத்தி,
முந்தைப் போதும் இலாதொர்திணைக் களமும் முயன்று நன்கமைந்து,
செந்த மிழ்க்கோ புரம்இதழும் சிறப்பாய்த் தொடங்கும் இராசதுரை
நந்தம் அமைச்சும், ஸ்ரீலங்கா நல்ல அரசும், நனிவாழ்க! (2)

அதியுத் தமநற் சனாதிபதி ஆன்ற ஜெயவர்த் தனாஅவர்கள்,
மதிநுட் பஞ்சால் பிரதமராம் மாண்பார் பிரேம தாசர், மற்றும்
துதிந லஞ்சால் 'கோபுரம்'நல் இதழைத் தொடங்கும் இராசதுரை
முதல்நல் அமைச்சர் யாவருமே, முழுதும் சிறப்பின் வாழ்க நன்றே! (3)

''கோபுரம்'' இதழ் உயர்ந்தோங்கி வளர்க!
அமைச்சர் இராசதுரை அவர்களின்
ஆக்கப்பணிகள், மேன்மேல் வெல்க!! செழிக்க! வாழ்க!

—ஆசிரியர்.

# பார்த்தன் பள்ளிச் செங்கண்மால்

திரு. ந. சுப்புரெட்டியார், M.A., Ph.D.

''ஓத்தின் பொருள்முடிபும்
இத்தனையே உத்தமன்பேர்
ஏத்தும் திறம்: அறிமின்....

............மாதவன்பேர்
சொல்லுவதே ஓத்தின் சுருக்கு'' *(1)*

[ஓத்து-திருமறை; ஏத்தும்-துதிக்கும்;
திறம்-வகை; சுருக்கு-சாரம்].

''எம்பெருமான் திருநாமங்களை உச்சரிப்பதே திருமறைகளின் சாரமாகும்; ஆகவே அவனைத் துதிக்கும் வகையை அறிந்து கொள்ளுங்கள்'' என்பது பூதத்தாழ்வார் காட்டும்வழி. ஞானம் மீதூர்ந்து நிற்கும்பொழுது இங்ஙனம் அவன் திருநாமங்களைச் சொல்லி அனுபவிக்கலாம். அவனுடைய திருக்குணங்களில் ஈடுபட்டு அனுபவிக்கலாம். அவனுடைய திவ்விய மங்கள வடிவழகை வருணித்து அனுபவிக்கலாம்; அவன் உகந்த திவ்விய தேசங்களின் வளங்களைப் பேசி அனுபவிக்கலாம்; அவ்விடங்களில் ஆதரம் மிக்க அடியார்களின் பெருமைகளைப் பகர்ந்து அநுபவிக்கலாம். இவற்றைத் தவிரச் சிறப்பான தனித்தன்மையுடைய ஒரு வழியும் உண்டு. அதாவது, தாமான தன்மையை விட்டுப் பிராட்டிமாரின் தன்மையை ஏறிட்டுக்கொண்டு வேற்று வாயாலே பேசியநுபவித்தலாகும் இது. இந்நிலையை 'ஆசாரிய இருதயம்' என்னும் நூல்,

''ஞானத்தில் தம்பேச்சு
பிரேமத்தில் பெண்பேச்சு''*(2)*

என்று குறிப்பிடும். திருமங்கையாழ்வார் இந் நிலையில் இருந்து கொண்டு, எம்பெருமானைப் பாடிப் பெற்ற அநுபவம் சொல்லும் தரமன்று. அப்பாசுரங்களைப் பலகால் ஓதியே, நாம் அனுபவிக்கவேண்டும்.

ஆழ்வார் இப்படி அநுபவிக்கும்போது, தோழி பாசுரம், தாய்பாசுரம், மகள் பாசுரம் என்று மூன்று வகுப்புகளாகப் பாசுரங்கள் அமையும். இப்போது ஆழ்வார்க்குப் 'பரகாலர்' என்ற ஆண்மைப் பெயர்நீங்கிப் 'பரகால நாயகி' என்ற பெண்மைப் பெயர் வழங்கப் பெற்று வரும். தோழி சொல்லுவது போலவும், தாய் சொல்லுவதுபோலவும் பாசுரங்கள் வெளி வந்தாலும், பாசுரங்களைப் பகர்பவர் ஆழ்வார்களேயாவர். ஓர் ஆறு பல வாய்க்கால் களாகப் பிரிந்து சென்றாலும், அவற்றுக்கு முக்கியமான பெயர் ஒன்றேயாக இருக்குமாப் போலே, இம்மூன்று நிலைகளில் ''சொல் மாலைகள்' வடிவு கொண்டாலும்; ''மன்னுமாமட மங்கையர் தலைவன் மானவேல் கலியன் வாய் ஒலிகள்''(3) என்று ஆழ்வார் பாசுரமாகவே தலைக்கட்டும். நாயகி வாக்காக வடிவு கொள்ளும் பதிகங்களின் இறுதிப் பாசுரம் ஆழ்வார் தாமான நிலையிலிருந்து பேசுவது போலவே நிறைவு பெறும்.

எம்பெருமானைப் பற்றிக் கூறும் நூல்களில் திருமங்கையாழ்வார் அருளியுள்ள பெரிய திருமொழியும் ஒன்று. பொதுவாக இவ்வாழ்வாரின் பாசுரங்கள்,

''நெஞ்சுக்கு இருள்கடி தீபம்:
அடங்கா நெடும் பிறவி
நஞ்சுக்கு நல்லமுதம் தமிழ
நன்னூல் துறைகள்
அஞ்சுக்கு இலக்கியம் ஆரண
சாரம் பரசமயப்
பஞ்சுக்கு அனலின் பொறி''4

[இருள்கடி-இருளைப் போக்கும்; அடங்கா-ஒன்றுக்கும் அடங்காத; துறைகள் ஐந்து-எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி. ஆரணம்-வேதம்; பரசமயம்-புறமதங்கள்]

என்று போற்றப் பெறுகின்றன. பெரிய திருமொழியில் ஆழ்வார் எம்பெருமானை 118 பதிகங்களால் அநுபவித்து இனியராகின்றார். இவற்றுள் ஆழ்வார் தாமான தன்மையில் பேசியவை 98 பதிகங்கள்; பெண்பாவனையில் பேசியவை 20 பதிகங்கள். இவற்றுள் தாய் பாவனையில் பேசியவை ஏழு பதிகங்கள்; மகள் பாவனையில் பேசியவை பதின்மூன்று பதிகங்கள். தோழி பாவனையில் பேசியவை இவ்வாழ்வாரிடம் ஒன்றுகூட இல்லை.

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்டவண்ணம் காவளம்பாடியிலிருந்து பார்த்தன் பள்ளியை வந்தடைகின்றோம். பார்த்தனுக்காக (அர்ச்சுனனுக்காக) அருள் சாதிக்கும் இடமாதலால் இத்திருத்தலம் இப்பெயர் பெற்றது என்பர். பார்த்தன் பள்ளி, திருநாங்கூர்த் திருப்பதிகளுள் பதினொன்றாவதாகும். இது

*1. இரண்டாம் திருவந்தாதி-39*
*2. ஆசாரிய இருதயம்-சூத்திரம் 118*
*4. தனியன்*

சீகாழி இரயிலடியிலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. திருநாங்கூரிலிருந்து வண்டி மூலம் வந்தால் நான்கு கிலோ மீட்டர் தொலைவிலும், கால்நடையாக வந்தால் இரண்டரை கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. இங்குத் தங்குவதற்கோ, உணவு கொள்ளுவதற்கோ, எவ்விதமான வசதிகளும் இல்லை. திருநாங்கூரிலிருந்து காலையில் புறப்பட்டு வரலாம். வழிபாட்டினை முடித்துக் கொண்டு, வடதிசையில் ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருமணிக்கூடம் வந்து, அங்கும் வழிபாட்டை முடித்துக் கொண்டு, திருநாங்கூரை வந்தடையலாம்.

பார்த்தன் பள்ளி வந்தடைந்ததும், திருமங்கையாழ்வார் இத்திருத்தலத்து எம்பெருமானைப் பற்றி மங்களாசாசனம் செய்துள்ள திருமொழியில் ஆழங்கால் படுகின்றோம். இத்திருமொழி தாய்பாசுரமாகச் செல்லுகின்றது. பரகாலநாயகியைப் பெற்றெடுத்த திருத்தாயார் பார்த்தன்பள்ளிப் பெருமாளிடத்தில் தன்மகள் காதல் கொண்டு இருக்கும் நிலையை வெளியிடுகின்றாள்; அப்பெருமாளை நினைந்து வாய் வெருவிக் கூறும் படிகளை, ஒவ்வொரு பாசுரத்திலும் ஒவ்வொரு வகையாகக் கூறுகின்றாள்.

''கவளயானைக் கொம்பொசித்த
கண்ணனென்றும், காமருசீரிர்க்
குவளை மேகம் அன்னமேனி
கொண்டகோன்என்ஆனையென்றும்,
தவளமாட நீடுநாங்கைத்
தாமரையாள் கேள்வனென்றும்,
பவளவாயாள் என்மடந்தை
பார்த்தன்பள்ளி பாடுவாளே''5

[கவளம்-யானையின் உணவு; ஒசித்த-முறித்தொழித்த; காமரு-ஆசையை விளைவிக்கின்ற; சீர்-அழகு; அன்ன-ஒத்த; மேனி-உடல்; கோன்-சுவாமி; தவளம்-வெண்மையான].

பார்த்தன்பள்ளியில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானை எப்படி எப்படி எல்லாம் எண்ணுகின்றாள் என்மகள் தெரியுமா? 'குவலயாபீடம் என்றயானையின் கொம்புகளைச் சேற்றிலிருந்து முள்ளங்கியைப் பிடுங்குவது போல எளிதில் பிடுங்கி, அதன் உயிரைத் தொலைத்திட்ட கண்ணன்; அப்படிப்பட்ட சூரன் அவன். அவன் திருமேனியின் நிறம் குவளை மலர், காளமேகம் இவற்றின் நிறத்தை ஒத்து, கண்ணைக்கவரும் திறத்தது. யானையை எத்தன்ன தடவை பார்த்தாலும் ஒவ்வொரு தடவையும் கிடைத்தற்கரிய பொருள்போல்க் காணப் பெறுவது போலவே, தன் கண்ணனும் அப்பொழுதைக்கப் பொழுது ஆராவமுதமாய் இருக்கின்றான்'' என்கின்றாள். 'யானையை முடித்த செய்தியை ஒரு தடவை சொல்லி முடியக் கூடியதோ? மிகச் சீறிவந்த களிற்றுடன் போர் புரிவதும் வெற்றி பெறுவதும் எளிதான செயலல்லவே என்று அந்த வீரத்திலேயே ஈடுபட்டுக் 'கஞ்சன்விட்ட வெஞ்சினத்த களிறு அடர்த்த காளை' என்கின்றாள். சிறிது வயது சென்ற பிறகு செய்த இச்செயல் கிடக்கட்டும். தொட்டில் பருவத்தில் செய்த அரும்பெருஞ் செயல் உங்கட்குத் தெரியுமோ? ''வஞ்சனையாகக் கொல்ல வந்த பேய்ச்சியின் முலையுண்கின்ற போக்கில் அவள் உயிரையும் உண்ட மாயன் அன்றோ இவன்?'' என்கின்றாள்.

''இவன் நான்முகன் படைத்த அண்டங்களிலுள்ளார் எல்லோர்க்கும் சுவாமி; தனக்கு ஆனை போன்றவன்; இடைப் பெண்களின் கொங்கைகளுடன் அணையும் இயல்புடையவன். திருமறைகளும் தேடிச் செல்லும் செல்வன்'' என்கின்றாள். இதனை ஊடல் தோன்றச் சொல்லுகின்றாள் என்று கொள்ள வேண்டும். ''அழகிய வளையல்கள் அணிந்தமகளிர்முன்னே வரம்பு அழிந்தவளானாள்; பெண்மைக்குரிய மரியாதைகள் அழியப்பெற்றாள்; பல மகளிரின் எதிரே சேதுகட்டுவித்து இலங்கையைப் பாழ்படுத்த பெருமிடுக்கன்'' என்கின்றாள். ஒரு பிராட்டிக்காகப் படாதனபட்டு அரும்பெருஞ் செயல்கள் ஆற்றியவன், தன் விஷயத்தில் அலட்சியமாக இருப்பதாகச் சொல்லுகின்றாள் என்று கொள்ள வேண்டும். 'முன்பு ஒரு காலத்தில் அரக்கர்களின் ஆவி முடியும்படியாக ஆழ் கடல்சூழ் இலங்கையைப் பொடிபடுத்திய பெருவீரன்; ஆண்மைக்கு இலக்கணமாக அழகிய வில்லைக் கையிலே உடையவன்''என்கின்றாள்.

''பிரளய காலத்தில் உலக முழுவதையும் தன் திருவயிற்றில் காத்துப் பின்னர் வெளிப்படுத்திய பெருமாள். கடல் போன்ற திருமேனி நிறமுடையவன்'' என்கின்றாள். ''எத்தனையோ பிறவிகளாகத் தேடிப்பிடித்து என் நெஞ்சைத் தன் இருப்பிடமாகக் கொண்ட நாதன்; அவனோ யார்க்கும் அகப்படாத கள்வன்; நான்கு மறைகளும் தேடிப்பார்த்தாலும் அவற்றுக்கும் அகப்படாத தொலைவிலுள்ளபெருமையுடையவன்'' என்கின்றாள். ''உயர்ந்தோராலும் சாதாரண மக்களாலும் புகழப்பெறுபவன். சந்திர சூரியர்களாலும் மற்றுமுள்ள உம்பராலும் கிட்டமுடியாமல் பெருஞ்சுடர் விட்டிலங்கும் திருவாழியாழ்வானை ஆயுதமாகவுடையவன்; அடியார் பக்கல் பேரன்புடையவன்'' என்கின்றாள். ''கண்ணன் என்றும், வானவர்கள் காதலித்து மலர்கள் தூவும் எண்ணன் என்றும், எல்லோர்க்கும் இன்பம் அளிப்பவன் என்றும், ஏழ் உலகங்கட்கும் காரணபூதன் என்றும் பேசுகின்றாள் என்மகள்''. இத்தகைய பெருமான், பார்த்தன் பள்ளியில் திருக்கோயில் கொண்டுள்ளான் என்று சொல்லிவிட்டு, அத்திருப்பதியின் திருநாமமிட்டு இசைபாடத் தொடங்கி விட்டாள் தன் மகள் என்று, திருத்தாயார் ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாகப் 'பார்த்தன்பள்ளி பாடுவாளே'' என்று கூறுகின்றாள்.

இங்ஙனம் திருப்பாசுரங்களில் ஆழங்கால் பட்டவண்ணம் திருக்கோயிலுக்குள் நுழைகின்றோம். நின்ற திருக்கோலத்தில் மேற்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு சேவைசாதிக்கும் தாமரையாள் கேள்வனைக் கண்டு மகிழ்ந்து வழிபடுகின்றோம். தாயாரின் திரு

5. பெரிய திருமொழி—4.8:1

நாமம் தாமரை நாயகி என்பது. இவரையும் வணங்கி, இவருடைய திருவருளுக்குப் பாத்திரர்களாகின்றோம். எம்பெருமான் சந்நிதியில் திருமொழிப் பாசுரங்கள் பத்தையும் மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரைகின்றோம். ஆழ்வார் கொண்ட பிராட்டியின் நிலை நமக்கு வருவதற்கு முயல்கின்றோம். இப்பாசுரங்களை ஓதுபவர்கள் ''ஏர் கொள் நல்ல வைகுந்தத்துள் நாளும் இன்பம் எய்துவார்'' என்ற குறிப்பை நினைந்து 'எம்பெருமானை ஒருநொடிப்பொழுதும் பிரியாமல் அநுபவிக்கும் இடமாகிய திருநாட்டில் நித்தியானந்தம் அநுபவிக்கப் பெறுவோம்' என்ற எண்ணமும் கொள்ளுகின்றோம்.

இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வர, அதனையும் ஓதுகின்றோம்.

''ஒத்து அமரர் ஏத்தும்
ஒளிவிசும்பும் பாற்கடலும்
இத்தலத்தில் காண்பரிய
என்நெஞ்சே!-சித்துணர்ந்த
தீர்த்தன்பள் ளிக்கிருந்து
செப்பவெளி நின்றானைப்
பார்த்தன்பள் ளிக்குட்
பணி'' 6

[ஒத்து-ஒன்றுகூடி; அமரர்-நித்தியசூரிகள்; ஒளிவிசும்பு-பரமபதம்; இத்தலத்தில் - இந்தப் பூமியில்; சித்து-சீவான்மாவின் உண்மைநிலை; தீர்த்தன்-பரிசுத்தனான பிரகலாதாழ்வான்; செப்ப-மறுமொழிகூற; வெளிநின்றானை-(தூணினின்று) வெளித் தோன்றிய திருமாலை; பணி-வணங்குக.]

பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம் என்ற நான்கு நிலைகளில் உள்ள எம்பெருமான், காண்டற்கரியனாதலால், அர்ச்சாவதார நிலையில் பார்த்தன் பள்ளியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை வழிபடுமாறு, தன் நெஞ்சிற்கு ஆற்றுப்படுத்துகின்றார். இந்நிலையில் திருவெண்காடு வந்து பேருந்து மூலம் மாயூரம் வந்து சேர்கின்றோம்;

6. நூற்றெட்டுத் திருப்பதிஅந்தாதி—40.

# தமிழின் தனிச் சிறப்புகள்

1. செய்யுள் நடையிற் கிரேக்கத்திற் சிறந்த நயமும் திருத்தமும்மிக்(கு)
எய்தற் கருநற் கலைவிரிவில் இலத்தீ னத்தின் மிகமேலாய்,
உய்யும் நிறைவால் ஆற்றலினால் உயர்ந்த செருமன் ஆங்கிலத்தின்
மெய்யே ஓங்கித் தமிழ்மொழிதான் விளங்கித் திகழும்! தமிழ்வெல்க!

2. கருத்துச் சிறப்பில், ஆற்றலினில், கலைகள் மலிந்த கவிவளத்தில்,
சுருக்கத் திறனில், திட்பநுட்பம் துதைந்து விளங்கும் அறிவறத்தில்,
ஒருக்க உணர்வும் உரைவிளைவும் ஒன்றும் உயர்வில், தமிழ்மொழிபோல்
பெருக்கம் அமைந்து பிறங்குமொழி பிறிதொன்றில்லை! தமிழ்வாழ்க!

3. எண்ணில் மொழிகள் வழக்கிழந்தே, எவரோ சிலர்வதாம் பயிலநிற்கக்,
கண்ணில் விளங்கு கருமணிபோல் கனிவிற் போற்றி; மக்கள்பலர்
மண்ணில் இன்றும் வழங்கிவர, மாறா வளத்தில், தொன்றுதொட்டே
திண்ணி தாகத் தமிழ்மொழிதான் சிறந்து திகழும்! தமிழ்போற்றி!

1. "It is not perhaps extravagant to say that in its poetic form, the Tamil is more polished and exact than the Greek, and in both dialects with its borrowed treasures, more copious than Latin. In its fullness and force it resembles English and German more than any other living language."

—**Dr. Winslow.**

2. "Perhaps no language combines greater force with equal lerevity and it may be asserted that no human speech is more close and philosophic in its expression as an exponent of the mind. The sequence of things, of thought and action and its results, is always maintained inviolate"

—**Percival**

3. "Tamil is, perhaps, the only example of an ancient classical tonque, which has survived as a spoken language, for more than 2500 years, with its basic structure, almost unchanged"

—**Encyclopaedia of Brittanica**

# சேக்கிழார் நோக்கம்

மகாவித்துவான்
பண்டித நடேசனார்

தொன்மையும் மேன்மையும் உடையது தொல்காப்பியம், செய்யுளில் இலக்கணம் கூறுமிடத்து, மாத்திரை முதல் வண்ணம் வரை உறுப்புக்கள் இருபத்தாறு அமையவேண்டும் என்பர் தொல்காப்பியர். அவ்வுறுப்புக்களுள் நோக்கு ஒன்று. ''மாத்திரை முதலா அடிநிலை காறும், நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே'' என்பது அவர்தம் நூற்பா. இந்நூற்பாவுக்கு உரை வரைந்த இளம்பரணர் ''யாதானும் ஒன்றைத் தொடுக்குங் காலத்துக் கருதிய பொருளை முடிக்குங்காலும் பிறிது நோக்காது அது தன்னையே நோக்கி நிற்கும் நிலை'' என்றார். ஒரு நோக்காகவும் பல நோக்காகவும் இடையிட்டு நோக்காகவும் மூவகையாகப் பிரிக்கலாம். ஆற்றொழுக்காகப் பொருள் பண்ணல் ஒரு நோக்கு ஆகும்; பல இடங்களில் பொருள் முடிதல் பலநோக்கு ஆகும். கொண்டு கூட்டிப் பொருள் பண்ணல் இடையிட்டு நோக்கு ஆகும். எனவே, பாட்டின் பொருளைப் பண்ணும் வகைகளில் நோக்கு ஒன்று எனலாம். எச்சொற்களாலும் செய்யுள் செய்யலாம்; ஆனால் பொருட் செறிவில்லாச் சொல்லுடையன பாக்கள் ஆகா. செய்யுளை நோக்கி நோக்கிப் பயன்அடையும் வண்ணம் வற்றாத அறிவின் ஊற்றாய்ப் புத்தம் புதிய கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டதாக அமைதலே நோக்கு எனலாம். தெய்வச் சேக்கிழார்பெருமான் தாம் பாடிய பாக்களை வெற்றெனத் தொடுக்காது சிந்தைக்கினியதாய் செவிக்கினியதாய் பொருள்ளாழம் பெற்றதாய் இருக்கும் நோக்குடனே அமைத்திருக்கிறார் என்பது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

சேக்கிழார் செந்தமிழ்ப் பாவில் தெய்வ மணம் கமழ்தலையும் நீருற்றின் அமிழ்தம் ஒழுகுதலையும் தொட்டனைத்தூறும் மணற் கேணியாதலையும் கற்பார்க்கும் கேட்பார்க்கும் விழுச் செல்வமாதலையும் புலவர்தம் சிந்தையிற்கொள்ளும் கருத்துக்களை (நோக்கம்) எல்லாம் தரும் சந்தாமணியாதலையும் நோக்கியறியவே வேண்டுகிறேன். (நோக்கு-எண்ணிப் பார்த்தல்.) ''அண்ணனும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்'' என்பது நல்ல எடுத்துக் காட்டு ஆகும்.

''மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகு'' புறம். இறைவன்-குடிகளின் மனத்துள் இறுத்தல் (தங்குதல்) செய்பவன்; மன்னன்-எல்லாருடைய மனத்திலும்பொருந்தியவன். மக்களை தம் உயிரையே பெறலரும் பொருளாகப் போற்றி வாழ்கின்றனர். உலகுக்கு மன்னனை உயிராகக் கூறுதல் போற்றற்குரியதே; பொருள் செறிந்ததே. மன்னனை உடலாகக் கூறல் ஒரு புரட்சியின்பாற்படும். ஜனநாயக ஆட்சிக்கு வித்திட்ட காலத்தின்பாற்படும் அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் எனும் பண்புகள் பெற்றவனே நல்லரசனாவான். நியாயம் வழங்க காலம் போக்காதவனும் எதனையும் துணிந்து செய்பவனே செங்கோலுடையவனாக வீற்றிருக்கும் மன்னனாவான். காட்சிக்கு எளியவனே உண்மைக் காவலனாவான். ''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும்'' என்பது வள்ளுவனீயம்.

மன்னுயிர் காப்போன் இலக்கணம்:

மாநிலங் காவல னாவான்
மன்னுயிர் காக்கும் காலைத்
தானதனுக்கு இடை யூறு,
தன்னால் தன் பரிசனத்தால்
ஊனமிகு பகை திறத்தால்
கள்வரால் உயிர் நம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து
அறங் காப்பான் அல்லனோ?''

—சேக்கிழார்

சேக்கிழார் தம் பாவில் அரசர் கடமைகளை முற்றும் அடக்கிய நோக்கினை இச் செய்யுளால் அறிக! மாநிலங் காவலன் என்ற பெயருக்கு உரிமையுடையவன்; அரசன் காவல் செய்தகுதிப்பெறும் தன்மையுடையவன்; இச் செய்யுளில் கூறும் நோக்கங்கள் எல்லா நாட்டிற்கும் எல்லா தேசத்துக்கும், எல்லா மன்னர்க்கும் எல்லா காலத்தும் குறிக்கோளாக இருக்கத்தக்கதே. நிலத்து வளத்தையும் உயிர்களையும் காவல் செய்யும்போது அதற்கு இடையூறாகத் தன்னாலும் தன் பரிசனத்தாலும் பகைவராலும் கள்வராலும் ஏனைய உயிர்களாலும் மிருகம், பறவை, ஊர்வன முதலியன வரும் பயங்களைத் தீர்த்தும் தருமத்தைப் பிறழாமற் பாதுகாப்பவன் அல்லனோ என்கிறார் சேக்கிழார். இத்தகைய நோக்கம் என்றும் அழியாது.

இடையூறு நீக்கி இன்பம் தருதலே அரசனின் நன்னோக்கு ஆகும். முறையீடு என்னும் குறை கூறி நீதி வேண்டுதலேயாம். ''முறை

வேண்டுநர்க்கும் குறைவேண்டுநர்க்கும்வேண்டுவ வேண்டுவ வேண்டியாண்டு அருளி'' -பெரும் பாண். இவ்வடியே சேக்கிழார் செந்தமிழ்ச் செய்யுளின் நோக்கு விளக்கும். முறைப் பாட்டை விரும்புபவர்க்கும் காரியங்களை விரும் புபவர்க்கும் அவரவர் விரும்புவனவற்றை அரு ளிச் செய்தலே அரசன் கடன்'' என்பார் நச்சி னார்க்கினியார். முறை / முறை வேண்டுநர்-வலியரால் நலிவு எய்தினார்; குறைவேண்டுநர்-வறுமையுற்று இரந்தார்.

## அரசாட்சி அரிதோ? எளிதோ?

நடுவுநிலைமையே நீதிதேவன். ஒருபாற் கோடாமல் எவர்பாலும் ஒப்ப நிற்குந் தன் மையே நடுவுநிலைமை. நன்றி செய்தவரிடத் தும் இந்நிலைமை குலையாமல் ஒழுகவேண்டும். நீதிசெய்து ஒழுகுவானாயின் அவ்வொழுக்கு ஒன்றே அவனுக்கு என்றும் நன்றாம். நடுவு நிலையின் நலம் பல. சத்துரு, மித்துரு, சமம் என்னும் முத்திறத்தார் மாட்டும் ஒருவன் எத் திறத்ததும் கோடாமல் நடுவுநிலைமையாக நின்று முறைமை செய்வானாயின் அவனே தகுதி (நடுவுநிலைமை) யுடையவன். பேரறங் களின் பயன்களை எல்லாம் இவ்வோர் அறத் தானே அவன் எய்துவான். மனம் தூயார்க்கு எச்சம் நன்றாகும்.

''ஒரு மைந்தன் தன்குலத்து உள்ளான் என் பதும் உணரான்
தருமம்தன் வழிச்செல்கை கடனென்று தன் மைந்தன்
மருமம்தன் தேராழியுற ஊர்ந்தான் மனு வேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ மற்று எளிதோ தான்''
—சேக்கிழார்

தக்கவர் தகவிலா என்பது அவரவர் எச் சத்தார் காணப்படும்; நல் மகவு நலம் யாவும் பயக்கும் எனும் தம் நோக்கினைச் சேக்கிழார் சுவாமிகள் இப்பாட்டினாற் காட்டுகின்றார். மனுகுலம் வளரக் காரணமான ஆலம் விழுது போன்ற ஒரே மகவினைக் கொன்றதே நீதி தேவன் வணக்கமாகும். இவ்வரசனுக்கு ஒரே மகனாதலின் இவனைத் தேர்க்காலில் ஊர்ந்து விட்டால் தனது குலம் வழிவழிச் செல்ல வேறு மகனில்லாது தன்னொடு நின்றுவிடும் என்ற செய்தியினை (நோக்கு)ச் சிந்திக்கவில்லை. அறநெறி (சட்டம்) செய்தலையே தருமநெறி யின் செவ்விய உண்மைத்திறம் என்றே நோக்கி னான். தனது வழியாகச் சென்று கொண்டு இது செய்யானாயின் தருமம் தன்னோடு அழி யும். இப்படி அழியாமற் காத்தலே அரசனது தலையாய கடன்; அவன்தான் அரசின் கடமை யுமான். 'தன்கடன் பணி செய்வதே' என்ற நோக்கு உலகினை வளர்க்கும். இவ்வரசன் தன் மனசாட்சி (இறைவனாணை) ஒன்றினையே மதித்தான். வேதநெறி அல்லது இறைவன் ஆணையிட்ட அறநெறியில் நிற்றல் தன்கடன் என்று தன் மகனைத் தேர்க்காலிற் கொல்லத் துணிந்தான். செய்கையே முக்கியம் எனும் நோக்கினை மக்கள் உணர மேம்பாட்டில் ''ஊர்ந்தான் மகனைத் தேர்க்காலில்'' என் கின்றார் சேக்கிழார். ''ஊர்ந்தான்'' எனும் பயனிலையை முன் வைத்துப் பாடினார். செய் வினையும் மன்னனும் வெவ்வேறாகாமல் செங் கோல் நடத்த ஒன்றாகவே நின்றார்கள்.

''அருமந்த அரசாட்சி அரிதோ? மற்று எளிதோதான்'' என்று சேக்கிழார் கூறுவா னேன்? தலையாய காரணம்: இஃது இச் செயலி லிருந்து ஆசிரியர் கற்பிக்கும் கற்பனை. அரசு நடத்தலைப் பற்றிப் பிறர் எண்ணுவது போல் எளியதன்று; மிகப்பெரியது; பெறற்கரிது; இரண்டு ஓகாரத்தில் எதிர்மறையையும் உடன்பாட்டினையும் குறித்தார் தெய்வச் சேக் கிழார்.

ஜகப்பிரியர் அரசினை இசைக்கச்சேரிக்கு ஒப்பிட்டார்; மெல், வல், இடை ஓசைகளை யும் ஒலிகளையும் வாசிக்கும் வாத்தியக்காரர் கள் நோக்கி நோக்கி ஒற்றுமையாக இசைந் தால்தான் இசையெழுமாபோல் தோட்டிமுதல் தொண்டைமான் வரை அரசு நடைபெற ஒன் றாகித் தொழிற்படவேண்டும் என்பதே ஜகப் பிரியரின் நோக்கு. ஆனால் நம் தெய்வச் சேக் கிழார் பெருமான் அரசினை ''அருமத்த அர சாட்சி'' என்றார். அவர்தம் நோக்கினை ஆய் வம். மக்கள் உடலைப்பற்றிய நோயையும் மன நோயையும் தீர்ப்பது மருந்து. அருமருந்து நோய்ப்பயம் தீர்த்து மேலும் நோய் வராமற் காப்பது; அதுபோல அரசாட்சியும், நாட்டிற்கு வரும் ஐந்து பயங்களையும் போக்கி தருமம் (சட்டம்) பிறழாமல் காப்பது ஆகும். 'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்' என்றார் திருவள்ளுவர். நாட்டிற்கு வரும் நலிவும் நோயே ஆகும். வியாதி உற்றவன், மருத்துவன், மருந்துப்புல வன், மருந்து, மருந்தை வேளைக்குத் தகக் கொடுப்பன், மருத்துவ மனைச் செவிலியர் என்று மருத்துவ முறையிற் பாகுபாடு உள்ளது போல், அரசியலிலும் பலவகை ஊழியரும் உதவியரும் உள்ளனர். அவர்கள் யாவரும் அரசனோடு ஒத்துழைத்துத் தருமத்தைக் காக்க வேண்டும். நேர்மாறாக இருப்பின் அவர்களால் குடிமக்களுக்குப் பயமே ஏற்படும். தன்னைக் கண்டும் தன் பரிவாரங்களைக் கண்டும் குடி கள் பயப்படாது அரசுபுரிபவனே நல்லரசன் எனச் செப்பினார் சேக்கிழார். இது இக்காலத் தில் வியத்தகு நோக்கு அன்றோ? கொடை, அளி, செங்கோல், குடியோம்பல் நான்கும் உடையான் வேந்தர்க்கு ஒளி என்னும் வள்ளு வத்தைத் தம் நோக்கினால் வாழ வைக்கிறார் சேக்கிழார். கடவுளையும் ''அடியார் அல்லல் தீர்க்கும் அருமருந்தை'' என்றும் ''அருமந்த நன்மையை எலாம் அடியார்க்கு ஈவர்'' என்று துதிக்கும் தேவாரம் நோக்குக! அரிச்சந்திரனை யும் பொற்கைப் பாண்டியனையும் நோக்குக! வாழ்க!

இறைவன் நீதி வடிவினனாகக் கொண்டு அவனது நீதியினை வணங்கி உறுதியை அடைந் தவர் சேக்கிழார் சுவாமிகள். பல்வேறு உரு வங்களில் மிகச் சிறந்தது நீதி வடிவமே, ''நீதி பலவும் தன் உருவாம் என மிகுந்த தவ நீதி

யோடு தானமர்'' சிவம் என்கின்றார் சம்பந்தர்.

''அடி பணிந்த திருமகனை ஆகமுற எடுத் தணைத்து
நெடிது மகிழ்ந்து அருந்துயரம் நீங்கினான் நிலவேந்தன்
மடிசுரந்து பொழிதீம்பால் வருங்கன்று மகிழ்ந்துண்டு
படிநனைய வரும்பசுவும் பருவால் நீங்கியது அன்றே''

மனுநீதிச் சோழன் பசுத்தாயின் துயரைத் தானே அறியவும் அத் தாய்ப் பசுவின் துயர் போக்கவும் புதல்வனைத் தானே தேராழி கொண்டு இறக்கச் செய்தான். அவ்வளவில் பார்வதியுடன் பரமேஸ்வரன் காட்சியளித்தான் உடனே கன்றும் மந்திரியும் இளவரசனும் உயிர் பெற்று எழுந்த காட்சியைப் பல நோக்குடன் சேக்கிழார் பாடியுள்ளார் என்பதை மேற்பாட்டில் நோக்குக!

அரசன டியிற் மகன் அவன் தன் மகனே யானாலும் ஆண்டவனால் உயிர்பெற்ற காரணத்தால் அவன் இறைவனது அருள்பெற்ற திருமகனாயினான் என்றார் சேக்கிழார். தாய்ப் பசுவுக்கு இன்பம் தன் கன்று பாலுண்ணும் போது எழுவதே. தாய்மைக்கு அடையாளரும், இல்லை பேரடையாளமும் பாலுண்குழவி யால் பெறும் இன்பமேயாம். அந்த நோக்குடன் தெய்வச் சேக்கிழார் பெருமான் ''மடி சுரந்து பொழி தீம்பால் வருங் கன்று'' என்றார். உயிர் பெற்று வந்த கன்றுக்குப் பாலூட்டி மகிழ்ந்தும் மகிழ்ந்துண்டு படி நனைய வரும் பசுவும் கன்றினையும் நம்முன் நிறுத்துகிறார். தனக்கு நேர்ந்த பாவத்தையும் அதனைத் துடைத்தமையும் நீதிவழுவா நெறியையும் அந்நெறி முறைமையில் நின்ற தந்தைமையும் நினைத்தே ''அடிபணிந்த திருமகன்'' என்று ஆரம்பித்தார் தம் பாட்டினை ஆசிரியர். நோக்குடன் செய்யுள் செய்தலே நலம் பயக்கும். இலக்கணமற்றால் வேலியில்லா பயிராகும் மொழி எனும் உண்மையைப் போற்றுக!

* * *

# திருமுறை நூல்களின் சிறப்பு

திருமுறை நூல்களின் சிறப்பும் பயனும்
உணர்தொறும் உணர்தொறும் உவப்பில வாகும் ;
களைப்புறின், நமக்குக் கட்டிலாய் விளங்கும்;
நளிஇருள் தன்னில், ஒளிமிக நல்கும்;
பசிவரின், சிறந்த ருசிமிகும் உணவாம் ;
பயமுறில், போரிடக் கவசமாய்ப் பயன்படும்;
நோயுறில், போக்கும் வாயுறை மருந்தாம்!
செந்தமிழ் மணங்கமழ் திருமுறை நூல்கள்
தனிமையிற் சூழும் நனியுயர் நட்பு ;
பணிசெய முனையில், அணிமிகு கருவி ;
விளையாட்டு அயரக் கலையாட்டு இனியயாழ்;
பேதைமை பிறங்கிடின் மாபெரும் பள்ளி ;
தளர்ந்து விழின், நமைத் தாங்கும் தரைநிலம் ;
குளிர்மிக வாட்டின் ஒளிமிகும் நெருப்பு;
துணிந்து விரும்பினால், அணிந்தெழு சிறகு ;
வழியினை விடுப்பின், மதிவழி காட்டி!
தெய்வ ஒளிதிகழ் திருமுறை நூல்கள்,
ஆடையில் நிலையுறின், அரும்பெறல் உடைதரும்;
சிறைப்படில், நல்ல நிறைப்படு வெளியாம் ;
புயல்எழுந்து ஆர்ப்பின், புகலிடம் அளிக்கும்;
அருஞ்செயல் ஆற்றப் பெருங்கடல் போலும்!
ஒய்வுற விழையில், சாய்பெரும் பசுந்தரை ;
கவலையிருள் கவ்விற் கடிந்தருள் ஞாயிறு ;
அழகிலாச் சூழலில் அழகொளிர் பூங்கா ;
தாகம் கொளின், அது தணிக்கும்நல் ஓடை !
மூச்சு முட்டிடில், ஆற்றல்தரு காற்று!
சிவநெறிச் செல்வமாய்ச் செம்மை செறிந்தொளிர்ந்து
இங்ஙனம் எல்லாம், எனைப்பல வகைகளில்
நமக்குப் பயன்தரும், நலமிகு திருமுறை,
நூல்களின் சிறப்பு, நுவலுதற் கெளிதோ ?

ஆசிரியர்.

# "குணம் திகழ் கொண்டல் இராமாநுசன்"

'செந்தமிழ் வேதியர்'
திரு. உ. வே. குமாரவாடி சே. இராமாநுஜாசாரியர்

உணர்ந்தவர் மெய் ஞானியர் யோகம்
    தொறும், திரு வாய்மொழியின்
மணந்தரும் இன்னிசை மன்னும்
    இடந்தோறும், மாமலராள்
புணர்ந்தபொன் மார்பன் பொருந்தும்
    பதிதோறும், புக்குநிற்கும்
குணம்திகழ் கொண்டல் இராமாநுசன்,
    எம் குலக் கொழுந்தே!

—திருவரங்கத் தமுதனார்.

அநாதியான வைணவசமயம், இராமாநுசரால் மறுமலர்ச்சியுற்றது. மனிதகுலம் மறக்க முடியாத, மறைக்கஇயலாத, மறுக்கவொண்ணாத மகாபுருஷர் இராமாநுசர். இற்றைக்குச் சற்றேறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் (கி.பி. 1017-1137). பிங்களஆண்டில் சித்திரைத் திருவாதிரையில் அவதரித்தருளியவர் இராமாநுசர். பகவத் இராமாநுசரை வைணவப் பெருமக்கள் ஒருநாளும் மறந்திலர், வைதிகர் மறைத்திலர், மற்றோர் மறுத்திலர். இராமாநுசரை, உடையவர்-எம்பெருமானார்-எதிராசர் என்னும் பலபெயர்களாலும் வைணவவுலகம் வழங்கி மகிழும்.

மறையாய நால்வேதத்துள் நின்ற மலர்ச்சுடர்ஆகிய திருமாலை, ஆழ்வார்களின் அடியொற்றி, அனைத்துலகும் துய்க்கும்வண்ணம், ஆக்கிவைத்த உபயவேதாந்த ஆச்சாரிய குலதிலகர், இராமாநுசர் என்னும் எதிராசர். உடையவர் என்னும் இராமாநுசர் இயற்றிய ஸ்ரீபாஷ்யம் என்னும் பிரமசூத்திரப் பேருரையால், நாராயணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது; வாட்டமிலா வண்டமிழ் மறைநூல் வாழ்ந்தது; 'பொலிக பொலிக' என இராமாநுசரின் வரவை முன்னோக்கி, நல்வாழ்த்தும் கூறியது; எம்பெருமானார் பிறப்பால் ''நலியும் நரகமும் நைந்த, நமனுக்கு இங்கு யாதொன்றும் இல்லை; கலியும் கெடும்; கண்டு கொள்மின்'' என்றார், நெடுநோக்குடன் நம்மாழ்வார்.

மண்மிசை யோனிகல் தோறும்
    பிறந்து எங்கள் மாதவனே
கண்ணுற நிற்கிலும் காணகில்லா
    உலகோர்கள் எல்லாம்,
அண்ணல் இராமா நுசன் வந்து
    தோன்றிய அப்பொழுதே
நண்ணுறு ஞானம் தலைக் கொண்டு
    நாணற்கு ஆயினரே

என்று சான்று பகர்கின்றார், அண்ணலைக் கண்ணாரக் கண்டு உடன் உறைந்திருந்து களித்த திருவரங்கத்து அமுதனார்.

கூரத்தாழ்வான், முதலியாண்டான் போன்று, தமிழிலும் விஞ்சிய அறிவாற்றல் மிக்க பலரையும் தனக்குச் சீடராக்கிக்கொண்டு, அரங்கன் செல்வம் முற்றும் திருத்திவைத்த இராமாநுசரின் பெருமைகளுக்கு, ஓர் எல்லையே இல்லை. அதனாலேயே, ''எக்காலத்தும் எவ்விடத்தும் எந்நிலையிலும் தோலாத வெற்றி மிக்க இராமாநுசர் இட்ட தெய்விகக் கட்டளைகள் நாளும் வளர்க, நன்கு பொலிக'' என்று இன்றும் வைணவக் கோயில்கள், திருமடங்கள், திருமாளிகைகள்தோறும் அடியார்கள் இராமாநுசருக்குப் பல்லாண்டு பாடி, அவரைப் பெரிதும் பரவிப் போற்றிவருகின்றனர்.

''உலகின் நிலையாமையை உணர்த்திக் காண்பன யாவும் பொய்த்தோற்றம்; உண்மைப் பொருள் என்று ஒன்றுமே இல்லை. கணந்தோறும், தோற்றம் காட்டி அழிவதுதான், உலகின் உண்மை; என்கிறது. புத்தரின் கணபங்கவாதம்.

''காண்கிற அனைத்தும் அழிபவை; மாயை, பொய்; காணாத அந்த 'ஒன்று' (பிரம்மம்) மட்டுமே மெய்; அதுவே சத்தியம்; நித்தியம் என்கிறது ஆதிசங்கரரின் அத்வைத தத்துவம்''.

''இல்லாத பொருள் தோன்றுவதில்லை; தோன்றும்பொருள் இல்லாது போவதும் இல்லை; அனைத்துப் பொருள்களும் உண்மையே. பொருள்களின் தோற்றங்களும் மெய்யே; அவற்றின் மாற்றங்களும் சத்தியமே; அவற்றுக்கான காரணங்களும் நித்தியமே. உடல் உயிர் இறை என்னும் மூன்றும் பிரிக்க முடியாத தத்துவங்களே'' - இது பகவத் இராமாநுசர் கண்டுகொண்ட, விசிட்டாத்வைத சற்காரிய சத்திய தத்துவத் திரய தரிசினம் ஆகும்.

இதனையே வேத உபநிடதங்கள், வியாசரின் பிரம்மசூத்திரம் பகவத் கீதை, மற்றும் இதிகாசபுராணங்கள், ஆழ்வார்களின் அருளிச்செயல்கள், ஆகியவற்றிற்கு உரிய பொருளாக இராமாநுசர் எடுத்துக்காட்டி நிலைநாட்டினார்.

உடலில் உயிரும், உயிரில் ஒளிமயமான அறிவும், புறத்தே புலப்படாமல் நின்று, உடல் முழுவதையும் இயக்கி இதயத்தில் வாழ்வை மலர்விக்கின்றது.

உடலுக்கு உயிர்போல உலகுக்கு ஓர் உயிராய், அறிவின் வடிவாய் எங்கும் நிறைபொருளாய், கண்காணாத தத்துவமாய்ப் பரவிநின்று

அனைத்தையும், அனைவரையும் இயக்குகின்றான் பரமன். அறிவுள்ள, அறிவற்ற அனைத்துப் பொருள்களிலும் கருதற்கு அரிய உயிர்க்குயிராய், உறைகின்றான் இறைவன்.

பரம்பொருள் உண்மையையும், என்றும் ஒழிக்க ஒழியாதபடி அவனோடு நமக்குள்ள உறவையும், உள்ளது உள்ளபடியே, மிகத் தெளிவுற விளக்கி உணர்த்தி யருளியவர், இராமாநுசர் என்னும் நம் உடையவரேயாவர். நவரத்தினம்போன்று,

1. ஸ்ரீபாஷ்யம்
2. வேதாந்த தீபம்
3. வேதாந்த சாரம்
4. வேதாந்த சங்கிரகம்
5. கீதா பாஷ்யம்
6. சரணாகதி கத்யம்
7. ஸ்ரீரங்க பாஷ்யம்
8. ஸ்ரீவைகுண்ட சத்யம்
9. நித்யம்

என்னும் ஒன்பது அரும்பெரும் நூல்களை இயற்றி, அறிவியல் உலகை உய்வித்தருளியவர், நம் இராமாநுசரேயாவர். வேதம் தமிழ்செய்த சடகோபர் என்னும் நம்மாழ்வாரின் அடி பணிந்து உய்ந்தவர், எம்பெருமானார் என்னும் இராமாநுசர் . ஆதலால்.

> ''திட விசும்பு எரிவளி நீர் நிலம் இவை மிசை
> படர்பொருள் முழுவதுமாய், அவையவை
> தோறும்
> உடல்மிசை உயிர் எனக் கரந்து எங்கும்
> பரந்துளன்
> சுடர்மிகு சுருதியுள் இவையுண்டசு ரனே''

என்னும் திருவாய்மொழிப் பாசுரம், உடலுக்கும் உயிருக்கும் இடையில் உள்ள உறவை, உவமை காட்டி, நம் உடையவருக்கு உதவியது.

> ''அனைத்துலகும் தன்னுள்ளே நிற்க, நெறி
> மையால் தானும்
> அவற்றுள் நிற்கும் பிரான்''

என்று ''நாராயணன்'' என்னும் மந்திரப் பொருளை, வேதம் தமிழ்செய்த மாறனாகிய நம்மாழ்வார் விளக்கி விரித்துள்ளார். அதன் சிறப்பையும் மேன்மையையும் நம் இராமாநுசர் ''நலம்தரும் சொல்'' என்ற திருமங்கை மன்னரின் வாக்கின்படி, உலகுக்குத் தெளிவுற உணர்த்தியருளினார்.

எத்தகைய அறிஞர்க்கும் எட்டாத தத்துவ ஞானத்தை, இறைவனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற நம்மாழ்வாரின் அருளிச் செயலில் கண்டு தெளிந்து விருப்புடைய சாமானிய அறிவினருக்கும் கிட்டும்படி செய்திட்டவர், எம்பெருமானார் என்னும் நம் இராமாநுசர்.

இழந்துவிட்ட இதய உணர்வுகளை இந்தியருக்கு மீட்டுத்தந்து, வறட்டுக் காசாயத்துறவு நெறி வேதாந்தங்களை, இம்மையில் வனப்பு மிக்க வாழ்க்கை நெறிகளாக்கி, வாழ்வாங்கு வாழ வழிவகுத்ததோடு, மறுமையில் இறைவனோடு பரமசாம்யம் ஆகிய சமநிலைத் தன்மையினை, அடைதலாகிய முக்தி நிலையினை நன்கு வலியுறுத்தினார், நம் காரேய் கருணை இராமாநுசர்!

அதாவது அநாதியான வேத ஆதாரங்களில் இருந்தே பெறப்படுவதான, அரிய வேதாந்த விழுப்பொருளை, அதன் முழுவடிவில், மிருதிகளோடு, இதிகாச புராணங்களின் இறுதிக் கருத்தாயும், ஆழ்வார்களின் திவ்வியப்பிரபந்தப் பொருளாயும் எடுத்துக்கூறி, வைதிக நெறியிலும், வைணவ மரபிலும், இக வாழ்க்கையில் இறையின்பத்தை நிறையின்பமாகப் பொருத்தமுற இணைத்து, வையகத்தே வைகுந்தப் பெருவாழ்வு வாழ்ந்து காட்டியவர், அனைத்துலகும் வாழப் பெரும்பூதூர் வந்த பெருந்தகே வள்ளலாகிய நம் இராமாநுசர் ''சொல்லார் தமிழ் ஒரு மூன்றும் சுருதிகள் நான்கும், எல்லையில்லா அறநெறி யாவும் தெரிந்தவன், எண்ணருஞ்சீர் நல்லார் பரவும் இராமாநுசன்'' என்னும் நம் எம்பெருமானாரின், வாழ்க்கை வரலாறு சாதனைகள் பல நிறைந்தது. இன்றைய கொள்கைகள் பலவற்றை, நம் இராமாநுசர் அன்றே நிறைவேற்றிச் செயற்படுத்தி அருளினார்.

இனிய ஆத்ம குணங்களின் அரிய சித்திரங்கள், அண்ணல் இராமாநுசரின் உயரிய உண்மைச் சரித்திர நிகழ்ச்சிகளாக அமைந்தன. நூற்றிருபது ஆண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்த அப்பெருமகனாரின் வரலாற்றில், பிற்காலத்துக் காந்தியடிகளின் சிறந்த முற்போக்குக் கொள்கைகள் பலப்பல செயற்படுத்தப்பெற்றன. பிற்காலத்துக் காந்தியடிகளின் அரிசன இயக்கத்துக்கு இராமாநுசர் ஒரு முன்னோடியாகத்திகழ்ந்தார். தீண்டாதவரையெல்லாம் திருக்குலத்தார் ஆக்கினார்; தொண்டனூர் ஏரியைப் பொறியியல் நுணுக்கம் வெளிப்பட அமைத்து அருளியற் சமுதாயப் பணி புரிந்தருளினார். சாதி இன மொழி வேற்றுமையைக் கடந்த பாரதநாட்டின் ஒருமைப்பாட்டைப் பக்தி இயக்கத்தால் வளர்த்தார். ஊர் ஒற்றுமையைக் கோயில்கள்மூலம் உண்டாக்கினார். கோயில்களில் வேலைவாய்ப்பு, மருத்துவ வசதிகள் உட்பட, மக்கள் சமுதாய நலப் பணிகள் யாவும் நிகழ்வதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தார். மக்களின் உடலுக்கும் உயிருக்கும், அதாவது இம்மைக்கும் மறுமைக்கும் உரிய எல்லாவற்றையும் கோயிலோடு இணைத்துப் பிணைத்து வைத்தார். கலைச்சிறப்பும், கருணைப்பெருக்கும், தத்துவஞானத் தொண்டும், உயிர்க்குலத்திடை அன்பும் பிணைப்பும் ஏற்பட, எம்பெருமானார் ஆகிய இராமாநுசர் பலப்பல வழிவகைகள் வகுத்து, ஒழுங்குமுறைகளை ஏற்படுத்தித் தந்தார். இராமாநுசரின் அருமை பெருமைகளுக்கு ஓர் அளவேயில்லை. நாம் அனைவரும் அப்பெருந்தகையாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஒழுகி, இம்மை மறுமை நலங்கள் யாவும் எய்தி இனிது வாழ முயலுவோமாக!